E-mail : omsakthieditorial@gmail.com

ஓம் சக்தி

அக்டோபர் 2019
விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



இராஜ அலங்காரத்தில் முருகன்

கு ம ர கு ரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



"கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்."

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்



குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

KCLAS KUMARAGURU

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக 'ஒழுக்கமே வாழ்வு' எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்டையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

KCT BUSINESS SCHOOL

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

KUMARAGURU institute of agriculture

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube Innovate • Incubate • Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான 'போர்ஜ்' வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்
0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in



ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி...!



'பத்மபூஷண்' அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்

சுவடுகள் மறையாதஉம் பாதையில்
நம்பிக்கையோடு நடக்கிறோம்!

சுரங்கம்



டாக்டர் நா. மகாலிங்கம்

ஜனநாயகத்தின் இதயப்பகுதி தேர்தல் மூலம் ஆட்சி அமைப்பதுதான். பல நாடுகளில் தேர்தல்கள் பலவிதமாக நடக்கின்றன. காந்திஜி கண்டு பிடித்த தேர்தல் முறை பின்பற்றுவதற்கு எளிமையானது. பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எதிர்பார்த்தபடி செயல்படவில்லையென்றால், மக்களே அவரைத் திருப்பி அழைத்துக் கொள்ளும் உரிமையையும் தருகிறது.

இதனைப்பற்றி அருட்செல்வர் 22 ஆண்டுகளுக்கு முன்பு (1997–இல்) எழுதிய கட்டுரை இன்றைக்கும் சிந்திக்கத்தக்கதாக உள்ளதை வாசகர்கள் உணரலாம்.

– இ.ஆர்.

இன்றைய தேவை காந்திஜியின் சிக்கனத் தேர்தல் முறை

மத்திய ஆட்சி பலமான ஆட்சியாக இருந்தால்தான், மாநில ஆட்சிகளின் தவறுகளைத் தட்டிக் கேட்க முடியும். அந்நிய நாட்டு மூலதனம் அச்சமில்லாத முதலீடுகளாக நமக்குக் கிடைக்கும். மாநிலத்திற்கு மாநிலம் உண்டாகும் நதிநீர்ப் பிரச்சனை, மாநில எல்லைப் பிரச்சனை மற்றும் மதுவிலக்கு முதலியவற்றிற்கான மானியப் பிரச்சனை, இன்னும் இது போன்றவற்றைப் பலமான மத்திய ஆட்சிதான் சுமுகமாகத் தீர்க்க முடியும்.

மத்திய ஆட்சி பலமற்ற ஆட்சியாக இருக்குமானால், அடிக்கடி நம்பிக்கை வாக்கெடுப்பு என்ற அக்கினிப் பரீட்சையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உண்டாகும். ஆட்சியைக் கைப்பற்றிய கட்சி அதற்காகக் குறுக்கு வழிகளில் மாட்டுச் சந்தை வியாபாரத்தில் மாடுகளை வாங்குவதைப் போல உறுப்பினர்களையும் விலை பேசி வாங்கும் நெருக்கடிக்கு ஆளாகும்.

ஆட்சி முறையைப் பொறுத்தவரை உலகத்தில் பல்வேறு விதமான வடிவங்கள் உள்ளன.

அமெரிக்காவில் உள்ள ஆட்சி முறை ஜனாதிபதியே நேரடியாக அமெரிக்காவை ஆளுகிற ஆட்சிமுறை. அமெரிக்கா என்பது 50 மாநிலங்களைக் கொண்ட நாடு. நமது மாநிலத்தில் முதலமைச்சர் ஆளுவதைப் போல, அமெரிக்க மாநிலங்களை ஆளுநர்களே ஆட்சி செய்கிறார்கள். ஆனால், மத்திய ஆட்சி ஜனாதிபதியின் முழுப் பொறுப்பில் உள்ளது.

அமெரிக்க தேசத்தை ஜனநாயக தேசங்களின் முதல் தேசமாக வர்ணிக்கிறார்கள்.

இதேபோல, பிரிட்டனில் மன்னர் ஆட்சி முறை பழைய மரபின் அடையாளமாக இருந்தாலும், அங்கே நம் நாட்டில் உள்ள மத்திய அமைச்சரவையைப் போல ஓர் அமைச்சரவை ஆட்சி செய்கிறது. அவர்களுடைய அரசியல் சட்டம், பண்டைய மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிற அரசியல் சட்டம். இதனை எழுதப்படாத அரசியல் சட்டம் என்றே வர்ணிப்பார்கள்.

பிரிட்டன் ஆட்சி முறையை ஜனநாயகத்தின் தாய் என்று அரசியல் நிபுணர்கள் வர்ணிப்பார்கள்.

இவ்வாறு உலகத்தின் பல்வேறு நாடுகளில் ஜனநாயக ஆட்சி முறைகள் பல்வேறு வடிவங்களில் இருந்து வருகின்றன. நமது ஆட்சி முறைக்கான பெரும்பகுதி அம்சங்களை 1935–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்திலிருந்தே எடுத்துள்ளோம் என்பதை அறிஞர் பெருமக்கள் அறிவார்கள். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் தான் நமது அரசியல் சட்டத்தையே நாம் உருவாக்கினோம்.

நமது இந்திய ஜனநாயகத்தில் பல கட்சிகள் நம் நாட்டில் தோன்றியுள்ளன. இதனை நமது ஜனநாயகத்தின் பலம் என்று குறிப்பிடுபவர்களும் உண்டு. பலவீனம் என்று கூறுபவர்களும் உண்டு.

ஏனெனில், ஜனநாயகத்திற்குக் கலங்கரை விளக்காக உள்ள அமெரிக்காவிலோ அல்லது பிரிட்டனிலோ அதிகபட்சம் இரண்டு – மூன்று கட்சிகள்தான் உள்ளன. ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என்ற இரு கட்சி முறை அங்குக் கடந்த பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது.

இதேபோலத்தான் அமெரிக்காவிலும் நாம் காண்கிறோம். அங்கு ஜனநாயகக்கட்சி – குடியரசுக் கட்சி என்ற இரண்டு கட்சிகள் மாறி மாறி ஆட்சி அமைக்கின்றன. அதன்மூலம் மக்கள் தங்கள் எழுச்சிகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்திக் கொள்வதற்கு ஜனநாயகம் வாய்ப்புத் தருகிறது.

இவ்வாறு, இரு கட்சி முறைதான் ஜனநாயகத்திற்கு அழகூட்டக்கூடியதும், அர்த்தம் தரக் கூடியதுமாக இருக்கிறது.

இதன் காரணமாகத்தான் அந்தத் தேசங்களில் இராணுவ ஆட்சியைப் பற்றியோ, இராஜ பரம்பரையின் ஆட்சியைப் பற்றியோ யாரும் எண்ணுவதில்லை. ஆனால், நம் நாட்டிலோ இருபெரும் அரசியல் கட்சிகள் என்கிற அளவுக்கு இன்னும் நமது அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை குறுகவில்லை. மாறாக, ஏறக்குறைய இருபது கட்சிகள் இங்கே செயல்படுவதைக் காண்கிறோம்.

இவற்றால் விரக்தியடைந்த நம் மக்கள் அவ்வப்போது இராணுவ ஆட்சியை எண்ணுவதும் உண்டு. பிரிட்டிஷ் ஆட்சியின் நிர்வாகத்தை நினைவு கூர்வதும் உண்டு.

ஒரு சில மக்களிடம் அவ்வாறு வெளிப்படும் அந்த உணர்ச்சி எதனுடைய எதிரொலி என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஓர் ஏமாற்றத்தின் எதிரொலிதான் அது.

200 ஆண்டுக் காலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி – அதற்கு முன்பு மொகலாய ஆட்சி. அதேபோல 550–க்கும் மேற்பட்ட சுதேசி சமஸ்தான ஆட்சி, ஜமீன்தார்கள் – ஜாகிர்தார்களுடைய ஆட்சி. இத்தனை ஆட்சிகளையும் நாம் இந்த மண்ணில் அனுபவித்துள்ளோம். மக்களை ஆதிக்கம் செலுத்திய இந்த ஆட்சிகள் 1947 வரை தொடர்ந்து நம் பாரத மண்ணில் இருந்து வந்தன.

நிலையான ஆட்சியை மத்தியில் நாம் எப்படி உருவாக்கி இருக்கிறோம் என்பதை எண்ணிப் பாருங்கள். ஆகவே, எப்போது வேண்டுமானாலும் நாட்டு மக்கள் எதிர்பார்க்க வேண்டிய – நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பாத அந்தத் தேர்தல் வரலாம்.

வியாதியைக் குணப்படுத்த முடியாது என்பது நன்றாக விளங்கிவிட்டால், அதைச் சகித்துக் கொள்ளக்கூடிய சக்தியையாவது நாம் பெற்றாக வேண்டும். இப்போதைய நிலைமை அதுதான்.


இந்தியப் பாராளுமன்றம்


ஆனால், தேர்தலைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. எத்தனை முறை தேர்தல் நடந்தாலும் அதைக் கண்டு கலங்க வேண்டியதில்லை. சுலபமாக அதை நடத்தலாம். காந்தியடிகள் அதைக் காண்பித்திருக்கிறார்.

காந்தியடிகளுடைய கல்விக் கொள்கை, அவருடைய பரவல் முறை, கிராம அபிவிருத்தி, அவருடைய சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, இப்படிப் பல உள்ளன. அவற்றில் காந்திஜியின் சிக்கனமான தேர்தல் முறையும் ஒன்று.

எல்லாவற்றிலும் ஊதாரித்தனத்தையே கடைப்பிடித்து வரும் நமது ஆட்சியாளர்கள் இந்தச் சிக்கனத் தேர்தலை முழுமையாக எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ, வாசகர்களாகிய நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

காந்தியடிகள் மக்கள் பிரதிநிதியைப் பற்றி

மதிப்பீடு செய்தபோது தேர்ந்தெடுக்கும் மக்களுக்கு அப்பிரதிநிதி உண்மையான சேவை செய்யத் தவறுவாரேயானால், பதவியிலிருந்து அவரைத் திருப்பி அழைத்துக் கொள்ளும் உரிமையும் மக்களிடம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தவர்.



காந்திஜி

உதாரணத்திற்கு, ஓர் எம்.எல்.ஏ. தொகுதியில் ஏறக்குறைய ஒரு லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். தற்போதுள்ள தேர்தல் முறைப்படி இந்த ஒரு லட்சம் வாக்காளர்களும் நேரிடையாக வாக்களித்துத் தங்கள் தொகுதியின் எம்.எல்.ஏ.வைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

அவ்வாறு திருப்பி அழைக்கப்பட்டால், மறுபடியும் மக்கள் இன்னொருவரைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடத்த வேண்டும் அல்லவா? இதனைக் கருத்தில் கொண்டுதான் அவர் ஒரு சிக்கனத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தினார்.

மக்களே நேரடியாக எம்.எல்.ஏ., எம்.பி., நகரசபைத் தலைவர் முதலியோரைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, மக்கள் தங்களின் பிரதிநிதிகளை மட்டும் தங்கள் தொகுதியில் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களை 'எலக்ட்டார்ஸ்' (Electors) என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

அமெரிக்காவில் இதுதான் நடைமுறையில் உள்ளது. அமெரிக்காவில் ஒரு கட்சியில் இந்தப் பிரதிநிதிகள் எத்தனை பேர்களை வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கிறார்களோ, அதைக் கணக்கில் கொண்டு எந்தக் கட்சியில் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவார் என்று முன்கூட்டியே கூறிவிட முடியும்.

இதேபோல, நம் நாட்டிலும் வாக்காளர்கள் முதலில் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தப் பிரதிநிதிகள்தான் எம்.எல்.ஏ., எம்.பி., நகரசபைத் தலைவர், பஞ்சாயத்துத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வாக்காளர்களே இப்போது உள்ளது போல நேரடியாக எம்.எல்.ஏ. முதலியவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது.

100 வாக்காளர்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற விகிதத்தில் ஒரு கிராமத்தில் அல்லது நகரத்தில் பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுக்கலாம். வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஓர் ஊரில் அமையும். இவர்களுடைய பதவிக் காலத்தையும் 5 ஆண்டுகள் என்றே அமைக்கலாம். இவர்களின் பணி எம்.எல்.ஏ., எம்.பி., முனிசிபல் சேர்மன், பஞ்சாயத்து யூனியன் தலைவர், பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதுதான்.

ஆட்சி கலைக்கப்பட்டாலோ அல்லது கவிழ்ந்தாலோ மீண்டும் இந்த ஒரு லட்சம் பேரும் தேர்தலில் வாக்களித்துத் தங்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும். இந்த முறை அதிகச் செலவும் சிரமமும் உள்ள தேர்தல் முறையாகும்.

காந்திஜியின் சிக்கனத் தேர்தல் இதற்கு ஒரு மாற்றாக உள்ளது. இந்த ஒரு லட்சம் பேர்களும் நேரிடையாக எம்.எல்.ஏ.வைத் தேர்ந்தெடுக்காமல்,

அமெரிக்க ஜனாதிபதி வெள்ளை மாளிகை



100 வாக்காளர்களுக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தால் போதும். ஒரு லட்சம் வாக்காளர்களுக்கு 1,000 பிரதிநிதிகள் இருப்பார்கள். இந்த 1,000 பேரை நகரத்திலுள்ள 20 உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு 50 பேர் வீதம் கூடுமாறு செய்து, அரை மணி நேரத்திற்குள் ஓர் எம்.எல்.ஏ.வைத் தேர்ந்தெடுத்துவிடலாம்.

இவ்வாறு அதிக எண்ணிக்கையுள்ள வாக்காளர்களைப் பிரதிநிதிகளாகச் சுருக்கி, அந்தப் பிரதிநிதிகளின் மூலம் தமிழ் நாட்டிற்குரிய 234 எம்.எல்.ஏ.–க்களையும், 39 எம்.பி.–க்களையும், 104 நகரசபைத் தலைவர்களையும், 400 பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களையும், உறுப்பினர்களையும் மிகமிகக் குறைந்த செலவிலும் முயற்சியிலும் ஒரே நாளில் இலகுவாகத் தேர்ந்தெடுத்து விடலாம்.

கட்சி சார்பாகப் போட்டி போடும் தொகுதி வேட்பாளர்கள், இந்தப் பிரதிநிதிகள் கூட்டத்தில்



மட்டும் தங்களை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டு மென்று சொன்னால் போதும்.

தேர்தல் அறிவிக்கப்பட்டு ஒரு வார காலத் திற்குள் தேர்தலை முடித்து விடலாம். ஏனெனில், வேட்பாளர்களுக்கு அதிக வேலை இருக்காது. அதிகபட்சம் 1000 பிரதிநிதிகளை ஒரே இடத்தில் கூடுமாறு செய்து, அனைத்துக் கட்சி வேட்பாளர் களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி விடலாம். தனித்தனியாகப் பெரிய பெரிய கூட் டங்கள் ஒவ்வொரு கட்சிக்கும் தேவையில்லை.

இதுதான் காந்தியடிகள் கண்ட சிக்கனத் தேர்தல் முறை. இந்த முறைக்கு மாறுவதற்கு நமக்கு விருப்பமில்லையென்றால், இன்னொரு வழியில் ஆட்சியை நீடிக்கச் செய்வது பற்றிச் சிந்திக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து ஆண்டுக் காலத் திற்குள் மத்திய அரசு கவிழ்ந்தாலோ அல்லது கவிழ்க்கப்பட்டாலோ மீதியுள்ள காலத்திற்குப் புதிதாக ஒரு பொதுத் தேர்தலை நடத்தாமல், குடியரசுத் தலைவரே தேசத்திலுள்ள நிபுணர்களை அழைத்து, ஒரு தேசிய அமைச்சரவையை அமைத்து மத்திய ஆட்சியை மேற்கொள்ளலாம். அதற்குரிய வகையில் அரசியல் சட்டத்திலும் திருத்தம் செய்து கொள்ளலாம்.

காந்தியடிகள் காட்டிய சிக்கனத் தேர்தல் முறை, குடியரசுத் தலைவர் ஆட்சி செய்யும் தேசிய நிபுணர்களின் அரசு – இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொண்டு, தேர்தல் முறையில் இப்புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தால்தான், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி கவிழ்ந்தாலும், கவிழ்க்கப்பட்டாலும் நமது பல கட்சி ஜனநாயகத் தில் நிலையான ஆட்சி 5 ஆண்டுகளுக்கு நீடிக்க வாய்ப்பு ஏற்படும்.

பிரான்ஸ் நட்டில் பல கட்சிகள் செயல்பட்ட தால், தேர்தல் மூலம் ஒரு கட்சி ஆட்சி முறை அங்கு அமைய முடியாமல் போய்விட்டது. அதன் காரணமாக பிரெஞ்சு மக்கள் தங்கள் தேர்தல் முறையைக் குறைபாடு உடையதாகக் கருதத் தொடங்கினர்.

அதனால் 1945–இலும், அதன் பிறகு 1951, 1958, 1986, 1988–இலும் தேர்தல் முறையை மாற்றி மாற்றி அமைத்தனர். இப்போதுள்ள தேர்தல் முறை யையும் அங்கு மாற்றினால் ஆச்சரியமில்லை.

அவர்களுடைய கோபம், இந்தத் தேர்தல் முறைதான் பல கட்சிகள் தோன்றுவதற்குக் கார ணமாக இருப்பதாகக் கருதுகின்றனர். இதனைச் சரியான கருத்தாக அறிஞர்கள் வரவேற்க வில்லை. ஒவ்வொரு கட்சியின் தோற்றத்திற்கும் ஒரு சமூகத் தேவை இருப்பதாகக் கருதப்படு கிறது.

ஆகவே, கட்சிகளின் பிறப்புக்கும், தேர்தல் முறைக்கும் சம்பந்தம் இல்லை என்கிறார்கள். இருந்தபோதிலும் தேர்தல் முறையை மாற்றி யமைக்கும் போக்கு பிரான்சில் தொடர்ந்து காணப் படுகிறது.

ஜெர்மனியும் தனது தேர்தல் முறையை மாற்றி யமைத்துள்ளது. அதன் காரணமாகச் சின்னஞ் சிறிய புதிய கட்சிக்குக்கூடக் கூட்டணி ஆட்சி யில் அதற்குரிய பங்கு கிடைக்கிறது. அனைத்துக் கட்சிகளுமே அங்கு ஆளும் கட்சிகளாகியுள்ளன.

இத்தாலியில் 1960–களிலும், 1970–களிலும் ஏற்பட்ட கொந்தளிப்புகள் இத்தாலிய அரசியலைக் கடத்தல் பேர்வழிகள் கைகளில் ஒப்படைக்கு மளவிற்குப் போய்விட்டது. 1980–களில் இத்தாலி "ஐரோப்பாவின் நோயாளி" என்றே குறிப்பிடப் பட்டது.

அதன் பிறகு 1993–இல் இத்தாலியும் தனது தேர்தல் முறையில் மாற்றங்களைப் புகுத்தி விட்டது.

தேர்தல் முறையில் காந்திஜி காட்டிய நெறிகளைக் கடைப்பிடித்தால், அரசியல் மேலும் மேலும் அசுத்தம் அடையாமல் மக்களுக்கு நன்மை கள் செய்யும் சாதனமாகும் வாய்ப்புகள் பெருகும்.

ஆப்ரகாம் லிங்கன் கூறியது போல, மக்களை மக்களே ஆளும் மக்களுக்கான ஆட்சி மலரும். இலவசங்கள் எல்லாமே இழிவானதாகிவிடும். உழைப்பு மட்டுமே உன்னதமடையும். ●



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 3

மனிதனுக்கு அடிப்படைத் தேவை உணவு. பயிற்றிப் பயிற்றிப் பல உரைப்பதெல்லாம் வயிற்றுப் பெருமான் பொருட்டேயாகும். பசி வந்தால் பத்தும் பறந்து போகும். மனிதர்களில் பல வகை உண்டு. சிலர் பசிக்குச் சாப்பிடுவார்கள். சிலர் ருசிக்குச் சாப்பிடுவார்கள். சிலர் குறைவாகச் சாப்பிடுவார்கள். சிலர் நிறையச் சாப்பிடுவார்கள். வாழ்வதற்காகச் சாப்பிடுபவர்களும் உண்டு, சாப்பிடுவதற்காகவே வாழ்பவர்களும் உண்டு.

இப்படி நிறையச் சாப்பிடுபவர்களைச் 'சாப்பாட்டு ராமன்' என்று கேலி செய்கிறோம். இது சரியா? ராமன் என்ன சாப்பாட்டு ராமனா? காட்டில் திரிந்து கனியும், கிழங்கும், தினையும், தேனும் உண்டு பதினான்கு ஆண்டுகள் தவ வாழ்க்கை வாழ்ந்தவனைச் சாப்பாட்டு ராமன் என்று சொல்லலாமா?

மற்றவர்கள் போற்ற மணிமுடியைச் சூடாமல் சிற்றன்னை தந்த திருமுடியைச் சூடியவனா சாப்பாட்டு ராமன்? வேண்டுமானால், 'சாப்பாட்டுக் கிருஷ்ணன்' என்று சொல்லுங்கள். அவன் மாயக்கண்ணன். வெண்ணெயுண்டவன், மண்ணையுண்டவன். விதுரன் வீட்டில் விருந்தும் உண்டவன். அவனை மறந்துவிட்டுச் சாப்பாட்டு ராமன் என்பது சரியா?

நம்முடைய முன்னோர்கள் சிறந்த அறிவாளிகள். நாம் பட்டதாரிகள். அவர்கள் அறிவாளிகள். அப்படிப்பட்டவர்கள் சொன்னால் அதற்குச் சரியான காரணம் இருக்க வேண்டுமல்லவா? சிந்தித்துப் பார்த்தேன். திருவருளால் விடை கிடைத்தது.

இலங்கையில் வீடணனுக்குத் திருமுடி சூட்டியபிறகு, பதினான்காண்டுகள் முடியப் போவதை நினைத்து அவசரமாகப் புறப்பட்ட இராமபிரான், நேராக அயோத்திக்குச் செல்லவில்லை. அலகாபாத்திலுள்ள பரத்வாஜ முனிவர் அன்போடு அழைத்ததால், அவருடைய ஆசிரமத்தில் தங்கிவிட்டான்.

அங்கே பரத்வாஜர் எல்லோருக்கும் விருந்து வைத்தார். இராமன் கனியும், கிழங்கும் உண்டான். இராமசேனை எழுபது வெள்ளம் குரங்குகளில் அனுமன் மட்டும் விருந்துண்ண முடியவில்லை. ஏன்? விருந்தில் உட்கார்ந்த அனுமனை இராமன் அழைத்தான்.

"உடனே அயோத்திக்குப் போ. பதினான்கு ஆண்டுகள் முடிந்ததும் உடனே பரதன் நெருப்பில் விழுந்துவிடுவான். அவனைக் காப்பாற்று. அடையாளத்திற்கு இந்தா என் மோதிரம்" என்று கணையாழியைக் கொடுத்து அனுமனை அயோத்திக்கு அனுப்பி

தொடர்ச்சி 15-ம் பக்கம்

கட்டுரை

பழகிப் பார்த்ததில் இவர்கள்... 10

பெரும்புலவர் பா. நமசிவாயம்



பேராசிரியர்
நமசிவாயம்

திரை உலகில் கவிஞர் என்றால் அது கண்ணதாசனைக் குறிக்கும். புலவர் என்றால் அது புலமைப்பித்தன் அவர்களைக் குறிக்கும். பேச்சாளர்கள் உலகில் பெரும்புலவர் என்றால் அது பேராசிரியர் நமசிவாயம் அவர்களைக் குறிக்கும்.

நாவன்மை, நகைச்சுவைக் கூர்மை, நிறையன்பு முதலிய நற்பண்புகளின் நிறைகுடமாய் வாழ்ந்தவர் அவர். வீடு தேடி வரும் யாரையும் விருந்தோம்பல் செய்வதிலும் ஈடு இணையற்றவர். தன்னிடம் பயின்ற மாணவர்களைத் தன் சொந்தப் பிள்ளைகளாகவே கருதிப் பேரன்பு காட்டி வளர்த்தவர்.

கலைஞர் முதல்வராக இருந்தபோது, நடந்த கூட்டத்தில் இவர் பேசும்போது, "முதல்வர் அவர்களே! உங்கள் அமைச்சரவை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஏனென்றால் இந்த அமைச்சரவையில்தான் என் ஆசிரியரும் அமைச்சராக இருக்கிறார். என் மாணவரும் அமைச்சராக இருக்கிறார்" என்று குறிப்பிட்டார் பேராசிரியர் நமசிவாயம்.

ஆம். நமசிவாயம் அவர்களுக்குப் பேராசிரியர் அன்பழகன் ஆசிரியர். மேனாள் அமைச்சர் திரு. பொங்கலூர் பழனிசாமி அவருடைய மாணவர். தன் மாணவப் பருவத்தில் நமசிவாயம் அவர்களின் வீட்டிலேயே இருந்து கல்வி கற்றதை அவர் இன்றளவும் நன்றியுடன் நினைவு கூர்வதுண்டு.

பேராசிரியர் நமச்சிவாயம் சமயோசித வெளிப்பாட்டிற்குப் பெயர் பெற்றவர். அவர் தலைமையில் நடந்த பட்டிமன்றத்தில் ஒருமுறை ஒரு பேச்சாளர், "நடுவர் அவர்களே, ஆண்டனி கிளியோபாட்ராவைப் பார்ப்பதற்கு 17 முறை சவரம் செய்து கொண்டு போனான்" என்றார்.



அடுத்த விநாடியே குறுக்கிட்ட பேராசிரியர் நமசிவாயம், "அப்படி என்றால் ஆண்டனி கிளியோபாட்ராவுக்காகத் தன் ரோம சாம்ராஜ்யத்தையே அழித்துக் கொண்டானா?" என்று கேட்டார்.

யாரேனும் அவரை மேடையில் விமர்சித்துப் பேசினால் பணிவோடு பதில் சொல்வார். ஆனால் அந்தப் பணிவுக்குள்ளிருக்கும் கிண்டலை அவ்வளவு எளிதில் எதிராளி புரிந்துகொள்ள மாட்டார்.

ஒருமுறை அவரைவிட மூத்தவர் ஒருவருடன் மேடையில் பேசினார். அந்த மூத்தவர் கல்லூரிக் காலத்திலும் இவருக்கு

மரபின் மைந்தன் முத்தையா


மூத்தவர். ஆனால் பெரிய அறிஞர் என்று சொல்ல முடியாது. துரதிஷ்டவசமாக அவருக்குத் தன்னைப் பற்றி அப்படி ஓர் எண்ணம் இருந்தது. எனவே, அந்த மூத்தவர் பேசும்போது "பெரிய புராணம் என்றால் நான்தான். நமசிவாயம் எல்லாம் அப்புறம்தான்" என்றார்.

இத்தனைக்கும் அந்த மூத்தவருக்குத் தரப் பட்டது வாழ்த்துரை வழங்கும் வேலைதான். அன்று, நமசிவாயம் அவர்கள் பெரியபுராணம் பற்றிப் பேசுவதாக இருந்தது. நமசிவாயம் அவர்கள் பேசும்போது முன்னால் பேசியவரைப் பற்றிக் குறிப்பிட்டு "உண்மைதான். பெரிய புராணத்தை நாங்களெல்லாம் வெறுமனே எழுத் தெண்ணித்தான் படித்தோம். இவர்தான் எழுத்துக் கூட்டிப் படித்தார்" என்று சொல்ல, சம்பந்தப்பட்டவர் தனக்கான பாராட் டாக அதைக் கருதிப் புளகாங்கிதம் அடைந்தார்.



டாக்டர் கலைஞர்

சொல்லும் செய்தி என்னவாக இருந்தாலும் சொல்லும் முறைதான் வித்தியாசத்தை ஏற்படுத்து கிறது என்பதை நுட்பமாக உணர்ந்தவர் பேராசிரியர்.



சாலமன் பாப்பையா

அவர், கல்லூரியில் பணி புரிந்தபோது கொஞ்ச காலம் விடுதியில் காப்பாளராக இருந் தார். மாணவர்கள் சுவர் ஏறிக் குதித்து இரவுக் காட்சிக்குத் திரையரங்கு களுக்குப் போகிறார்கள் என்று தெரிந்து நள்ளிரவில் கண்காணிக்க ஒருமுறை வந்தார். படக்காட்சி முடிந்து ஒரு மாணவன் சுவர் ஏறி உள்ளே குதித்தான்.



சத்தியசீலன்

அவன் எதிரில் போய் நின்று, "எங்கே போய் வருகிறாய்..." என்றார். அந்த மாணவனும், "ஐயா யூரின் பாஸ் பண்ணிவிட்டு வருகிறேன்" என்று பதில் சொன்னான். அடுத்த வினாடி பேராசிரியர் சொன்னார்.

"அதையாவது பாஸ் பண்ணு."

அமைப்பாளர்களுக்கு எந்தச் சிரமமும் தராத எளிவந்த தன்மை பேராசிரியர் நமசிவாயம் அவர் களின் பெருமைக்குரிய பண்பு களில் ஒன்று. இன்று பட்டிமண்டப முன்னோடிகளுக்கு எல்லாம் முன்னத்தி ஏர் அவர்தான். அவரை நடுவராகக் கொண்டு பட்டி மண்டபங்களிலும், வழக்காடு மன்றங்களிலும் வாதிட்டு வந்தவர் நாவுக்கரசர் சத்தியசீலன், தமிழறிஞர் சாலமன் பாப்பையா போன்றவர்கள்.

எல்லோருடைய வளர்ச்சியையும் முகம் மலர்ந்த சிரிப்போடும், மனம் நிறைந்த வாழ்த்துகளுடனும் பார்த்துப் பெருமிதம் அடைந்தவர். அவருடைய மின்னல் வீச்சு போன்ற உடனடி எதிர்வினைகள் சிரிப்பையும், சிந்தனையையும் ஒரே நேரத்தில் தூண்டுபவை.

அந்தக் காலங்களில் மாப்பிள்ளை முன்பு மாமியார் வராததற்கான காரணத்தைப் பட்டிமன்ற மேடை யொன்றில் ஒருவர் சொன்னார்.

"மகள் பெரும்பாலும் அன்னை யின் சாயலைக் கொண்டிருப் பாள். அன்னையோ வயது முதிர்ந்த நிலையில் இருப்பாள். அவள் மாப்பிள்ளை முன்பு வந்தால், தன் மனைவியும் வயதானால் இப்படித் தானே இருப்பாள் என்னும் எண்ணத்தை மாப்பிள்ளை கொண்டு விடக்கூடும். இந்தக் காரணத்தால் மாமியார் மாப்பிள்ளை முன்வருவ

தில்லை'' என்றார் அந்தப் பேச்சாளர்.

உடனே பேராசிரியர் நமசிவாயம் கேட்டார். "அது சரி! மாப்பிள்ளை அவனுடைய தந்தையின் ஜாடையில்தானே இருப்பான். மருமகளை மட்டும் மாமனாருக்குக் காபி தரச் சொல்கிறீர்களே. அவரைப் பார்க்கும்போது, தன் கணவருக்கு வயதானால் இப்படித்தானே இருப்பார் என்று மருமகளுக்கு மட்டும் தோன்றாதோ?'' என்று கேட்டார்.

இந்தக் கேள்வி சபையில் சிரிப்பையும் ஏற்படுத்தியது. சிந்தனையையும் ஏற்படுத்தியது.

இளைய வயது முதலே பெரியவர்கள் பலராலும் பெரிதும் விரும்பப்பட்ட பெருந்தகையாக அவர் வளர்ந்து வந்திருக்கிறார். பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரியில் முதல்வராக இருந்த முனைவர் நமசிவாயம், பேராசிரியர் நமசிவாயம் இருவரும் பிள்ளைப் பருவத்திலிருந்தே மிகவும் நெருங்கிய நண்பர்கள்.

முனைவர் நமசிவாயத்தின் தந்தை இந்த இரண்டு நமச்சிவாயங்களையும் ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார். முதலில் தன் மகன் நமசிவாயத்தை அறிமுகம் செய்தார். “He is Namasivayam. My son.” பிறகு பேராசிரியர் நமசிவாயத்தைப் பார்த்து “He is also Namasivayam. More than my son” என்றாராம். (இவன் நமசிவாயம் என் மகன். இவனும் நமசிவாயம். என் மகனுக்கு மேலானவன்).

இந்தச் சம்பவத்தைச் சொல்லிச் சொல்லி நெகிழ்ந்து போவார் பேராசிரியர்.

பேராசிரியர் நமசிவாயம் மறைவிற்குச் சில ஆண்டுகள் முன்னதாக திருச்சியில் அவருக்கு 'திருச்சி நகைச்சுவை மன்றம்' சார்பில் பாராட்டு விழா ஒன்று நடந்தது. அவர் உடல் நலிவுற்றுச் சிறுநீரகப் பழுது காரணமாக வீட்டிலேயே ஹோம் டயாலிசிஸ் முறையில் சிகிச்சை மேற்கொண்டிருந்த நேரம் அது. அவருடைய மனைவி அந்தச் சிகிச்சையைக் கற்றுக் கொண்டு முறையாகச் செய்துவந்தார்.

மேடையில் பொழியப்பட்ட பாராட்டு மழையில் நனைந்த பேராசிரியர் தன் மனைவியைக் காட்டி, "இன்று நான் நன்றாக இருக்கிறேன் என்றால் இவர்தான் காரணம்" என்றதும் அவை உணர்ச்சி வயப்பட்டுக் கரவொலி செய்தது. அடுத்து தன் மனைவி யார் என்பதையும் அறிவித்தார். "குற்றாலக் குறவஞ்சி பாடிய திரிகூட ராசப்ப கவிராயரின் கொள்ளுப்பேத்திதான் என் மனைவி" என்றதும் அவை கூடுதலாக உணர்ச்சிவயப்பட்டுக் கரவொலி செய்தது.

உணர்ச்சிவயப்பட்ட நிலையிலேயே அவையை விட்டுச் செல்லப் பேராசிரியருக்கு மனமில்லை. உடனே சொன்னார், "அதற்காக அவர்கிட்ட குற்றாலக் குறவஞ்சிப் பாட்டெல்லாம் கேட்காதீங்க. அதெல்லாம் ஒன்னும் தெரியாது" என்றதும் அவை கலகலப்பானது.

அவருடைய வாழ்வின் கடைசி நேரங்களிலும் இதுதான் நிகழ்ந்தது. சென்னையில் டாட்டா கன்சல்டன்ஸி நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அவருடைய பெயர்த்தி, அவரது நலக்குறைவு தீவிரம் அடைவதை அறிந்து வேலையை விட்டுவிட்டுத் தாத்தாவுக்குப் பணிவிடை செய்ய ஊருக்கு வந்தார்.

மிகவும் சோர்வாகப் படுத்திருந்த பேராசிரியர் நமசிவாயம், “வேலைக்குப் போகவில்லையா?" என்று கேட்டார். தன்னைப் பார்த்துக்கொள்ளப் பெயர்த்தி வந்திருப்பது அறிந்து அவர் கேட்ட கேள்வி : “டாட்டா கன்சல்டன்சிய விட்டுட்டுத் தாத்தா கன்சல்டன்ஸிக்காக வந்திருக்கியா? ”

அவர் மறைவுச் செய்தியறிந்து மதுரை அருகே உள்ள திருப்பத்தூரில் அவர் வீட்டு வாயிலில் தமிழகத்தின் தலையாய அறிஞர்களும், கல்வியாளர்களும் திரண்டனர். அவரது மகன் போல் வளர்ந்த மேனாள் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, பேராசிரியர் சாலமன் பாப்பையா, திருவாரூர் சண்முகவடிவேல், பேராசிரியர் ராஜாராம், எழுத்தாளர் நாஞ்சில்நாடன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இறுதி அஞ்சலி செலுத்த நாஞ்சில்நாடனுடன் பயணம் செய்தபோது, தன் இளமைப்பருவத்தில் மும்பையில் இருந்தபோது அங்கே சொற்பொழிவுக்கு வரும் பேராசிரியர் நமசிவாயம் எவ்வளவு கனிவாக நடந்து பழகுவார் என்பதையெல்லாம் நினைவுகூர்ந்து கொண்டே வந்தார்.

புலமையாலும் பண்பாலும் பேரன்பாலும் எல்லார் மனதிலும் தாக்கத்தை ஏற்படுத்திய பேராசிரியர் நமசிவாயம் அவர்கள் நினைவுகள் நிலைத்து வாழ்க!

கட்டுரை

சிறுதானியங்களின் பெரும் பயன்கள்

நாளிதழ்களிலும், வார இதழ்களிலும், மாத இதழ்களிலும், முகநூலிலும் சிறுதானிய உணவுகள் பற்றிய விவரங்களை அறிந்திருப்பவர் பலர். ஆனால், அவற்றை உணவாக உட்கொள்பவர்கள் சிலரே.

வருங்காலத்தில் சிறுதானியங்களே நமது முதன்மை உணவாகும் வாய்ப்புகளை ஏற்படுத்துவதாகக் கருதப்படுகிறது.

சிறுதானியங்களில் முதன்மையான இடத்தில் இருப்பவை வரகு, பனிவரகு, சாமை, குதிரைவாலி, தினை ஆகிய ஐந்து தானியங்கள். இரண்டாம் இடத்தில் இருப்பவை கம்பு, கேழ்வரகு, சோளம் முதலியவை. இவற்றைச் சமைத்து உண்ணும்போது அளப்பரிய சத்துக்கள் நம் உடலில் சேர்வதாகவும், நோய் எதிர்ப்புச் சக்தி உருவாவதாகவும், தலைவலி முதல் தைராய்டு வரை, இதய நோய் முதல் இளைப்பு நோய் வரை, தொற்று நோய்கள் முதல் புற்று நோய் வரை வராமல் தடுக்க உதவுகின்றன என்று உணவு வல்லுநர்கள் பரிந்துரைக்கின்றனர்.



நமது தாத்தாவும், பாட்டியும் வயதான காலத்திலும் ஆரோக்கியத்துடன் வாழ்வதைப் பார்த்திருப்போம். அதற்குக் காரணம், அவர்கள் இளமைக் காலத்தில் சாப்பிட்ட சிறுதானியங்களாலான பாரம்பரிய உணவு வகைகள்தான்.

சென்ற தலைமுறையில் நம் உணவு முறையிலும், உண்ணும் பொருட்களிலும் ஏற்பட்ட மாற்றம், நமது ஆரோக்கியத்தைக் கெடுத்து வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அடுத்த தலைமுறை ஆரோக்கியத்துடன் வாழ, பாரம்பரிய உணவு முறையை நாம் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டிருக்கிறது.

குறைவான மழைப்பொழிவு, குன்றிய மண் வளம், அதிகமான உரப்பயன்பாடு, வேளாண் இடுபொருள்களின் விலை ஏற்றம் முதலியவை,

கர்நாடகத்தைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் காதர்வாலி அவர்கள், சிறுதானியங்களின் பயன் பற்றியும், அவற்றை விளைவிப்பது பற்றியும் சிறப்பான கட்டுரைகள் எழுதியும், சொற்பொழிவு ஆற்றியும் சிறப்பான சேவை செய்து வருகிறார்.

அரிசியும், கோதுமையும் விளைய அதிகமான

நீர்ப்பாசனம் தேவைப்படுகிறது. ஆனால், சிறுதானியங்கள் வெறும் மழையிலேயே வளர்ந்து 65 நாட்களுக்குள் அறுவடை செய்யப்படும் என்பதால், விவசாயிகள் புன்செய் நிலப் பயிர்களான சிறு தானியங்களைப் பயிரிட்டுப் பயனடையலாம். அரிசி, கோதுமையைவிட அதிக அளவில் நார்ச் சத்தும், சத்துக்களும் மிகுந்தவை சிறுதானியங் கள்.

"கருங்கால் வரகே
இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே
பொறிகிளர் அவரையொடு
இந்நான் கல்லது உணாவும் இல்லை"

– புறநானூறு.


'கரிய அடியை உடைய வரகு, பெரிய கதிரை உடைய தினை, சிறிய கொடியில் விளையும்

வெ. ஜெயலட்சுமி



முதன்மை இடத்தில் இருக்கும் சிறுதானியங் களும் பயன்களும் :

1. வரகு (Kodo millet) : பழந்தமிழரின் அடிப் படையான உணவாக வரகரிசி திகழ்ந் துள்ளது. வரகின் தோல் பகுதி ஏழு படலங்களைக் கொண் டது. அக்காலத்தில் வரகரிசியைக் கிராமத்து மக்கள் குத்திப் புடைத்துச் சமைத்து உண வாக்கினர். இதன் விதைகள் பல ஆண்டுகள் முளைப்புத் திறன் கொண்டவை. வறட்சியான நிலத்தில்கூட விளையும் தன்மை கொண்டவை. கோயில் கோபுரக் கலசங்களில் வரகரிசியை நிரப்பி வைப் பார்கள், இடி, மின்னலைத் தாங்கும் சக்தி உடையதால்.



கொள்ளு, புள்ளிகள் நிறைந்த அவரை, இவை நான்கைத் தவிர வேறு உணவுப் பொருள்கள் இல்லை' என்று புறநானூற்றில் மாங்குடி கிழார் என்ற புலவர் பாடியுள்ளதிலிருந்து, சங்க காலத்தி லேயே தமிழகத்தில் சிறு தானியங்களை உண வாகக் கொண்டு மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை அறியலாம்.

வரகரிசியில் மாவுச்சத்துக் குறைவாகக் காணப்படுவதால், நீரிழிவு நோயைக் கட்டுப் படுத்தும் திறன் கொண்டது. கோதுமையைவிட அதிக நார்ச்சத்து உடையதால், மலச்சிக்கலைப் போக்குகிறது.

பைட்டிக் அமிலம் குறைந்து காணப்படுவ

தாலும், புரதம், இரும்பு, கால்சியம், பி வைட்ட மின்கள் கொண்டதாகவும் இருப்பதால், உடல் நலத்திற்கு மிகவும் ஏற்றது.

பெண்களுக்கு வரமாகக் கிடைத்த சிறு தானியம் வரகு. மாதவிடாய்க் கோளாறுகளை இது சரிசெய்கிறது. மேலும், இது உடல் எடையைக் குறைக்கும். மூட்டு வலியைக் கட்டுப்படுத்தும்.

வரகரிசியைச் சோறாகச் சமைத்துண்ண லாம். வரகரிசியுடன் உளுந்து, வெந்தயம் சேர்த்து ஊறவைத்து அரைத்து இட்லி, தோசை, பணியாரம் செய்து உண்ணலாம்.

2. பனிவரகு (Proso Millet) : பனிக் காலத்தில் எந்தவிதப் பாசனமும் இல்லாமல், பனிப்பொழிவினால் கிடைக்கும் நீரிலேயே வளரக் கூடிய சிறுதானியம் பனிவரகு. இது அற்புதமான பயன்களைக் கொண்டது.

புரதம், கொழுப்பு, நார்ச்சத்து உடையது. நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்துகிறது. இதயத் தைப் பாதுகாக்கிறது. மரபணுக் குறைபாடுகளைப் போக்கும். கர்ப்பிணிகளுக்கும் ஏற்றது. விரைவில் செரிமானம் ஆகும் என்பதால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கஞ்சியாகச் செய்து அருந்த லாம். வயதானவர்களுக்கு மறதி நோய் வராமல் தடுக்கும் ஆற்றல் உடையது.

3. குதிரைவாலி (Barnyard Millet) : சுவை மிகுந்த தானியம் குதிரைவாலி. வாயுப் பிரச் சனைகளால் வதை படுபவர்களுக்குக் குதிரை வாலி ஒரு வரப்பிரசாதம். இதன் கதிர், குதிரை யின் வால் போன்ற அமைப்பைக் கொண்டு இருப்பதால், குதிரை வாலி என்ற பெயர்க்காரணம் வந்தது.

குதிரைவாலி இரும்புச்சத்து, சுண்ணாம்புச் சத்து, புரதச்சத்து நிறைந்ததால், உடலுக்கு ஊட்டம் அளிக்கிறது. நார்ச்சத்தானது, புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய்களைத் தவிர்க்க உதவுகிறது. செல்களைப் பாதுகாக்கும் ஆன்டி ஆக்சிடன்ட் ஆகச் செயல்படும் தன்மை குதிரைவாலிக்கு உண்டு. சர்க்கரை நோயைக் குணப்படுத்துகிறது.

4. சாமை (Little Millet) : சாமை ஓர் ஆரோக்கியமான உணவு. மிகுந்த இரும்புச்சத்து உடையதால், இரத்த சோகையைக் குணப் படுத்தும். தாது உப்புக்கள் மிகுந்திருப்பதால், உடலில் உயிரணுக்களின் எண்ணிக்கையைக் கணிசமாக உயர்த்துகிறது. மலச்சிக்கலை நீக்கிச் செரிமானத்தை மேம்படுத்துகிறது. எலும்புகளுக்கு இடையில் உள்ள தசைகளை வலிமை பெறச் செய்கிறது.

சாமையில் அனைத்துச் சோறு வகைகளை யும் செய்யலாம். இட்லி, தோசை, பணியாரம் முதலிய பலகாரங்களும் செய்யலாம்.

5. தினை (Fox Tail) : தினை, சிறுதானியங் களில் மிகவும் பழமையானது. இதன் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. தினையரிசியில் கூழ் செய்து பிரசவமான தாய்க்குக் கொடுப்பது தமிழர் மரபு. காரணம், தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கும்.

தினையில் கண்ணுக்கு ஒளி தரும் பீட்டா கரோட்டின் அதிகம். தொடர்ந்து உட்கொள்ள கண் பார்வை பிரகாசமாகும். தினை மாவுடன் தேன் கலந்துண்ணக் கபம் நீங்கும். விரைவில் செரிமானம் ஆவதால், பசியைத் தூண்டும். குடல் புண், வயிற்றுப் புண்ணைக் குணமாக்கும்.

சமைக்கும் முறை : சிறுதானியங்களை நீரில் குறைந்தது 2 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். ஒரு பங்கு சிறுதானியத்திற்கு மூன்று பங்கு நீர் வைத்து, அடி கனமான பாத்திரம் அல்லது மண் பானையில் வேக வைத்துச் சோறாகச் சமைக்க லாம். ஒரு தம்ளர் சிறுதானியத்தை நான்கு பேர்கள் உண்ணலாம். 10 நிமிடங்களில் சோறு சமைத்து விடலாம். குக்கரிலும் வேக வைக்கலாம். 2 அல்லது 3 விசில் வரும் வரை வைக்க வேண் டும். தானியங்கள் அதிகமான அடுக்குகளைக் கொண்டிருப்பதால், சிறுதானியங்களை ஊற வைப்பது அவசியமாகிறது.

அரிசியில் செய்வது போலவே இட்லி, தோசை, பணியாரம், இடியாப்பம் மற்றும் கூட்டாஞ் சோறு வகைகளையும் சமைத்து அசத்தலாம், சுவைக்கலாம்.

சிறுதானியங்களைப் பற்றிப் படிப்பதுடன் நிறுத்திவிடாமல், இன்றே சமைக்கத் தொடங் குங்கள். ஆரோக்கியமாக வாழச் சிறுதானியங் களை நாள்தோறும் ஒரு வேளையாவது ஏதாவது ஒரு முறையில் உட்கொள்ளுங்கள்!

●

8–ம் பக்கத் தொடர்ச்சி

விட்டான் இராமபிரான்.

இது சரியா? தம்பியைக் காப்பாற்ற இவனல்லவா போக வேண்டும்? தென் திசை தவிர, வேறு திசை நோக்காமல் பாதுகைக்கு முடிசூட்டிப் பாராளத் துணைசெய்து, நாட்டில் இருந்தே நல்ல தவம் செய்தவனைப் பக்தி வடிவமான வனைப் பரதன் எனும் பெயரானைப் பார்க்க இராமனல்லவா போக வேண்டும்! ஏன் அனுமனை அனுப்பினான்?

பாசமிக்க பரதத் தம்பியைவிடப் பரத்வாஜர் போட்ட சாப்பாடு இவனை இழுத்துவிட்டதா? இப்படிப்பட்டவன் சாப்பாட்டு ராமன்தானே! இதனால் தான் நம் முன்னோர் இந்த இராமனைச் சாப்பாட்டு ராமன் என்று கூறினார் களோ என்று நினைத்தேன். சிந்தனை வளர்ந்தது. தம்பியொடும் தாரத் தொடும் தவம் செய்த கடவுளைச் சாப் பாட்டு ராமன் என்று கூற என் மனம் துணியவில்லை. தவித்தேன்.

"அலகிலா விளையாட் டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

என்று இராமனைச் சரணடைந்தேன். "பொன்னை உயர்வைப் புகழை விரும் பிடும் என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று" இராமனைச் சரணடைந் தேன். "தென்சொல் கடந்தவன் வடசொற் கடற்கு எல்லை தேர்ந் தவன்" என் முன்னால் வந்து நின் றான். தம்பியில்லை. தார மில்லை. தமிழ் மட்டும் கொண்டு வந்தான். கம்பனுக்குத் தமிழ் கொடுத்த காகுத்தன் வந்து நின்றான்.

"இராமா! நீ போகா மல் அயோத்திக்கு முத லில் அனுமனை அனுப் பியது சரியா? சாப்பாட் டுக்காக நீ பரத்வாஜர் ஆசிரமத்தில் தங்கிவிட் டாயா?" என்று கேட் டேன். இராமபிரான் வாய் திறந்தான். என் தவத்தால் நான் கேட்டேன்.

"என் பக்தன். நீ கேட்டாய் என்பத னால் சொல்லுகிறேன். மன்னுபுகழ் இறை எனக்கு வடிவுமில்லை. பெயரு மில்லை. யாரெல்லாம் என்னை எப்படி எப்படிப் பெயர் வைத்து எந்த வடி வத்தை நினைத்து அழைக்கிறார்களோ, அவர்களுக்கு, அந்தப் பெயரோடு அந்த வடிவத்தில் காட்சி கொடுத்துக் காப்பாற்றுவேன்.

'ஒரு நாமம் ஓர்உருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ'

என்ற திருவாசகத்தை நினைத்துக் கொள். பரதன் பதினான்காண்டுகள் கண்ணும் கண்ணீருமாக எதை வைத்து வழிபட்டான்? திருவடிகளை வைத்து வழிபட்டான். எனவே, அவனைக் காப் பாற்ற நான் போகாமல் என் திரு வடியை அனுப்பினேன். கருடன் பெரிய திருவடி. என் பக்தன் அனுமன் சிறிய திருவடி. பரதன் வணங்கிய திருவடி அவனை நெருப்பில் விழாமல் காப் பாற்றிவிட்டது. புரிந்துகொள்.

இன்னும் புரியவில்லையா? தமிழ் நாட்டில் திருமூலர் என்று ஒரு சித்தர் மூவாயிரம் ஆண்டுகளுக்குமேல் வாழ்ந் தவர். அவர் எழுதிய திருமந்திரம் தீவினை மாற்றும் திறனுடையது. அது சாத்திரமும் தோத்திரமும் ஆகும். அந்தத் திருமந்திரத்தில்,



'அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே' (71)

என்ற பாடலைப் பார். இராமாயணப் பூட்டைத் திறக்கச் சாவி கிடைக் கும்" என்று இராம பிரான் கூறிய சொற்கள் என் காதில் தேனாகப் பாய்ந்தன.

திடீரென்று யாரோ என்னைத் தட்டி எழுப்பினார்கள். கண் விழித்தேன். பத்திரிகைச் சுவடி பழம்பாய் வரிசையெல்லாம் ஒத்திருக்க நாம் வீட்டில் உள்ளோம் என உணர்ந்தேன். எல்லாம் கனவு. எனக்கு முன்னால் திருமந்திரப் புத்தகம் இருந்தது. இராம பிரான் எடுத்துத் தந்த பாடல் என்முன் விரிந்தது.

இறைவனை வாயாரப் பாடுகிறார் திருமூலர். முதல் இரண்டடி தோத்திரம். அடுத்த இரண்டடி சாத்திரம். இறைவன் அப்பன். ஆனந்தன் அமுதன். உடலுக்குத் தந்தையர் பலபேர். உயிருக்கு அப்பன் அவன் மட்டுமே.

"அப்பா! நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும், ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று அந்த அப்பனிடம் கேட்கிறார் அருட்பெருஞ்சோதியின் அடியவர் வள்ளலார். அந்த அப்பனை நந்தி என்பர். அவன் பற்றற்றவன். நமக்குப் பற்றுக்கோடாக இருப்பவன்.

அவன் ஆரா அமுது. உண்ண உண்ணத் தெவிட்டாதவன். "ஆரா அமுதே, அளவிலாப் பெம்மானே! ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே" என்று பாடப்பாட இனிப்பவன். "ஆரா அமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே" என்று திருவாய்மொழி பேசும்.

"ஆரா அமுதாய் அலைகடலில் கண்வளரும்
நாராயணன் என்று இருப்பேன் இராமனைநான்"

என்று கம்பன் படைத்த மண்டோதரி பேசுவாள்.

அவன் ஒப்பிலி வள்ளல். அவனுக்கு ஒப்பான வள்ளல் இல்லை. எல்லா வள்ளல்களும் தங்களிடம் உள்ளதைத் தருவார்கள். சிவபெருமான் தன்னையே தரும் தனிப்பெருவள்ளல். தான் நஞ்சையுண்டு மற்றவர்களுக்கு அமுதத்தைக் கொடுத்த வள்ளல். அந்தப் பெருமானை மணிவாசகர் "வார்ந்த நஞ்சயின்று வானோர்க்கு அமுதம்ஈ வள்ளல் போற்றி" என்று பாடுவார்.

வள்ளற்பெருமான் சிவபெருமானைப் பார்த்து,

"வள்ளால் உன்னைப் பாடப் பாட வாய் மணக்குதே
வஞ்ச வினைகள் எனைவிட் டோடித் தலை வணக்குதே
எள்ளா துனது புகழைக் கேட்கச் செவி நயக்குதே
எந்தாய் தயவை எண்ணும் தோறும் உளம் வியக்குதே"

என்று வாயாரப்பாடி வளமோடு சிந்திப்பார். இறைவனைவிடப் பெரிய வள்ளல் யார் இருக்கிறார்கள்? நமக்கு எல்லாவற்றையும் வாரி வாரி வழங்கிவிட்டு, அவன் ஒரு கோவணத்தைக் கட்டிக் கொண்டு பழனி மலையில் நிற்கிறானே! இவனல்லவா வள்ளல்! இவன் மனைவி வள்ளலுக்கேற்ற பெண்பாலான வள்ளியல்லவா?

எல்லாம் ஒடுங்கிய பிறகும் தான் மட்டும் நிற்பவன் சிவபெருமான். ஊழிக் கால நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாயகன். மீண்டும் உலகங்களைப் படைப்பதற்காக ஊழி முதல்வனாய் நின்று தோணியப்பராகவும், சட்டையப்பர் ஆகவும் தோன்றுபவன் சிவ பெருமான். அவனை,

"ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்"

என்று திருவாசகம் புகழும்.

இத்தகைய பெருமானை எப்படி வேண்டுமானாலும் வழிபாடு செய்யுங்கள். அப்பரிசு (அதற்கேற்றபடி) ஈசன் அருள் பெறலாமே என்கிறார் திருமூலர். இறைவனைக் கண்ணனாக நினைத்து வழிபட்டால் கண்ணனாக வருவான். கந்தனாக நினைத்தால் கந்தனாக வருவான். சித்தன் இவனென்றால், சித்தனாய் வந்திடுவான். அத்தி வரதனென்றால், அப்படியே அருள் பொழிவான். ஈசன் என்று கும்பிட்டால் ஈசனாய்த் தோன்றிடுவான். இல்லை என்று சொல்பவரின் இதயத்தில்

மறைந்திடுவான். ஓராதார் உள்ளத்தின் உள்ளே ஒளிந்திருப்பான். நீராய் உருகி விடும் நெஞ்சில் அவன் நிறைந்திருப் பான் என்று திருமூலர் இந்த மந்திரத் தின் மூலம் இறைவன் தன்மையை எளிதாய் விளக்குகிறார்.

"எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறனும்

அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளி"

என்ற மணிவாசகர் வாக்கு இங்கே நினைக்கத்தக்கது. மதுரையம்பதியில் பன்றிக் குட்டிகள் இறைவனை நினைத் துப் பால் வேண்டி அழுதபோது இறை வன் தாய்ப்பன்றியாக வந்து குட்டி களுக்குப் பாலூட்டினான். இதைக்


"கேவலம் கேழலாய்ப் பால்கொடுத்த

கிடப்பறிவார் எம்பிரான் ஆவாரே"

என்று பாடினார் மாணிக்கவாசகர். அவனைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று எவ்வழியிலாவது வழி படுங்கள். அவ்வழியில் அவன் அருள் புரிவான். அவனுக்கு நினைப்பவர் மனமே கோயில். அன்பு செயும் அன்பர் மனத்தைப் பொறுத்தே ஆண்டவன் திருவருள் கிடைக்கும். எனவே, கடவுள் நமக்கு அருள் செய்யவில்லையே என்று கவலைப்படாதீர்கள். கடவுள் அருள் செய்யத் தக்கவாறு நாம் நடந்து கொள் வில்லையே என்று கவலைப்படுங்கள்.

கங்கையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. குடம் கொண்டு போனவன் குடம் நிறைய நீர் கொண்டு வருவான். அண்டா கொண்டு போனவன் அந்த அண்டா நிறைய நீர் சுமந்து வருவான். கை கொண்டு போனவன் கை நிறைய நீர் கொண்டு வருவான். (கடவுள் இல்லை என்று) பொய் கொண்டு போனவன் வெறுங்கையோடு திரும்பு வான். அவரவர் தவத்தளவே ஆகும் தனம். இதுதான் திருமூலர் கூறும் அறவுரை.

இந்தப் பாடலைப் போல் மூவா யிரம் பாடல்கள் திருமந்திரத்தில்



வள்ளலார்

உள்ளன. இதை 'மூவாயிரத் தமிழ்' என்று அவர் குறிப்பிடுகிறார். இது தவிர, அவர் எழுதிய 'முந்நூறு மந்திரம்' என்ற நூலும், 'முப்பது உபதேசம்' என்ற நூலும் மூன்றும் ஒரே கருத்தை வலி யுறுத்துகின்றன என்பதை,

"மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்

மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்

மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்

மூலன் உரைசெய்த மூன்று ஒன்றாமே"

(3046)

என்ற பாடல் குறிப்பிடுகின்றது.

திருமந்திரப் பாடல்கள் மூவாயிரம் என்று கூறப்பட்டாலும், சில பாடல்கள் இரண்டு மூன்று முறை சில பாட பேதங் களோடு வந்துள்ளன. இவை அனைத் தையும் சேர்த்தால் மொத்தம் 3047 பாடல்கள் கிடைத்துள்ளன. திருமூலர் இவற்றை ஒன்பது தந்திரங்களாக வகுத்துள்ளார். தந்திரம் என்ற சொல் இன்று பல்வேறு பொருள்களில் வழங் கப்படுகிறது. தந்திரக்கார நரி என்றால், அது நரியின் தரத்தைக் குறைக்கிறது.

"தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே – ஒரு

தந்திரம்நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே"

என்று வள்ளலார் பாடும் பொழுது, தரமுயர்ந்த தந்திரம் தலைவனைக்

காணவும், தன்னை உணரவும் பயன் படுகிறது.

திருமந்திரத்தில் தந்திரம் என்பது தாந்த்ரீக வழிபாட்டு முறையில் தந்திர சாஸ்திரங்களில் குறிக்கப்படும் தந்திரம் ஆகாது. ஒன்பது ஆகமங்கள் என்பது ஒன்பது தந்திரங்களாயின என்று சிலர் குறிப்பிடுவது போல ஆகமங்களின் திரண்ட கருத்துக்கள் தந்திரம் எனப் பட்டன. இதன்படி, திருமந்திரப் பாடல் கள் கீழ்க்கண்டபடி தொகுக்கப்பெற்றுப் பத்தாம் திருமுறை எனப்பட்டன.

பாயிரம் : 9 தலைப்புகள், 112 பாடல் கள். முதல் தந்திரம் : 21 தலைப்புகள், 224 பாடல்கள். இரண்டாம் தந்திரம் : 25 தலைப்புகள், 212 பாடல்கள். முன்றாம் தந்திரம் : 21 தலைப்புகள், 335 பாடல்கள். நான்காம் தந்திரம் : 1 3 தலைப்புகள், 535 பாடல்கள். ஐந்தாம் தந்திரம் : 23 தலைப்புகள், 154 பாடல் கள். ஆறாம் தந்திரம் : 13 தலைப்புகள், 131 பாடல்கள். ஏழாம் தந்திரம் : 38 தலைப்புகள், 418 பாடல்கள். எட்டாம் தந்திரம் : 43 தலைப்புகள், 527 பாடல் கள். ஒன்பதாம் தந்திரம் : 32 தலைப் புகள், 399 பாடல்கள். மொத்தம் 238 தலைப்புகள், 3047 பாடல்கள்.

பாயிரத்தில் கடவுள் வாழ்த்து, வேதச் சிறப்பு, குரு பரம்பரை, திருமூலர் வரலாறு ஆகியவை கூறப்படுகின்றன.

முதல் தந்திரம் பதி, பசு, பாச இயல்புகளைக் கூறி, அறநெறிகளை வலி யுறுத்தி யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நய வாமை, அன்புடைமை, கல்விச் சிறப்பு, கள்ளுண்ணாமை, அந்தணர் ஒழுக்கம், அரசாட்சி முறை ஆகியவற்றை விளக்கு கிறது.

இரண்டாம் தந்திரம் சிவபெருமானு டைய எட்டு வீரட்டச் செயல்கள், ஐந்தொழில் ஆற்றல், திருக்கோயிலில் செய்யத் தகாதவை, சிவநிந்தனை செய் யாமை ஆகியவற்றை எடுத்துரைக்கிறது.

மூன்றாம் தந்திரம் இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தி யாகாரம், தாரணை, தியானம், சமாதி எனப்படும் அட்டாங்க யோகத்தையும் அட்டமா சித்திகளையும் விளக்குகிறது.

நான்காம் தந்திரம் மந்திர, எந்திர, வழிபாட்டு முறைகளை விளக்கிச் சக்கரங்களைப் பற்றிய செய்திகளைத் தருகிறது.

ஐந்தாம் தந்திரம் சைவத்தின் பிரிவு களையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றையும் விளக்குகிறது. ஆண்டவனை அடையச் சத்புத்திர மார்க்கம், தாசமார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் எனப்படும் நான்கு வழிகளைக் காட்டுகிறது.

ஆறாம் தந்திரம் சிவமே குருவாக வந்து அருள் செய்வதையும் நல்ல குரு நாதன் தவத்தால் மட்டுமே கிடைப் பான் என்பதையும் துறவின் பெருமை, திருநீற்றுச் சிறப்பு ஆகியவற்றையும் விளக்குகிறது.

ஏழாம் தந்திரம் உடம்பும் உலகங் களும் சிவலிங்க வடிவாய் இருப்பதை யும், அடியார் பெருமை, சிவபூசை, மாகேசுவர பூசை, சமாதிக் கிரியை ஆகியவற்றையும் கூறுகிறது.


எட்டாம் தந்திரம் உயிர் எடுக்கும் உடம்புகளை விளக்குகிறது. தத்வமஸி, பக்தியுடைமை, முத்தி பெறல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

ஒன்பதாம் தந்திரம் ஓங்காரத்தின் பெருமை, அஞ்செழுத்துண்மை, இறை வன் திருக்கூத்து, மோனசமாதி, சூனிய சம்பாஷணை ஆகியவற்றை மிக அழகாக விளக்குகிறது.

திருமந்திரக்கடலில் முத்துக்கள் அதிகம். தேடினால் முத்தும் கிடைக்கும், முத்தமிழும் கிடைக்கும். முதல்வன் அருளும் கிடைக்கும்.

●

ஆன்மிகம்



பக்தியும் பைத்தியமும்

பக்தி முற்றினால் பித்து என்று கூறப்படுவதுண்டு. தாம் உளமுருகி வழிபடுகின்ற தெய்வம் தம் எதிரே நிற்பது போலச் சிலர் பேசுவதும் சிரிப்பதும் கண்டு அவர்கள் மனப் பிறழ்வில் இருப்பதாகப் பிறர் கருதுவது கண் கூடு.

"கங்குலும் பகலும் கண் துயில் அறியாள், கண்ண நீர் கைகளால் இறைக்கும், சங்கு சக்கரங்களென்று கை கூப்பும், தாமரைக் கண் என்றே தளரும்" என்றெல்லாம் ஸ்ரீமந்நாராயணனையே நினைத்துப் பராங்குச நாயகி (நம்மாழ்வார்) உருகுவதை அவரது செவிலித் தாயார் விவரித்துக் கூறுகின்ற திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள் பக்திக்கும் பித்துக்குமான தொடர்பைத் தெளிவாகக் காட்டுவனவாகும்.

பக்தியில் பித்தேறியவர்கள் ஒரு தனி உலகத்தில் சஞ்சரிப்பவர்களாவார்கள். அவர்கள் காண்பதையும் உணர்வதையும் சுற்றியுள்ளவர்களால் புரிந்துகொள்ள இயலாது.

சாதாரணப் பித்துக்கும், பக்தியில் முற்றிய பித்துக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு.

சாதாரணர்களின் பித்துப் பேச்சுக்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத உளறல்களாக இருக்கும். பக்தியில் முற்றியவர்களிடமிருந்து பிறப்பவையோ தேவாரமாகவும், திருவாசகமாகவும், திவ்வியப் பிரபந்தமாகவும், வேறு பல துதிகளாகவும் அமைந்து, இம்மனித குலத்துக்கு வானுலகையே பெற்றுத் தரும் நன்முத்துக்களாகும்.



எஸ். ஸ்ரீதுரை

கடவுளை நினைந்து பித்தானவர்களும் உண்டு; கடவுளையே பித்தாக்கி மகிழ்ந்தவர்களும் உண்டு.

இவ்விதத்தில் பித்தான புண்ணியர்கள் இருவரையும், பித்தாக்கிய பெருமக்கள் இருவரையும் பற்றி அறிந்து இன்புறுவோம் வாருங்கள்.

ஆழ்வார்கள் பன்னிருவருள் சேர நாட்டைச் சேர்ந்த குலசேகராழ்வார் ஒருவர். இவர் இயற்றிய பிரபந்தப் பாசுரங்கள் பெருமாள் திருமொழி என்று அழைக்கப்படுகின்றன. "மன்னுபுகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே" மற்றும் "செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே" ஆகிய பாசுரங்கள் அமைந்த பதிகங்கள் இவரது பக்தியின் ஆழங்காற்பட்ட தன்மையை விளக்குவனவாகும்.

மன்னராக இருந்தபோதிலும், நாட்டு நிர்வாகத்தைவிட, எம்பெருமான் ஸ்ரீமந்நாரயணனின் சிறப்புகளைக் கூறும் புராண இதிகாசப் பிரவசனங்களைக் கேட்பதிலேயே இவர் தமது நேரத்தை செலவழித்து வந்தார்.

ஒருமுறை குலசேகராழ்வார் தமது அரண்மனையில் இராமாயணச் சொற்பொழிவாற்றிய பௌராணிகர், வனத்தில் ஸ்ரீ ராமபிரான் தனியொருவராகக் கரன், தூஷணன் முதலான பதினாலாயிரம் அரக்கர்களுடன் விற்போர் புரிந்து கொண்டிருந்தார் என்று சொன்னதைக் கேட்டதும் சிலிர்த்தெழுந்தார்.



அப்பைய தீட்சிதர்

“என் ஐயன் ராமபிரான் தனியாகப் போர் புரிவதா? இக்கணமே நாமும் நமது படைகளைத் திரட்டிக் கொண்டு ராமபிரானுக்கு உதவிடச் செல்லுவோம், கிளம்புங்கள்!” என்று தம்முடைய தளபதிக்கு உத்தரவு இட்டார்.

மந்திரிகளின் சமயோசிதமான ஆலோசனையின்படி, “அரக்கர் அத்தனை பேரையும் வெற்றிகரமாக வீழ்த்திய ராமபிரான், தமது பர்ண சாலைக்குத் திரும்பினார்” என்று பௌராணிகர் சொன்னதும் மனம் மகிழ்ந்த ஆழ்வார் மீண்டும் தமது சிம்மாசனத்தில் அமர்ந்து கதையைக் கேட்க ஆரம்பித்தாராம்.

இறைபக்தியில் முழுதாகத் தம்மைக் கரைத்துக் கொண்ட குலசேகராழ்வார், அரச பதவியும் ஐசுவரியமும் தமது பக்திக்கு இடைஞ்சலாக இருப்பதை உணர்ந்து, தமது ஆட்சியைத் தமது மகனிடம் ஒப்படைத்துவிட்டு, திருவரங்கம், தில்லைத் திருச்சித்திரகூடம், திருமலை திருப்பதி முதலிய வைணவத் தலங்களுக்குச் சென்று மங்களாசாஸனம் செய்து மகிழ்ந்தார்.

பதினாறாம் நூற்றாண்டில், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த அடையபலம் என்ற கிராமத்தில் அவதரித்த அப்பைய தீட்சிதர் சிறந்த சிவபக்தரும், வேத பண்டிதரும் ஆவார்.


பல வேதாந்த நூல்களுக்கு விளக்க உரை எழுதிய இவர், தாம் ஒரு சிவ பக்தராக இருந்த போதிலும், வைணவ சித்தாந்த நூல்களுக்கும் உரை எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது.

எப்பொழுதும் சிவநாம ஜபத்துடனே நற்போது போக்கி வந்த அவருக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் தோன்றிவிட்டது. ஒருவேளை தமக்கு மனப்பிறழ்வு ஏற்பட்டுவிட்டால் (பைத்தியம் பிடித்துவிட்டால்) என்ன ஆகும்? அந்நிலையில் தமக்குச் சிவசிந்தனை இல்லாமல் போய்விட்டால், என்ன செய்வது? என்றெல்லாம் யோசிக்கத் தொடங்கினார்.

இதைப் பரீட்சை செய்தே பார்த்துவிடலாம் என்று முடிவு செய்த அப்பைய தீட்சிதர், தம்முடைய சீடர்களை அழைத்தார்.

“சீடர்களே, இப்போது எனக்குப் பைத்தியம் பிடிப்பதற்கான மருந்தை நான் சாப்பிடப் போகிறேன். பைத்தியம் தெளிவதற்கான மருந்தையும் இதோ தயார் செய்து வைத்திருக்கிறேன். எனக்குப் பைத்தியம் பிடித்த நிலையில் நான் என்னென்ன பேசுகின்றேனோ, அதையெல்லாம் சுவடியில் எழுதி வைத்துவிட்டு, சரியாக நாளை இதே நேரத்தில், தெளிவதற்கான மருந்தை எனக்குக் கொடுத்து என் பைத்தியத்தைத் தெளிவித்துவிட வேண்டும்!” என்றார்.

அதேபோல, பித்துப்



சுந்தரமூர்த்தி நாயனார்

பிடித்த நிலையில் அவர் கூறியவற்றை சீடர்கள் எழுதிவைக்க, மறுநாள் (பைத்தியம் தெளிந்த பிறகு) அதைப் படித்துப் பார்த்த அப்பைய தீட்சிதர் மிகவும் மனம் மகிழ்ந்தார். காரணம், சிந்தை தெளி வில்லாத நிலையிலும் அவர் சிவபெருமானைப் பற்றிய சுலோகங்களையே பாடியிருப்பதுதான்.

பைத்தியம் (உன்மத்தம்) பிடித்த நிலையில் அவர் பாடிய ஐம்பது சுலோகங்கள் கொண்ட அந்தத் துதி 'உன்மத்த பஞ்சாசத்' என்றும் 'ஆத்மார்ப்பணஸ் துதி' என்றும் அழைக்கப்படு கின்றது.

தமது சமய இலக்கியத் தொண்டுகளுக்காக வேலூரை ஆண்ட சின்னபொம்ம நாயக்கனால் கனகாபிஷேகம் செய்து பாராட்டப்பட்ட அப்பைய தீட்சிதர், 1593–ஆம் வருடம் முக்தியடைந்தார்.

கடவுளையே நினைத்துப் பித்தாக வாழ்வது ஒருபுறம் இருக்க, தாம் வணங்கும் கடவுளுக்கே பைத்தியப் பட்டம் சூட்டியவரை யாருக்குத்தான் தெரியாது.

சைவசமயக் குரவர்களில் ஒருவரும், 'தம்பிரான் தோழர்' என்று சிறப்புடன் அழைக்கப்பட்டவருமாகிய சுந்தர மூர்த்தி நாயனாரை உலகாயத விஷயங்களிலிருந்து தடுத்தாட் கொண்டு அருள விரும்பிய சிவ பெருமான், அவரது திருமணம் நடைபெற இருந்த வேளையில் ஒரு முதியவர் வேடமிட்டுச் சென்று, "நீயும், உன் குலத்தவரும் என் அடிமைகள்" என்று கூறி, அதற்கு ஆதாரமாக ஓர் ஓலைச் சுவடி யைக் காட்ட, "நீ என்ன பித்தனா?" என்று கேலி செய்கிறார் சுந்தரர்.

பின்னர் சிவபெருமானின் திருக்காட்சி பெற்று மனம் தெளிந்த சுந்தரர், "பித்தா" என்பதையே முதல் வார்த்தை யாகக் கொண்டு தேவாரம் பாடி இறைவனை மகிழ்வித்தார்.

இறைவனின் சொற்படி அடியவர் நடப்பது போக, சுந்தரர் என்னும் இவ்வடியவரின் சொற்படி யெல்லாம் ஆடினான் தில்லைக் கூத்தன் என்ப தைக் கொண்டே சுந்தமூர்த்தி நாயனாரின் பெரு மையை உணரலாம்.

கடவுளுக்கே பைத்தியப் பட்டம் கட்டிய துணிச் சல்மிக்க கவிஞர் இன்னொருவரும் இருக்கிறார். வேறு யார்? முண்டாசுக் கவிஞர் பாரதியார்தாம்.

எம்பெருமான் கண்ணனைக் குழந்தையாக, காதலனாகக் கண்டும் பாடியும் மகிழ்ந்தோர் பல ருண்டு. கண்ணனையே தன் காதலியாக மட்டு மின்றி, தனது சேவகனாகவும் கற்பனை செய்து பார்க்கும் துணிச்சல், பயமறியாக் கவிஞனாகிய நம் பாரதிக்கு வந்ததில் வியப்பென்ன இருக்கிறது?

பாரதியார் காலத்திலும் எஜமானர்களுக்கு வேலையாட்களால் தொல்லை அதிகம் போல.

கூலி மிகக் கேட்டு, கொடுத்ததெல்லாம் தாம் மறப்பது மட்டுமின்றி, நம்ப முடியாத காரணங் களையெல்லாம் கூறி வேலைக்கு வராமல் விடுப்பும் எடுத்துக்கொள்ளும் வேலையாட்களால் சலிப்புற்றிருந்த பாரதியாரிடம், சகல நற்குணங் களும் நிறைந்த கண்ணன் வேலையாளாக வந்து சேருகிறான். அது மட்டுமா – "நெஞ்சிலுள்ள காதல் பெரிதெனக்கு, காசு பெரிதில்லை" என்று கண்ணன் சொன்னதும் மகிழ்ச்சியின் உச்சிக்கே செல்கிறார் பாரதியார்.



பாரதியார்

செய்யும் வேலைக்குக் கூலியாகக் காசு பணத்தைக் கேட்காமல், கனிந்த அன்பையும் பாசத்தையும் கேட்கும் இவன் ஒரு பழங்காலத்துப் பைத்தி யம் போல இருக்கிறது என்று எண் ணியவர், "பண்டைக் காலத்துப் பயித் தியத்தில் ஒன்றெனவே, கண்டு மிக வும் களிப்புடனே நான் அவனை ஆளாகக் கொண்டு விட் டேன்" என்று தாம் நினைப் பதைத் தம் பாடலில் பதிவும் செய்கிறார் நம் பாரதியார்.

காசு பணம் சேர்க்க விரும்பா தவர் கள் கடவுளே ஆனாலும் அவர்களுக்குப் பைத் தியப் பட்டம்தான் கிடைக்கும் என்பதை அழகாகக் கூறும் பாரதியின் பாடல் பலமுறை படித்துப் படித்து இன்புற வேண்டியதாகும்.

கவிஞர்களாகப் பிறப்பது சிறப்பு. அவர்களே இறையுணர்வு மிக்கவர்களாக இருப்பது இன்னும் சிறப்பு. அத்தகைய பக்திமிக்க கவிஞர்களைப் பைத்தியமாக்கி மகிழும் கடவுள், அவர்களிடம் பைத்தியப் பட்டம் பெறுவதிலும் மகிழ்ச்சியடை கிறார் என்பதை அறிந்து நாமும் மகிழ்கிறோம். ●

ஆன்மிகம்



காஞ்சி
வரதராஜப்பெருமாள்
திருக்கோயில்

அத்திகிரி அருளாளன்

'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று ஔவைப் பிராட்டியால் போற்றப்பட்ட தொண்டை நாட்டின் தலைநகர மாகிய காஞ்சி மாநகரம் வரலாற்றுப் பெருமை மிக்கது. தவிர, பல்லவப் பேரரசின் தலைநகரமா கவும் விளங்கியதோடு, சிற்பக் கலையில் அரிய சாதனைகள் மூலம் புகழ்க்கொடி நாட்டியது.

'நகரேஷு காஞ்சி' என்று மகாகவி காளி தாசனும், 'முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் காஞ்சி' என்றும், 'காசி முதலான நன்னகரெல் லாம் கச்சிக்கொவ்வா' என்று மகாதேசிகனும், 'கல்வியிற் கரையிலா காஞ்சி' என்று அப்பரடி களும் இதனைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் முதலான சிவாலயங்கள் நிறைந்திருக்கும் பகுதி சிவகாஞ்சி என்றும், அருள்மிகு வரதராஜப் பெரு மாள் உள்ளிட்ட வைணவ திவ்ய தேசங்கள் நிறைந்த பகுதி விஷ்ணு காஞ்சி என்றும் பெயர்கள் பெற்ற இவற்றினை முறையே பெரிய காஞ்சிபுரம், சின்னக் காஞ்சிபுரம் என்றழைப்பதும் வழக்கில் இருந்து வருகிறது.

"ஏரி இரண்டும் சிறகா, எயில் வயிறாக்
காருடைய பீலி கடிவாகாச் – சீரிய
அத்தியூர் வாயா! அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு'

என்று இந்நகரின் தோற்றத்தினை வியந்து பாடு கிறார் பெருஞ்சித்திரனார்.

வேகவதி என்னும் ஆற்றங்கரையிலுள்ள இந்நகர அமைப்பை, மேநாட்டு நகரமைப்பு வல்லு நரும், பேராசிரியருமான கேடிஸ் என்பாரும் வியந்து பாராட்டியிருக்கிறார்.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பட்ட நூற்றெட்டு திவ்ய தேசங்களில், பதினெட் டுத் திருப்பதிகள் இக்காஞ்சி மாநகரிலேயே உள் ளன என்றாலே, இதன் பெருமை விளங்கும். இவற்றில்,


"ஊழியான் ஊழி பெயர்த்தான் உலகேத்தும்
ஆழியான் அத்தியூரான்"

என்று குறிப்பிடப்படும் அருள்மிகு வரதராஜப் பெருமாள், பிரதி வைகாசி பௌர்ணமிதோறும் நடைபெறும் கருடசேவையால் மிகப் பிரசித்தம்



அனந்த புஷ்கரணியும்
நீராழி மண்டபமும்

மு. சண்முகம்



வாய்ந்தவர். நம்மாழ்வார், கலியன், பூதத்தாழ்வார், வேதாந்த தேசிகர், பேயாழ்வார், கூரத்தாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரால் மங்களா சாசனம் செய்யப்பட்டவர். இவர் நின்றருளும் இந்த திவ்ய தேசத்தினைக் குறித்து 'அத்தகிரி மகாத் மியம்' கூறும் சேதி :

படைக்கும் கடவுளான பிரம்மாவின் உள்ளம் மாசடைந்ததன் காரணமாகப் படைப்புத் தொழில் நின்றுவிட்டது. இக்குறை நீங்க அவர் கங்கை நதிக்கரையில் தவம் மேற்கொள்ள முயன்றபோது ஓர் அசரீரி தோன்றி, மனம் தூய்மைப்பட ஆயிரம் யாகங்கள் செய்ய வேண்டுமென்றும், அதற்கு



நின்ற கோலத்தில் அத்திவரதர்

நீண்ட கால அவகாசம் தேவைப்படுமாதலால், அந்த யாகத்தினைக் காஞ்சி மாநகரின்கண் ஒரு முறை செய்தாலே ஆயிரம் யாகங்கள் செய்த பலன் கிட்டுமென்றும் கூற, அவ்வாறே பிரம்மாவும் காஞ்சிக்குச் சென்று அங்கு யாகத்தினைத் தொடங்கினார்.

அப்போது அவரது மனைவியாகிய சரசுவதி, தன் கணவர் மீது கொண்ட மனத்தாங்கலால், 'வேகவதி' என்னும் ஆறாய்ப் பெருகி அந்த யாகத்தை அழிக்க முற்பட்டபோது, அதனை மகாவிஷ்ணுவிடம் பிரம்மா முறையிட, அவர் யதோக்தகாரியாக உருவெடுத்து அவ்வாற்றின் குறுக்கே படுத்துக் கொண்டார்.

இதைக்கண்டு சரஸ்வதி ஒதுங்கிட, பிரம்மாவின் யாகம் நிறைவேறப்பெற்று ஆயிரம் கோடி சூரியப் பிரகாசத்துடன் யாகக் குண்டத்திலிருந்து புண்ணியகோடி விமானத்தில் தேவராஜனாகிய வரதர் எழுந்தருளியதோடு, பிரம் மாவின் வேண்டுதலுக்கிணங்கி அவ்விடத்தில் நின்று அனைத்துயிர்களுக்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீபெரும்புதூரில் அவதரித்த இராமானுஜர் தீர்த்தக் கைங்கர்யம் செய்து வந்ததும், அப்போது ஆளவந்தாரால் 'ஆழி முதல்வன்' என்று விசேச அனுக்கிரகம் பெற்றதும் இந்த திவ்ய தேசத்தில் தான். இங்குள்ள அருள்மிகு வரதராஜப் பெரு மாளே இராமானுஜருக்குத் திருக்கச்சிநம்பி மூல மாக பரத்வமே நாம், பேதமே தரிசனம், உபாயமும் பிரபத்தியே, அந்திம ஸ்மிருதியும் வேண்டா, சரீரத்தின் முடிவிலே மோட்சம், பெரிய நம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது ஆகிய ஆறு வார்த் தைகளை அருளிச் செய்திருக்கிறார்.

காஞ்சிமாநகரின் கிழக்குப் பகுதியான விஷ்ணுகாஞ்சியில் அமைந்திருக்கும் அருள்மிகு தேவராஜஸ்வாமி தேவஸ்தானமெனும் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலின் பிரதான வாயில் மேற்கு நோக்கியுள்ளது. ஏழுநிலைக் கோபுரம். சுமார் 23 ஏக்கர் பரப்புள்ள இக்கோயில் வளாகத் தின் நான்கு பக்கங்களிலும் நீண்ட, உயரமான மதிற்சுவர்கள். கிழக்கு நோக்கியுள்ள பின் கோபுரம் ஒன்பது நிலைகளை உடையது.

ஐந்து பிரகாரங்களைக் கொண்ட இத்திருக் கோயிலில் வெளிப்பிரகாரத்தில் நுழைந்ததும் பிரதானமாகத் தெரிவது உயரமான தூண்களை உடைய நாலு கால் மண்டபமும், தொண்டரடிப் பொடி துவஜஸ்தம்பமும். இவற்றிற்கு நடுவில் பலி பீடம். தொடர்ந்து மகா மரியாதை வாயில். அதன் மீது சிறியதான கோபுரம். வாயிலைக் கடந்ததும் இரண்டாவது திருச்சுற்றின் தொடக்கத்தில் திரு மஞ்சன மண்டபத்தினையடுத்து திருவனந்



அனந்தத் தீர்த்தத்தில் அத்திவரதர்

தாழ்வான் சந்நிதி. இங்குக் காணப்படும் தல விருட்சம் அரசமரம்.

இத்திருச்சுற்றின் முடிவில் முகமண்டபத் தினையடுத்துக் கிழக்கு நோக்கியவாறுள்ள சந் நிதியில் பெருந்தேவித்தாயார் வைரங்கள் பதித்த ஆபரணங்களுடன் அழகுத் திருக்கோலத்தில் அருளாட்சி புரிந்து கொண்டிருக்கிறார்.

தொடர்ந்து உட்பிரகாரத்தில் நுழைந்தவுடன் தொடக்கத்தில் காணும் அழகிய சிங்கரோடு, வட மேற்கு மூலையிலுள்ள சந்நிதியில் ஆண்டாளை யும், வடக்குப் பிரகாரத்தில் சேனை முதன்மை யாரையும் தரிசிக்கலாம். வடகிழக்கு மூலையில் திருமஞ்சனக் கிணறு உள்ளது. இப்பிரகாரத்தின் கீழ்த்திசையில் மூலவர் அருள்மிகு வரதராஜப் பெருமாளைத் தரிசிக்கச் செல்வதற்கான நுழை வாயில். இதனையடுத்து உலோகத் தகடுகள் பதித்த படிகளில் ஏறி மேல்தளத்திற்குச் செல்ல வேண்டும்.

திரேதா யுகத்தில் கஜேந்திரன் ஆராதித்த தால், இதற்கு அத்திகிரி என்ற பெயர் ஏற்பட்டதாக வரலாறு. நீண்டு கிடக்கும் சமதளத்தில் செல்கிற போது, உடலை வருடிச் செல்கிறது பூங்காற்று. கருவறை வாயிலினின்று 24 படிகள் மேலேறிச் சென்றவுடன் அத்திகிரி அருளாளர் அருள்மிகு வரதராஜப் பெருமாளீன் திவ்ய தரிசனம் கிடைக் கிறது. நெடிதுயர்ந்து நிற்கும் பெருமாளின் திருக் கோலம் பார்ப்போரைப் பரவசப்படுத்தும். மேற்கே திருமுக மண்டலத்துடன் அவர் சாதிக்கும் சேவை அற்புதம் வாய்ந்தது.

பிரம்மா மேற்கொண்ட யாகத்தின்போது அக்கினியில் எழுந்த பெருமான் ஆதலால், முகத் தில் தீப்புண்களின் வடுக்கள் இருக்கின்றன. இங்கு ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய உபயநாச்சியார் கள் இருவருடனும் உற்சவ மூர்த்தி காட்சியளிப் பதே அடியார் உள்ளங்களை நெகிழ்வித்து ஆனந்திக்கச் செய்யும்.

பெருமாளின் இவ்வரிய திருக்கோலத் தினைக் கண்டுவிட்டு அத்திகிரியை விட்டுக் கீழே இறங்கியதும் யோக நரசிம்மர், தன்வந்திரி, வலம்புரி விநாயகர், மலையாள நாச்சியார் ஆகி யோரைத் தனித்தனிச் சந்நிதிகளில் தரிசிக்கலாம்.

வெளிப்பிரகாரத்தின் வடபுறத்தில் காணப் படும் நூற்றுக்கால் மண்டபம், கலையன்பர்கள் காண வேண்டிய அரிய கலைக் கருவூலம். குதிரை, யாளி, கிளி முதலியவற்றின்மீது சவாரி செய்யும் வீரர்கள், மகளிர், மன்மதன், இரதி, பெருமாளின் பல்வேறு அவதாரங்கள் ஆகிய எண்ணற்ற நுண்ணிய வேலைப்பாடமைந்த அழகிய சிற்பங்களை இங்குள்ள தூண்கள்தோறும் காண முடிகிறது.

இம்மண்டபத்தின் நான்கு மூலைகளிலும் மேற்புறத்திலிருந்து சங்கிலியாகத் தொங்கும் கல் வளையங்களின் வடிவமைப்பு காண்போரை வியக்கச் செய்வதோடு, அவற்றினை ஒரே கல்லில் குடைந்தெடுத்த கல் தச்சர்களின் கலைத் திற மையினை உயர்த்திக் காட்டும் வண்ணம் உள் ளது. இம்மண்டபம் பதினாறாவது நூற்றாண்டில் விஜயநகரத்து அரசரால் கட்டப்பட்டதென வரலாறு கூறும்.

கலைக்கூடமாகக் காட்சியளிக்கும் இம் மண்டபத்தினையடுத்து வடபுறமிருப்பது இத்தல தீர்த்தம் ‘அனந்தசரஸ்’ என்னும் ‘அனந்த புஷ் கரிணி.’ இத்திருக்குளத்தின் நடுவில் நீராழி மண்டபமும், அதற்குச் சற்று அருகிலேயே தென் புறம் நீரால் சூழப்பட்ட சிறு மண்டபமும் உள்ளன. இச்சிறு மண்டபம் புராண வரலாற்றுப் பெருமை கொண்டது. இதன்கீழ் நீருக்கடியில் அத்திவரதர் சயனித்துக் கொண்டிருக்கிறார். இவர் அத்தி மரத்தினால் செய்யப்பட்ட திருமேனியுடையவர். பிரம்மதேவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டவர். பிரம்மனின் யாகத் தீயினின்று தோன்றியதால் சிறிது பின்னப்பட்டுவிட்டார்.


எனவே, அசரீரி மூலம் தன்னை அனந்த புஷ்கரணியில் விட்டுவிட்டுப் பழைய சீவரத்திலிருந்த சிலையைக் காஞ்சியில் பிரதிஷ்டை செய்யுமாறு கூறிய வண்ணமே, பழைய சீவரப் பெருமாளை தேவராஜப்பெருமாள் எனப் பிரதிஷ்டை செய்துவிட்டதாகத் தல வரலாறு கூறுகிறது.

பெரும் உஷ்ணத்தைத் தணிக்கவே, அத்தி வரதர் இந்தத் தெப்பக் குளத்தில் நீருக்கடியில் வாசம் செய்கிறார் என்றும் கூறுவர். வெள்ளித் தகடுகள் பதித்த பெட்டியில் சயனக் கோலத்தில் மூழ்கியிருக்கும் வரதரை, நாற்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை அனந்த தீர்த்தத்து நீரை இறைத்துவிட்டு வெளிக்கொணர்ந்து அருகிலுள்ள வசந்த மண்டபத்தில் எழுந்தருளச் செய்ததும், 48 நாட்கள் நின்ற கோலத்திலும், சயனக் கோலத்திலும் அவர் பக்தர்களுக்குச் சேவை சாதிக்கிறார்.

எனவே, நீருக்குள் சயனிக்கும் அத்தி வரதரை நாற்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே சேவிக்க முடியும். இவர் முன்னர் கடைசியாகச் சேவை சாதித்தது 1979–ஆம் ஆண்டில். அடுத்து, இவ்வாண்டு 2019 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில். இனி அடுத்த தரிசனம் என்பது 2059–ஆம் ஆண்டில்தான்.



நூற்றுக்கால் மண்டபச் சிற்பம்



மண்டபத்தில் சங்கிலி போல் கல் வளையங்கள்

அனந்த புஷ்கரணித் தீர்த்தத்தின் கீழ்ப்புறம் சக்கரத்தாழ்வார் சந்நிதியும், அடுத்தடுத்து மற்ற ஆழ்வார்களின் சந்நிதிகளும் நந்தவனமும் அமைந்துள்ளன. கோயிலின் பின்புறம் பெருந்தேவித்தாயார் அவதரித்த பொற்றாமரைப் பொய்கை உள்ளது.

இந்திய நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடித்தளமிட்ட ராபர்ட் கிளைவ், ‘மகா கண்டி’ என்னும், நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற விலையுயர்ந்த ஆபரணத்தை அருள்மிகு வரதராஜப் பெருமாளுக்குக் காணிக்கையாக அணிவித்திருக்கிறார் என்பதும், 1795 – 1798 ஆண்டுகளில் செங்கற்பட்டு ஜாகீரில் கலெக்டராக இருந்த கர்னல் லயனல் பிளேஸ் என்ற ஆங்கிலேயரும் விலையுயர்ந்த ஆபரணங்களைச் சாத்தினார் என்பதும் பெருமைக்குரியதுதானே!

இது தவிர, ஆன்மிக ஒளி பரப்பும் சங்கர மடம் இந்நகரின் ஒரு பக்கம் அமைந்து கோலோச்சுவதும், அகில உலகம் போற்றும் பேரறிஞர் அண்ணாவை, திருக்கோயிலுக்கு அருகிலுள்ள வரகுவாசல் வீதியில் தோன்றச் செய்து திருக்கச்சி எனும் காஞ்சி திவ்ய தேசத்திற்குப் பெருமையைக் கூட்டியதும், தோன்றாத் துணையாக இருக்கும் அத்திகிரி அருளாளனின் அளப்பரிய அருளினாலன்றோ!

கட்டுரை



நவராத்திரி விழா!


விழாக்கள் ஒரு நாட்டின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் நலமுற விளக்கும் சிறப்புடையன. நவராத்திரி விழா தமிழ்நாட்டு மக்களின் கலையார்வத்தையும், கலை உள்ளத்தினையும் விளக்கும் மாட்சிமை வாய்ந்ததாகும். உலகிற்கெல்லாம் தாயாக விளங்கும் சக்தியின் வழிபாடாகத் திகழ்வதே நவராத்திரி விழாவாகும். திருமகள், கலைமகள், மலைமகள் ஆகிய முப்பெரும் சக்திகளையும் முறையே மும்மூன்று நாள்களாக ஒன்பது நாள்களில் வழிபடும் விழாவாதலினால் நவராத்திரி எனப் பெயர் அமைந்தது.

மக்களின் வாழ்க்கைக்குக் கல்வி, செல்வம், வீரம் எனும் முப்பெரும் நலங்களும் மிகவும் இன்றியமையாதன என்னும் உண்மையை இவ்விழா நமக்கு உணர்த்துகிறது. அறியாமை முதலிய தீமைகளின் வடிவமாக விளங்கியிருந்த மகிடன் என்னும் அரக்கனை அறிவே வடிவமாகக் கொண்ட அம்பிகையாகிய சக்தி அழித்து உலகிற்கு நலம்புரிந்த அருட்செயலின் நினைவாகக் கொண்டாடப்படும் வெற்றிக் கலை விழாவே நவராத்திரி விழா எனக் குறிப்பிடலாம்.

“சக்தி தன் வடிவே தன்னில் தடையில்லா ஞானமாகும்” என்பது சிவஞானசித்தியார் வாக்கு. பராசக்தியானவள் இச்சா, ஞானம், கிரியா சக்தி என மூன்றாகத் திகழ்கிறாள். இம்மூன்றுள் திருமகள் சிவத்தினது இச்சா சக்தியாவாள். கலைமகள் சிவத்தினது ஞான சக்தியாவாள். மலைமகள் சிவத்தினது கிரியா சக்தியாவாள். இம் மூன்று சக்திகளையும் வழிபட்டால் செல்வமுடையவராகவும் மெய்யறிவு விளங்கப் பெற்றவராகவும் நினைத்த வற்றை நினைத்தவாறு முடிக்கும் ஆற்றல் உடையவராகவும் விளங்குவர். இக்கருத்தைத் திருஞான சம்பந்தப் பெருமானும்

“சிலைமலி மதி சிவபுர நினைபவர்
திருமகளோடு திகழ்வரே
“சிறைபுனலமர் சிவபுரமது நினைபவர்
செயமகன் தலைவரே
கனமருவிய சிவபுரநினைபவர்
கலைமகள் தர நிகழ்வரே”

என்று அருளியுள்ளார்.



டாக்டர் இராஜன் இரவிச்சந்திரன்

மக்கள் வாழ்க்கை வளம் பெற, தரம் உயர, நற்கதி அடைய நம் முன்னோர்கள் ஏற்படுத்திய பல விழாக்கள், விரதங்கள், நோன்புகள் இவற்றுள் நவராத்திரி விழா சிறந்ததொன்றாகும். சைவம், வைணவம், சாக்தம் என்ற மூன்று பிரிவுகளைச் சேர்ந்த அனைவரும் வீடுகளிலும் திருக்கோயில்களிலும் இவ் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடு கின்றனர்.


திருஞானசம்பந்தர்

அன்னையானவள் அகிலம் முழு வதும் கொலுவீற்றிருக்கிறாள். காணும் அனைத்திலும் அவள் வடிவமே திகழ்கின்றது. எல்லாவற்றிலும் அவளின் ஆற்றலே நிறைந்திருக்கிறது. சக்தியே உல கெங்கும் நீக்கமற நிறைந்து அனைத்தை யும் இயக்குகிறது. அறிவியல் முறையி லான ஆராய்ச்சி செய்து கண்ட முடி வும் இதுவே. அணுவுக்குள் அளவில் லாத ஆற்றல் சக்தி விளங்குவதும் இறை யையே உணர்த்துகிறது. அணுவுக்குள் உள்ளது சக்தி எனில் உலகம் அனைத் தும் அந்தச் சக்தியின் வடிவமேயாகும். அந்தப் பெரும் சக்தியை அகிலாண்ட கோடி நாயகியாக மனம், மொழி, மெய் களில் வழிபாடு செய்து நடைபெறுவதே நவராத்திரியாகும்.

இவ்வாறு அனைத்திற்கும் காரண மாக எல்லாவற்றையும் படைத்தளிக்கும் மகாசக்தியை எதற்காக நாம் வழிபட வேண்டும் என்ற வினாவிற்கு விடை யளிக்கிறார் மகாகவி பாரதியார்.

"வைய முழுதும் படைத்தளிக்கின்ற
மஹாசக்தி தன்புகழ் வாழ்த்துகின்றோம்.
செய்யும் வினைகள் அனைத்திலும் வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்க என்றே"

என்றும்

"எம்முயிர் ஆசைகளும் எங்கள் இசைகளும்
செயல்களும் துணிவுகளும்
செம்மையுற்றிட அருள்வாய் - நின்றன்
சேவடி அடைக்கலம் புகுந்துவிட்டோம்.
மும்மையின் உடைமைகளும் - திரு
முன்னரிட்டஞ்சலி செய்து நிற்போம்
அம்மை நற் சிவசக்தி - எமை
- அமரர்தம்
நிலையினில் ஆக்கிடுவாய்"

என்கிறார். இதன்மூலம் சக்தி வழிபாடானது நம்மை அமர நிலைக்கு உயர்த்திடும் என்பதை அறிய லாம்.

அன்னையாம் பராசக்தியை வழி பட உகந்த காலம் நவராத்திரி என்பதை கொங்கணசித்தர் தம் பாடலில்,

"பூசித்தே இப்படியே தோத்திரஞ் செய்வாய்
பூரணத்தே கேசரத்தே வார்த்தை சொல்வாள்
ஆசித்தே கன்னியுட மாதந்தன்னில்
அப்பனே நவராத்திரி அன்றைக்கே தான்
யாசித்தே தசமி மட்டும் தேவி பூசை
பண்பாகச் செய்திடிலோர் மவுனம் தங்கும்"

என்று கூறுகிறார்.

மலை மகளைக் 'கொற்றவை' என்ற அழகிய தமிழ்ப் பெயரிட்டு அழைத்து வந்த தேவியைப் பற்றி "மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த கொற்றவை நிலை" (புறத். 4) எனத் தொல்காப்பியர் கூறுகிறார். அவர் காலத்திற்கு முன்பே கொற்றவை வழிபாடானது நம் நாட்டில் இருந்திருக்கிறது என்பது இதிலிருந்து விளங்குகிறது.

மனிதன் தோன்றிய நாள் முதல் படிப்படியாக அறிவு சொல்லும் வழியி லேயே முன்னேறியுள்ளான் என்பது அறிவியலார் கண்ட உண்மை. அவ னுக்குப் பகுத்தறிவு உணர்வு ஏற்பட்ட திலிருந்து இயற்கைச் சக்திகளைப் பல்வேறு உருவங்களாக, தெய்வங்களாக வழிபட்டு வந்திருக்கிறான். அவற்றில் அன்னைத் தெய்வத்தின் நவராத்திரி

வழிபாடானது சிறந்ததாக இருந்திருக்கிறது.

வடநாட்டிலே பல இடங்களில் அறத்தை நிறுத்த உலகில் தோன்றிய பரம்பொருளான இராமபிரான் போர் செய்து இராவணனை அழித்தது இந்நாட்களிலே என்ற அடிப்படையில் இவ்விழாவானது கொண்டாடப்படுவதாகத் தெரிகிறது.

மகிடாசுரன் எனும் அரக்கன் விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் இடுக்கண் அளித்து வர, தேவர்கள் அவனது கொடுமையைப் பொறுக்காமல் இறைவனிடம் சென்று முறையிட்டனர். அப்பெருமான் பராசக்தியைத் துர்க்கா தேவி வடிவில் தோன்றி அவ்வசுரனை அழிக்குமாறு கட்டளையிட்டார்.

அத்தேவியானவள் போருக்கு எழுந்ததும் திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் அவளுக்குத் தங்கள் படைக்கலங்களை அளித்தார்கள். அவ்வசுரனுடன் அம்பாள் செய்த போர் மகாளய அமாவாசைக்கு அடுத்த நாள் தொடங்கி ஒன்பது நாள்கள் நடந்தன. பத்தாம் நாளான தசமி அன்று அவள் வெற்றி பெற்றாள். அதைத்தான் நாம் விஜயதசமி என்று அழைக்கிறோம்.

அப்போரில் அவள் வெற்றி காண்பதற்குத் துணை செய்த கருவிகளைப் பாராட்டி வழிபாடு செய்வதையே ஆயுதபூசை என்கிறோம். மகிடாசுரனது கொடுமையால் கலையறிவும், தொழில் வளமும் முடங்கிக் கிடந்ததாகவும் விஜயதசமி அன்று மறுவாழ்வு பெற்று மலரத் தொடங்கிய காரணத்தால், அன்று அனைவரும் கல்வி, தொழில் முதலியவற்றைத் தசமியன்று முதலில் தொடங்குவது வழக்கமாகவும் அமைந்துள்ளது.

காரண ஆகமத்திலும், காமிக ஆகமத்திலும் நவராத்திரி விழா கொண்டாடப்படும் முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மகாளய அமாவாசை முடிந்த பிரதமை முதல் நவமி முடிய ஒன்பது நாள்கள் நவராத்திரி விழா நடைபெற வேண்டுமென்று விதி. இதில் மகாளயம் என்றால் எல்லாம் ஒடுங்குவது என்பது பொருள். ஒடுங்கிய வற்றை மீண்டும் உண்டாக்குவதற்குச் சக்தி தேவை. அதனால் அந்தச் சக்தியின் பரிணாம காலமே நவராத்திரியாகும்.

நவராத்திரி தினங்களில் சக்தி வழிபாட்டோடு கொலு வைக்கும் மரபும் நம் நாட்டில் உண்டு. பார்க்கும் சுமங்கலிப் பெண்களையெல்லாம் பராசக்தியின் வடிவமாகக் கண்டு அவர்களை வணங்கினால், அம்பிகை



மகிழ்வாள் என்று லலிதா சகஸ்ரநாமம் உணர்த்துகிறது.

ஆகவே பெண்களுக்கு வெற்றிலையும் மஞ்சள், குங்குமமும், மலரும், சந்தனமும் கொடுத்து உபசரிக்கும் காலமாகவும் இந்த நவராத்திரிக் காலம் விளங்குகிறது. நவராத்திரி ஒன்பது நாள்களிலும் மலை அரசன் மகளாகிய உமை அம்மையை மரபுப்படி கொலுவில் எழுந்தருளச் செய்து வழிபடுபவர்களுக்கு நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் இம்மையில் கிடைக்கும். மேலும் பேரின்பமாகிய வீடுபேறும்

சித்திக்கும் என்று பேரூப் புராணப் பாடல் இயம்புகிறது.

ராஜஸ்தானில் நவராத்திரியைக் கட்க சோபனம் – கத்தி விழா என்று கொண்டாடுகின்றனர். நம் நாட்டில் நாம் ஆண்டுதோறும் இருமுறை நவராத் திரி விழாவைக் கொண்டாடி வரு கிறோம். இரண்டுமே சந்திரனின் சுழற்சி அடிப்படையில் நடைபெறுபவை. இவை வளர்பிறையின் முதல் ஒன்பது நாட்கள் ஆகும்.

முதல் நவராத்திரி சித்திரை மாதம் கொண்டாடப்படும். அதற்கு 'வசந்த நவராத்திரி' என்று பெயர். மற்றொன்று சரியாக ஆறு மாதம் கழித்து புரட்டாசி மாதத்தில் நடைபெறும். இந்த நவராத் திரிக்குச் 'சாரதா நவராத்திரி' என்று பெயர். இதில் சாரதா நவராத்தியே நம் நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் சிறப் பாகக் கொண்டாடப்படுகிறது.

நமது இல்லங்கள் தோறும், கோயில் கள் தோறும் கோலாகலமாக நவராத் திரி விழாவைக் கொண்டாடுகிறோம். ஒன்பது இரவுகளில் தேவியர் மூவரை யும் கொலுவீற்றிருக்கச் செய்து வழி பட்டுப் பத்தாவது நாளாகிய விஜயதசமி தினத்தன்று வெற்றியைக் குறிக்கும் நாளாக வழிபட்டு வருகிறோம்.

இவ்விழாவில் வடநாட்டில் அறத்தை நிலைநிறுத்த உலகில் தோன் றிய இராமபிரான் போர் செய்து, இராவணனை அழிக்கும் நாள்களாக இவ்விழாக் கொண்டாடப்படுகிறது.

மகாகவி பாரதியார்



கேரளத்தில் அரண்மனைக் கொட் டாரத்தில் நடைபெறும் நவராத்திரி விழாவிற்காக சரஸ்வதி அம்மன் பத்ம நாபபுரம் அரண்மனையிலிருந்து புறப் பட்டு, சுசீந்திரம் முன்னூத்தி நங்கை யம்மன், வெளிமலையிலிருந்து வேலா யுதப் பெருமாள் ஆகிய மூவரும் இணைந்து திருவனந்தபுரம் சென்றடை யும் நிகழ்வானது வழியில் உள்ள ஊர் களில் எல்லாம் சிறப்பாக இன்றளவும் கொண்டாடப்படுகிறது.

கர்நாடக மாநிலத்தில் மைசூரில் இந்நவராத்திரி விழா 'தசரா' எனும் மாபெரும் விழாவாகக் கொண்டாடப் படுகிறது. வங்காளத்தில் துர்கா பூசை விழா எனும் பெயரில் ஏறத்தாழ மாதம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

வடஇந்தியாவில் தசரா வேறுவித மாகக் கொண்டாடப்படுகிறது. தசரா நாள்களில் ஒன்பது நாள்களிலும் இராமாயணக் கதையை ராம்லீலா என நாடகமாகப் பல இடங்களில் நடத்து கின்றனர். ஒன்பதாவது நாள் இராமன், இராவணன், இந்திரஜித் ஆகிய மூவ ருக்கும் மிகப்பெரிய வடிவில் பொம்மை அமைக்கப்பட்டு இராமன் இருவரையும் நெருப்பிலான அம்பால் எய்து அவர் களை அழிக்கப்படுவதாக அமைகிறது.

இறைவனின் திருவருள் கருணை யானது அவனுடைய தேவி எனவும் அத்தேவி நமக்கு அன்னையாக இருந்து தோன்றாத் துணையாகத் தோன்றி அருள்புரிகிறாள் என்ற தத்துவத்தைப் பல தேவாரப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

அன்னையாக விளங்குகிற உமை யம்மை, தன்னை வழிபடும் உயிர்கட்கும் அடியவர்களுக்கும் மனநிறைவைத் தருகிறாள். நல்லியல்பை அளிக்கிறாள். தீமையை விலக்குகிறாள். நவராத்திரி நாள்களில் அன்னையை வழிபட்டு நலம் பெறுவோம்! ●

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 37 அக்டோபர் 2019 இதழ் : 9

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர் : **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ
ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள்
அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர,
பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/–
ஆண்டு சந்தா ரூ. 265/–
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/–
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

சோயா தோசை


தேவையானவை : சோயா பயறு : 100 கிராம், அரிசி : 300 கிராம், உளுந்து : 100 கிராம், வெந்தயம் : 2 தேக்கரண்டி, உப்பு, நல்லெண்ணெய் தேவைக்கேற்ப.

செய்முறை :

1. முதல் நாள் மாலையில் சோயா பயறு, அரிசி, உளுந்து, வெந்தயம் இவற்றை ஒன்றாகச் சேர்த்து ஊற வைத்து எடுக்கவும்.
2. கலவையைக் கிரைண்டரில் இட்டு, தோசை மாவுப் பதத்திற்கு அரைத்தெடுத்து, உப்பு சேர்த்து நன்கு பிசைந்து வைக்கவும்.
3. மறுநாள் காலையில் மாவை மெல்லிய தோசைகளாக வார்த்தெடுக்கவும்.
4. இரு பக்கமும் நன்கு மொறுமொறுவென்று வேகும்படி, நல்லெண்ணெய்யைக் கரண்டியில் எடுத்துத் தோசையைச் சுற்றி இடவும்.

'சோயா தோசை' தயார். இத்துடன் தேங்காய்ச் சட்னி, கொத்துமல்லிச் சட்னி, தக்காளிச் சட்னி இவற்றில் விருப்பமான ஒன்றைச் சேர்த்துச் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.

– **ராதிகா அழகப்பன்,**
விக்கிரமசிங்கபுரம்.


திருவள்ளுவர்

கட்டுரை

குறள்நேசர் எல்லீசரின் குருபக்தி

பிரான்சிஸ் ஒயிட் எல்லீசர் என்னும் ஆங்கிலேய அலுவலர் தமிழ் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் பல உயர்பதவிகள் வகித்தவர்.

1896–ஆம் ஆண்டில் அன்றைய ரெவின்யூ போர்டு என்னும் வருவாய் வாரியத்தின் செயலாளராகப் பணி புரிந்தார். அது அன்றைக்கு மிக உயர்ந்த பதவி. ஏனெனில் வருவாய் வாரியத்திற்குத் தலைவர் ஆளுநர்.

அவர் இங்கிலாந்து நாட்டிலிருந்து தமிழகம் வந்து புதுவை சாமிநாதப் பிள்ளை, இராமச்சந்திரக் கவிராயர் இருவரிடமும் தமிழ் பயின்றார். இரண்டாவதாகக் குறிப்பிடும் கவிராயரின் கவிப் பெருமையினையும் புகழையும் நாம் அறிவோம்.


கவிராயரிடம் தமிழ் கற்ற திறத்தினால் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் அளவிற்குத் தமிழில் வல்லவராக விளங்கினார் எல்லீசர்.

திருக்குறளின் பதின்மூன்று அதிகாரங்களை ஆங்கிலத்தில் நேர்த்தியாக மொழிபெயர்த்துள்ளார்.

தமிழ் கற்றுத் தமிழில் பாப் புனையும் அளவுக்கு உயர்ந்த இவர், போப், கால்டுவெல் ஆகியோர்க்குத் தமிழ் மொழியில் ஆர்வம் ஏற்பட முன்னோடியாகவும் விளங்கியவர்.

தமிழ்மொழியிடத்துத் தீராக் காதல் கொண்ட இப்பெரியார், தமிழ்ப் புலமையால் தமிழன்னைக்குத் தொண்டு செய்வதற்காகப் பழைய ஏடுகளையெல்லாம் சேமித்து வைத்திருந்தார். பொல்லாத விதி அவரை இளம் வயதிலேயே இறைவனிடம் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டது.

சென்னைக் கல்விக் கழகத்தில் தனது ஆசிரியர் இராமச்சந்திரக் கவிராயரையும் உறுப்பினராக்கி மகிழ்ந்தார்.


ப. சோமசுந்தர வேலாயுதம்

இதனால் கவிராயரிடம் எல்லீசருக்கு இன்னும் நெருக்கம் ஏற்பட்டது. அவர் இருக்கும் காலத்தில் தனது ஆசிரியரான இராமச்சந்திரக் கவிராயருக்கு ஒப்பற்ற கவி புனைந்து படைக்க வேண்டுமென எண்ணிப்

ப. சோமசுந்தர வேலாயுதம்

பாடல் ஒன்றைப் படைத்துள்ளார்.

அப்படி ஒரு பாடலைத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரையன்றி வேற்று மொழிக்காரரால் படைத்தல் எளிதல்ல. அப்பாடலில் தமிழர் மட்டுமே தெரிந்த சமயக் கருத்துக்கள் அடங்கியுள்ளன.

தமிழில் அத்தனை புலமை பெற்றவராக விளங்கியிருப்பது அறிந்து வியப்பு மேலிடுகிறது. இவருக்குப் பின்வந்த வேற்று நாட்டினர் யாரும் தமிழ் கற்றுத் தந்த தங்கள் ஆசானுக்குப் பாடல் புனைந்து படைத்ததில்லை.

“செம்மையான தமிழுக்குத் தலைவராகிய அகத்தியரும், இணையற்ற ஆயிரம் தலையையுடைய ஆதிசேடனும், யாழினை அருமையாக இசைத்து இசை பாடவல்ல நாரதனும் எல்லோரும் துதிக்கின்ற முருகனைப் பாடும் பாவலராகிய இராமச்சந்திரக் கவிராயரைப் பார்த்தால், அவரைப் போலத் தங்களால் கவி புனைந்து பாட இயலவில்லையே என்பதற்காக நாணமடைந்து முறையே மலையினும், பாதாளத்திலும், வானுலகத்திலும் விரைந்து போய்த் தங்களை ஒளித்துக் கொள்வர்” எனக் கற்பனையோடு கருத்தமைந்த அழகிய கவி பாடிக் கவிராயருக்கு அளித்தார் என்றும் நின்று நிலவும் இப்பாடல் தெவிட்டாமல் இனிக்கிறது. அப்பாடல் :

“செந்தமிழ்ச் செல்வனு மோரா யிரந்தலைச்
சேடனும்யாழ்
சுந்தரத் தோடிசை வல்லோனும் யாவருந்
தோத்திரஞ்செய்
கந்தனைச் சொல்லுங் கவிராமச் சந்திரனைக்
கண்டுவெட்கி
யந்தர வெற்பிழி பாதாளந் தேடி யடங்கினரே”

(இராமச்சந்திரக் கவிராயர் மீது எல்லீசு துரை பாடியது)

●



பிம்பம்

என்னைப் போல் அது இருந்தாலும்
அது நானில்லை.

வித்தியாசமே இல்லை என்றாலும்
அது நானில்லை.

நான் நானாகவே இருக்கும்
நேரங்களிலும்
அது நானில்லை.

நான் நானாக இல்லாத நேரங்களிலும்
அது நானில்லை.


ஒளி இருந்தாலும் மட்டுமே
என்னைக் காட்டுவதால்
அது எப்படி நானாக முடியும்?

ஒளி மறைந்து இருள் கவ்வும்
வேளைகளில் மட்டும்
கண்கட்டி வித்தையாய்
காணாமல் போகும் அது
நிச்சயம் நானில்லை.

அது நானில்லை எனும் பட்சத்தில்
யார்தான் அது?

என்ன சொல்ல?!

– ராஜ்ஜா




சிங்கப்பூர் மகாலெட்சுமி நாராயணன்

சிறுகதை



மாயத் தாகம்

அருள்மணியின் மனதில் பெருமளவு திருப்தியும், ஒருவிதப் பெருமையும் நிறைந்திருந்தன. நிலவொளியில் தன் மாடியறையின் பால்கனியில் இரவுநேரக் குளுமைக்காகச் சற்றுநேரம் நின்றிருந்தார். மனம் நிம்மதியை உணரும்போது இவ்வாறு தனிமையில், இரவின் ஆளுமையை ஆழ ரசித்து அனுபவித்துத் திருப்தி கொள்வார். தென்றலோடு கலந்து வாசம் வீசும், வீட்டைச் சுற்றியுள்ள அழகிய பூந்தோட்டத்தை உயர நின்றவாறு பெருமிதத்தோடு ரசிக்கும் பாவனையில், ஆழ மூச்சிழுத்து வெளியிட்டுக் கொண்டார்.



தன் வீட்டின் அழகிய தோற்றத்தை எண்ணி அடிக்கடி கர்வம் கொள்வதுண்டு. சுற்றியுள்ள வீடுகளிலேயே சற்று உயரமான வீடு அவருடையதுதான். பூர்வீக வீட்டைப் பழமை மாறாமல் சற்று வித்தியாசமாக, பார்ப்பவர் யாவரும் விழி சிமிட்டாமல் அதன் அழகில் பிரமித்துப் போகுமளவுக்கு மிக நேர்த்தியாகக் கட்டியிருப்பதில் தனிப் பெருமை அவருக்கு. எதிலும் தனித்துவத்தோடு மிளிர வேண்டுமெனப் பிரயத்தனப்படுபவர். தன் நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் தனி அடையாளத்தோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்.

அவரது பேச்சிலும், செயலிலும் சுய கௌரவமே மேலோங்கியிருக்கும். தனது சந்தோஷத்தையும், கவலையையும் வெளிப்படுத்துவதில்கூட கவனமாக இருப்பார்.

இப்போது அவரது மனமகிழ்ச்சிக்குக் காரணம் தனது ஒரே மகனின் திருமணம்தான். சக நண்பர்கள், அவர்களது பிள்ளைகளின் திருமணம் நடத்தியதைவிடத் தனித்துவமாக அனைவரும் ஆச்சரியப்படுமாறு தன் இல்லத் திருமணம் நடக்க வேண்டுமென்று அதற்காகப் பிரயத்தனம் மேற்கொண்டார். புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாபெரும் அழகிய திருமண மண்டபத்தில் நடக்கப் போகும் முதல் திருமணமே தனது இல்லத் திருமணம் என்ற பெருமைக்கு, மேலும் பெருமை சேர்க்கும் விதமாகப் பெண்வீட்டார் பின்னணியும் அமைந்திருந்தது.

> அம்மாவைப் போலவே கறுத்த நிறமானாலும் களையான முகம் அவனுக்கு. சிறுவயதிலிருந்தே அம்மாவோடு சேர்ந்து உழைத்தவன். அமைதியானவன், மகனை நன்றாக வளர்த்திருப்பதாய்ப் பெருமை பெற்றோர்க்கு.

விதவிதமான சாப்பாடு வகைகள், மணமக்கள் ஊர்வலம், வரவேற்பு, விருந்தாளிகள் உபசரிப்பு, பிரபல சினிமா இசையமைப்பாளரின் இசைக்கச்சேரி, திருமணத்தில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் தரவிருக்கும் வித்தியாசமான விலையுயர்ந்த

அன்பளிப்புகள் எனப் பெருமளவில் தன் கௌரவத்தை நிலை நாட்டும் வகையில் நடத்திக் கொண்டிருப்பதில் சந்தோஷம் கொண்டார்.

பார்ப்பவர்கள், கேட்பவர்கள், பழகியவர்கள் என அனைவரும் பிரமித்துப் போக வேண்டுமென்ற எண்ணத்தில் எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்தார். அதிலும் தன் காதுபடவே எல்லோரும் தன்னைப் புகழ்வது குறித்து உச்சிகுளிர்ந்து போனார்.

தன்னைச் சுற்றி வட்டமமைத்துக் கொண்டு தனது அடையாளத்தை வெகுமுயற்சி மேற்கொண்டு, அதை அடைந்துவிட்டதான மாயையில் வாழ்கிறார். அவரது மனைவி, பிள்ளைகளும் இதையே பின்பற்றுகின்றனர்.

முழுநிலவு தரும் வெளிச்சத்தில் தோட்டத்தின் மலர்கள் பளிச்செனச் சிரித்தன. வெவ்வேறு மலர்களின் ஒருமித்த வாசனையை ஆழச் சுகித்தார். மனமுழுவதும் வியாபித்திருக்கும் சந்தோஷத்தில் தாமாகவே இதழ்கள் விரிந்தன. அவர் ஆழ்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் அழகான இரவின் அமைதியை, கணீரென்ற குரலால் கலைத்தார் மாணிக்கம்!

அங்கே கண் எட்டும் தூரத்தில் பொன்னியம்மாளின் குடிசையிலிருந்து தான் வந்தது அந்தக் குரலொலி. தெரு விளக்கின் மங்கிய ஒளியோடு, முழு நிலவின் ஒளியும் சேர்ந்துகொள்ள, ஓட்டு வீடுகளும் குடிசைகளுமாக நிரம்பியிருக்கும் பக்கத்துத் தெரு அமைதியோடு, அழகோவியமாய்க் காட்சியளித்தது.

மாணிக்கத்தின் குரலொலியில் வாசலில் பாய் விரித்துப் படுத்திருந்த பொன்னியும், அவள் கணவனும் எழுந்தனர்.

“வாண்ணே! டேய் கதிரேசா... மாமா வந்திருக்கு, நாற்காலியைக் கொண்டாப்பா...” வீட்டின் உள் நோக்கிக் குரல் கொடுத்தவாறு கட்டையான தலைமுடியைக் கையால் தட்டித் தூக்கிச் செருகினாள். துரு அரித்து நிறமிழந்த இரும்பு நாற்காலியை எடுத்து வந்தான் நடுமகன் முருகேசன்.

“என்னா... பொன்னீ... மாமியாராகப் போற...! சந்தோஷமா...?” மாணிக்கத்தின் வார்த்தையில் வெற்றிலைக் கறைப்பற்கள் தெரியச் சிரித்தாள்.

“நிச்சயத்துல நீ இல்லாத கொற தான்ணே...! எனக்குனு பொறந்த பொறப்பிருக்கா...? நீதானேண்ணே எல்லாம். நீ ஊருக்குப் போயிருக்கேன்னு மதனி சொல்லிச்சு.”

“முதலாளி தோப்புல... ஒரு வார வேலை. நான் போகலைன்னா ஒன்னும் நடக்காது பொன்னீ அதான்...” பெருமை பொங்கியது. “என்னா மாமா தூக்கக் கலத்துல இருக்கியா...?”


பொன்னியின் கணவன் சின்னராசு தலையைச் சொறிந்தவாறு “அட போ மாமா... தூக்கமே வரமாட்டேங்குது...” குறைபட்டுக் கொண்டான்.

“எப்படி வரும்? கல்யாணத்தை வெச்சுகிட்டு...” என்ற மாணிக்கத்தின் வார்த்தையில் அனைவரும் சிரித்துக் கொண்டனர்.

அருள்மணியின் வீட்டுக்குக் கீரைக் கட்டுக்களைச் சுமந்து வரும்போது பொன்னியம்மாளைப் பார்த்ததுண்டு. “மகாலெட்சுமி! முதலில் உன் கையால வியாபாரம் பண்ணினா அன்னிக்கு வியாபாரமே நல்லா இருக்கும்...” என்ற வார்த்தைக்காகவே அவரது மனைவி ஏதாவது வாங்குவாள்.

வழக்கமாகத் தனது அமைதியைக் கலைக்கும் விதமாக ஏதேனும் சத்தம் கேட்டால் பால்கனியிலிருந்து உள்ளே திரும்பிவிடுவார். இன்றிருந்த நிறைவான மனநிலையில் ஏனோ உள்ளே செல்லத் தோன்றவில்லை. தன்னிச்சையாகவே அங்கே நிகழும் நிகழ்வைக் காணும் ஒரு பார்வையாளராகவே மாறியிருந்தார்.

“நம்ம தெருவே உன்னைப் பத்தி தான் பேசுது பொன்னீ!” மாணிக்கத்தின் வார்த்தையில் பெருமை பொங்கத் கணவனைப் பார்த்தாள். மனைவியை எண்ணி அவர் விழிகளிலும் பெருமை வழிந்தது. அவர் தேவையின்றிப் பேச மாட்டார். இவள் பேச்சுச் சாமர்த்தியம் மிகுந்தவள்.



அவர் வீட்டுக்கு வருவதும் தெரியாது, வெளியே செல்வதும் தெரியாது. அதிர்ந்தும் பேசமாட்டார். மூன்று மகன்களில் மூத்தவன் கதிரேசன் அப்பாவைப் போன்ற குணமுடையவன். இளையவர்கள் இருவரும் ஒன்றுசேர்ந்தால் போதும் வீடே இவர்களது சத்தத்தால் நிரம்பியிருக்கும்.

“டேய்... நீ ஏன்டா குப்புற விழுந்து படுத்திருக்க...?” எதையுமே காதில் வாங்காமல் படுத்திருந்தான் கடைக்குட்டி மகன் குமரேசன்.

“யப்பா... உனக்குத் தெரியுமா? இன்னைக்கு நம்மாளு கல்யாணச்

சாப்பாட்டுக்குப் போயிருக்காரு... உள்ளேயே வுடலயாம்...” கொல்லெனச் சிரித்த சிரிப்பில் கோபம் கொப்பளிக்க எழுந்து உட்கார்ந்தவாறு சின்ன அண்ணனை முறைத்தான்.

“எங்கேடா போன? அவன் சொல்றது உண்மையா?” பொன்னியம்மா கேட்டாள்.

“அந்தப் பெரிய கடைக்காரவுக வூட்டுக் கல்யாணம். பத்திரிகை இருந்தாதான் உள்ளேயே போக முடியுமாம்... பிரியாணிக்கு ஆசைப்பட்டுப் போயிட்டான்.” அவனுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை... அவனோடு மாணிக்கமும் சேர்ந்துகொள்ள கோபத்தால் முகம் சிவந்தது.

“நான் அங்கேயெல்லாம் போகலை” – வெடுக்கெனச் சொன்னான்.

“ஏ! தெரியும்டி... நீ தையக்காரண்ணே ஓசியாக் கொடுத்த சொக்காவைப் போட்டுகிட்டு போகும்போதே நினைச்சேன்...”

“இவனுக்கெப்படித் தெரியுமாம்...!” வெகுண்டான்.

“நானும் வந்திருந்தேன்ல...” என்றபோது எல்லோருமே சிரித்தனர்.

புதுமாப்பிள்ளை மிடுக்கில் அங்கு நடக்கும் கேளிக்கைகளில் பங்கேற்க மனமின்றி உள்ளேயே இருந்தான் கதிரேசன்.

“யண்ணே! பொண்ணுக்குத் தோடு, மூக்குத்தி போட்டு, மாப்பிள்ளைக்கு ஒரு பவுன்ல மோதிரம் போடுறாங்கண்ணே...” பெருமை பொங்கக் கூறினாள்.

“ஆங்...! பின்னே? நம்ம கதிரேசன் அழகுக்கு மோதிரம் போடலைனா எப்படி?”

“மூக்கம்மாக்காகிட்டச் சொல்லி போன வாரம் காலியான வூட்டுக்கு அட்வான்ஸ் ஐந்நூறு ரூபா கொடுத்துட்டேன். கல்யாணமானதும் அதுக நிம்மதியா இருக்கட்டும், என்னண்ணே சொல்ற...?”

அம்மாவின் வார்த்தைகள் செவிகளில் தேனாகப் பாய, அவன் கனவுலகத்துக்கே சென்றுவிட்டான்.

“பார்த்தியா மாமா? என் தங்கச்சி எப்படி யோசிச்சுச் செய்து பாரு.”

“இன்னும் கூறப்புடவை, தாலி எடுக்கணும் அவ்வளவுதான்ணே...”

“ஆத்தா...! எங்களுக்குப் புது சட்டை?”

“தீபாவளிக்கு எடுக்கலாம்டா...” சின்னராசா குறுக்கிட்டார்.

“போப்பா... போன தீபாவளிக்கு அண்ணன் கல்யாணத்துக்கு எடுத்துத் தர்றேன்னு சொன்ன...?” குமரேசன் சிணுங்கினான்.

“அதானே...? புதுச்சட்டை போட்டுட்டுப் போனாத்தானே நம்மை எந்த இடத்திலும் உள்ளே வுடுவாங்க.. கெத்தா இருக்கும்.”

கேலியாக அவனைச் சீண்ட, பாய்ந்து வந்து அடித்தான். தம்பியின் அடியை வாங்கிக் கொண்டே அடக்க முடியாமல் சிரித்தான்.

“அட வுடுறா, அவனோடு வம்பிழுக்காதே. யப்பா கதிரேசா... வா வெளியே. உன் கல்யாணத்தைப் பத்திதான் பேசறோம்” மாணிக்கம் சத்தமாகக் குரல் கொடுத்தார்.

“அண்ணே கனாக் காணுது மாமா... வராது” – தம்பியின் வார்த்தை கேட்டு வெளியே வந்தவன் “வாங்க மாமா... தூங்கிட்டேன்...” என்றான்.

“நீ தூங்கினது மூஞ்சியில தெரியுதுண்ணே... போய் திரும்பவும் தூங்கு போ...” என்றபோது அசடுவழிய நின்றான். பெரிய மகனைப் பார்த்த பொன்னியின் முகத்தில் பெருமளவு நிம்மதி தெரிந்தது.

“கோயிலில் தாலி கட்டணும்ணே... மதியச் சாப்பாட்டுக்கு எத்தனை பேருனு... நம்ம சாமியண்ணே கடையில சொல்லிடுவோம்.”

“சாமிகிட்ட, சாப்பாடு ருசியா இருக்கனும்னு சொல்லிடுவோம். பெண் வூட்டுகாரவககிட்ட நம்ம கௌரவத்தை வுட்டுக் கொடுக்கக் கூடாது. என்ன மாமா சரிதானே?” மாணிக்கத்தின் வார்த்தையை ஆமோதித்தார் சின்னராசா.

“ஆத்தா! போட்டோ புடிக் கணும்...”

“எதுக்குடா போட்டோல்லாம்...?”

“தையக்காரண்ணனும், நானும் செல்ப்பீ எடுத்தோம் மாமா... அம்புட்டு அழகா இருந்துச்சு தெரியுமா?” – விழிகள் விரிந்தன.

“அதென்னடா ஜெல்ப்பீ...?” – மாணிக்கத்தின் உச்சரிப்பைக் கேட்டுச் சிரித்த குமரேசன் திருத்திச் சொன்னான். “செல்ப்பீ... மாமா...”

“அடேயப்பா...” மகனின் வார்த்தையில் பிரமித்துப் போய் நெட்டி முறித்தாள் பெருமிதத்தோடு.

“அட கல்யாணத்துக்குத் தையக்காரத் தம்பீ வரும்போது அவன் போனிலயே படம் எடுத்துடலாம் என்ன பொன்னீ?” – கணவனின் விபரமான பேச்சில் இன்னும் பெருமை பொங்கியது பொன்னியம்மாளுக்கு.

அனைத்தையும் ரசித்தவாறே நின்றான் கதிரேசன். அம்மாவைப் போலவே கறுத்த நிறமானாலும் களையான முகம் அவனுக்கு. சிறுவயதிலிருந்தே அம்மாவோடு சேர்ந்து உழைத்தவன். அமைதியானவன், மகனை நன்றாக வளர்த்திருப்பதாய்ப் பெருமை பெற்றோர்க்கு.

“கதிரேசன் தங்கமான பையன்” என்றெடுத்த பெயரால்தான் சந்தை காய்கறிக் கடைக்காரனின் மகள் கிடைத்திருக்கிறாள்.

எல்லோருமாகச் சேர்ந்து கல்யாணச் செலவைப் பற்றிச் சந்தோசத்தோடு பேசும் அந்த அழகில் தன்னையுமறியாமல் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தார் அருள்மணி! இவ்வளவு நாட்களில் இத்தகைய நிகழ்வுகளைப் பார்த்ததில்லை. பெரும்பாலும் அத்தெருவில் இரவுப்பொழுதில் ஒருவித மௌனமே நிலவியிருக்கும். பகலெல்லாம் கூலிவேலை செய்து வந்த களைப்பில் அயர்ந்து உறங்கி விடுவதால் எந்த சப்தமும் பொதுவாகக் கேட்பதில்லை.

இருபது லட்சங்களை அலட்சியமாகத் தான் செலவழிக்கும் திருமணத்தை இருபதாயிரத்தில் சந்தோசமாக நடத்தத் துடிக்கும் பொன்னியம்மாளின் உருவத்தை அப்போதுதான் நன்றாக நோக்கினார். பெரிதாக வயதொன்றுமில்லை. நாற்பதிலிருந்து இரண்டு, மூன்று அதிகமிருக்கும் அவ்வளவுதான். ஆனால், வாழ்க்கைப் பாட அனுபவங்கள் நெற்றிச் சுருக்கத்தில் தெரிந்தன. கல்யாணச் செலவைக் கணக்கிடும் பாங்கில் பொறுப்போடு சந்தோசமும் நிறைந்திருந்தபோது நிலவின் பிரகாசத்தில் அந்தக் குடிசையும் ஜொலித்தது.

விடியும் முன்னே வேலைக்கு ஓடும் உழைப்பாளிகள் பொழுது சாய்ந்ததும் எல்லோருமாய்ச் சேர்ந்து தெருவெளிச்சத்தில் கலகலவெனப் பேசி, சாப்பிட்டு அசதியில் அயர்ந்து உறங்கும் சுகம்! அந்த நிறைவான சந்தோசத்தில் திருப்தியாகக் காட்சியளித்தனர். அவர்கள் உயரத்தைத் தொட்டுப் பார்க்க ஆசைப்பட்டதில்லை. எதையும் தேடி ஓடவுமில்லை. எதிர்பார்ப்புகள் ஏதுமில்லாததால் ஏமாற்றமுமில்லை... அதனாலேயே அவர்களிடம் எப்போதுமே நிலையாகச் சந்தோசம் குடிகொண்டிருந்தது. அங்குள்ள ஒவ்வொருவர் முகமும் திருமணம் பற்றிய சந்தோசத்தில் பிரகாசித்தது. குறிப்பாகப் பொன்னியின் முகம்!

கூர்ந்து நோக்கினார். தன்னிடம் குடிகொண்டிருக்கும் அதே மனநிறைவு, அதே பெருமிதம்... அதே களிப்பு... தன்னை ஆட்கொண்டிருக்கும் எல்லாவித உணர்வுகளையும் அவளிடத்திலும் கண்டார். தனக்கும், அவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஒன்றைத் தவிர!

அவர் உயரமான வீட்டில் நின்று கொண்டிருக்கிறார். அவர்கள் மண் தரையில் அமர்ந்திருக்கின்றனர்.

தன் ஆளுமையைச் செலுத்திப் பூமியெங்கும் அழகைத் தெளித்துக் கொண்டிருக்கும் நிலவைப் பார்த்தார். வட்டநிலவு ஒய்யாரமாக, எல்லா இடத்திலும் ஒரே மாதிரியான ஒளியைத் தந்து சிரித்துக் கொண்டிருந்தது!

●



கட்டுரை

விண்ணைத் தேடி 2



ரைட் சகோதரர்கள் தங்களது படிப்பை நிறுத்திவிட்டுச் சைக்கிள் கடையைச் சிறப்பாக நடத்தினர். சைக்கிள் ரிப்பேர் செய்வது மட்டுமல்லாமல், சைக்கிள் பாகங்களை உற்பத்தி செய்வது, புதுவிதமான சைக்கிள் செய்வது, சைக்கிள் ஓட்டும்போது எதிர்க்காற்றின் தடையைக் குறைப்பது முதலிய முயற்சிகளில் இறங்கினர்.

இந்த முன்னேற்றங்களுக்கு மத்தியில் அவர்கள் ஆழ் மனதில் புதைந்துள்ள விமானம் செய்து நாம் பறக்க வேண்டும் என்ற வேட்கை குறையவில்லை. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அதைப்பற்றிச் சிந்தித்தனர். பறவைகள் பறக்கும் விந்தையைக் கூர்ந்து கவனித்தனர். பட்டம் செய்து பறக்க விட்டனர், புத்தகம் படித்தனர், கலந்துரையாடினர்.

மாபெரும் விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுநர்கள் பலர், “மனிதனால் பறவை மாதிரி பறக்க இயலாதது மட்டுமல்லாமல், பறக்கும் இயந்திரம் என்றும் செய்ய முடியாது” என அடித்துக் கூறியிருந்தனர்.

சிறுவர்களான ரைட் சகோதரர்கள் விமானத்தைச் செய்து பார்க்க வேண்டும் என்று கனவு கண்டபோது, அவர்கள் மனதில் ஒரு தெளிவான குறிக்கோள் உருவானது. இது சாத்தியமா என்று அவர்கள் யோசிக்கவே இல்லை.

1896, பழைய நூற்றாண்டு முடியும் காலகட்டத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி வில்பரை விண்ணை நோக்கி இழுத்தது என்று சொல்லலாம். ஆட்டோ லிலியென்தால் (Otto Lilienthal) என்ற புகழ் பெற்ற ஜெர்மானியர், பறப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டு *1869* முதல் பல ஆராய்ச்சிகள், சோதனைகள், தனது சகோதரன் உடன் இணைந்து செய்தவர்; ‘கிளைடர்’ (Glider) என்ற இயந்திரம் இல்லாத விமானம் செய்து அதில் பறக்க முயன்று பல முறை சிறிது தூரம் பறந்து வெற்றி கண்டவர்.

அவரது கிளைடர் எடை குறைந்த ஒன்று. மரப்பட்டை, துணியால் செய்யப்பட்ட ஒரு பெரிய பட்டம் என்று சொல்லலாம். *1896*–ஆம் ஆண்டு ஒரு சோதனைப் பறப்பின்போது, கிளைடர் தரையில் மோதி லிலியென்தால் காலமானார்.

லிலியென்தாலின் முன்னேற்றத்தை ஆர்வத்துடன் கவனித்து வந்த வில்பரின் மனதில் இந்த சோக நிகழ்ச்சி புது வைராக்கியம், தெம்பைக் கொடுத்தது. “பறவைகள் மாதிரி பறக்கக் கற்றுக் கொள்வது மட்டுமல்லாமல், பறப்பது

பேரா. டாக்டர் க. பாஸ்கரன்

பற்றி விஞ்ஞான அடிப்படையில் புரிந்து கொள்வது மிக மிக அவசியம்” என்று லிலியென்தால் சொன்னது ரைட் சகோதரர்கள் மனதில் ஓர் அறிவுரை மாதிரி ஒலித்துக் கொண்டே இருந்தது.

அவர்கள் மிகவும் மதித்த ‘லிலியென்தால் ஏன் தோல்வியடைந்தார்’ என்று முதலில் சிந்தித்தனர். ஏற்கனவே அவர்கள் யோசித்திருந்த சில விஷயங்கள் இதற்கு விடையளித்தன. சைக்கிள் ஓட்டுதல், பறவைகள் பறக்கும் விதங்கள் மூலம் சரி நிலை (Balance), சமநிலை (Equilibrium) என்ற இரண்டு அம்சங்களின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தனர்.

லிலியென்தால் தனது உடம்பு, கை கால் அசைவுகள் மூலம் கிளைடரின் போக்கைக் கட்டுப்படுத்தியிருக்கிறார் என்பதை ஒரு குறையாக உணர்ந்தனர். உயரத்தில் பறக்கும் வட்டமிடும் பருந்துகளை, கழுகுகளைப் பார்த்தால் இது புரியும். இறக்கைகளை அழகாக, சீராக அசைத்து, வளைத்து, சிறிது திருகி (Twist) திசை திருப்புதல், இறங்குதல், ஏறுதல் முதலிய சிக்கலான வேலைகளை அனாயசமாகச் செய்கின்றன. தங்களது உடம்பின் அசைவுகளை அவ்வளவு உபயோகப்படுத்துவதில்லை.

பறவைகளின் உடம்பு, அவை எப்படிப் பறக்கின்றன என்பதைப் பற்றி வீட்டில் தனது தந்தை வாங்கி வைத்திருந்த புத்தகங்கள் மூலம் ஓரளவு தெரிந்து கொண்டனர். எடியென்னே ஜூல்ஸ் மரீ (Etienne - Jules Marey) எழுதிய Animal Mechanism என்ற புத்தகத்தையும், பெல் பெட்டிகுரூ (J. Bell Pettigrew) எழுதிய Animal Locomotion என்ற இரு புத்தகங்களையும் படித்து நன்கு புரிந்து கொண்டனர். கிளைடர்களை வேறு வகையில் நேரடியாகக் கட்டுப்படுத்தும் வகைகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர்.

ஒரு முறை தங்களது சைக்கிள் கடைக்கு வந்திருந்த ஒருவர் நீளமான அட்டைப் பெட்டி ஒன்றை விளையாட்டாக, தலைப்பகுதியைப் பிடித்துக் கொண்டு கீழ்ப் பகுதியைத் திருகுவதை (Twist) வில்பர் பார்த்திருக்கிறார். கிளைடரை எப்படிக் கட்டுப்படுத்துவது என்ற சிந்தனையில் மூழ்கியிருந்த வில்பருக்கு இந்தச் சிறு நிகழ்ச்சி ஒரு தலை சிறந்த யோசனையைத் தந்தது.

அதாவது, பறந்து கொண்டிருக்கும் போது கிளைடரின் (நீளப்பட்டையான) இறக்கைகளைச் சிறிது திருகி, எதிர்த்து வரும் காற்றின் போக்கை மாற்றிக் கிளைடரைத் திசை திருப்ப லாம், ஏற்றலாம், இறக்கலாம் என்பதைக் கற்பனை செய்து மனக்கண்ணில் பார்த்தார்.

சகோதரர் இருவரும் இந்த நல் யோசனையைச் செயலுக்குக் கொண்டு வந்து நிரூபிக்க ஒரு சோதனை செய்தனர். இந்தச் சகோதரர்கள் பட்டம் பறக்க விடுவதில் ஆர்வம் உள்ளவர்கள். கிளைடர் ஒரு சிக்கலான பெரிய பட்டம் என்று உணர்ந்தனர்.

ஒரு வித்தியாசமான பட்டம் செய்தனர். இரண்டு செவ்வக (எடை குறைந்த) மரச்சட்டங்கள், நடுவில் துணி (மூங்கில் தட்டி மாதிரி) செய்து, அவற்றை ஒன்றுக்கு மேல் ஒன்றாக, தேவையான இடைவெளி விட்டு நான்கு குச்சிகளால் இணைத்தனர். பக்கவாட்டில் நான்கு பக்கங்களிலும் திறந்த ஒரு பெட்டி மாதிரி அமைந்த இதுதான் அவர்களின் பட்டம்.

இந்தப் பட்டத்தை நீள்வசத்தில் திருகும்படிப் பொருத்தமான கயிறுகள் கட்டி, இரண்டு கயிறுகளைத் தனித்தனியே ஒவ்வொரு கையிலும் வசமாகப் பிடித்துப் பட்டத்தைப் பறக்கவிட்டு அதன் போக்கைக் கட்டுப்படுத்தினர். அதாவது, பட்டத்தைக் கட்டுப்படுத்தி, ஏற்றி, இறக்கி, திசை திரும்ப வைத்து ஒரு சாதனை புரிந்தனர்.

பறக்கும் பட்டத்தைத் தாங்கள் கட்டுப்படுத்த முடிந்தது, நிஜப் பிரச்சனையாகிய கிளைடரைத் தங்களால் கட்டுப்படுத்த முடியும் என்ற ஊக்கத்தை, நம்பிக்கையை ரைட் சகோதரர்களுக்குக் கொடுத்தது.

முப்பது வயதைத் தாண்டிய வில்பர் தனது தம்பியுடன் களத்தில் இறங்க



முடிவு செய்தார். இந்தச் சமயத்தில் வில்பர் முக்கியமான காரியம் ஒன்று செய்தார். நவீன விஞ்ஞானம் ஒரு கூட்டு முயற்சி என்பதை வில்பர் உணர்ந்தார். இதைத்தான் நியூட்டன், ‘மாபெரும் மனிதர்களின் தோள்களில் நிற்கிறேன்’ (Standing in the shoulders of giants) என்று கூறினார்.

வில்பர், ஸ்மித்சோனியன் (Smithsonian) இன்ஸ்டிட்யூட்டிற்கு ஒரு கடிதம் எழுதினார். 1846–இல் நிறுவப் பட்ட ஸ்மித்சோனியன் இன்ஸ்டிட்யூட், அந்தக் காலத்திலேயே கல்விக்கூடங்கள், அருங்காட்சியகங்கள், மிருகக்காட்சி சாலை, ஆராய்ச்சி நிறுவனங்கள் கொண்ட ஒரு மாபெரும் நிறுவனம்.

கடிதத்தில், தனக்கு உள்ள நீண்ட காலக் கனவைப் பற்றி எழுதி, “விமானம் செய்து பறப்பதற்கு இதுவரை மற்ற வர்கள் பாடுபட்டுக் கண்ட முன்னேற் றங்கள், தோல்விகள் பற்றிய விவரங்கள் தருமாறு” கேட்டார். ஆர்வத்துடன், தங்களிடம் இருக்கும் எல்லா விவரங் களையும் சிறு புத்தகங்களையும், ஸ்மித் சோனியன் இன்ஸ்டிட்யூட் அனுப்பி வைத்தது.

ஒரு புத்தகம், Mouillard எழுதிய Empire of the Air என்ற ஆங்கில மொழி பெயர்ப்பு, சகோதரர்களுக்கு மேலும் ஊக்கத்தை அளித்தது. கிடைத்த விபரங் களைச் சகோதரர்கள் ஆர்வத்துடன் படித்தனர், ஆராய்ந்தனர். தாங்கள் வெற்றிபெற வாய்ப்பு உண்டு என்ற நம்பிக்கை மேலும் கூடியது. முக்கியமாக Empire of the Air புத்தக ஆசிரியர் ஒரு தீர்க்க தரிசனமாகச் சொன்ன வார்த் தைகள் அவர்களை ஈர்த்தன.

“By merely observing with close attention how the winged tribes perform their feats, by carefully reflecting on what we have seen and above all, by striving correctly to understand the modus operandi of what we do see, we are sure not to wander far from the path, which leads to eventual success.”

சுருக்கமாக, ‘பறவைகளை, அவற் றின் சாகசங்களை உற்றுக் கவனியுங் கள்... நாளடைவில் வெற்றி கிட்டும்.’

சகோதரர்கள் சிந்தித்தனர். ‘நாம் கிளைடர் செய்துவிடலாம். ஆனால், கிளைடர் பறக்க வேகமாக அடிக்கும் காற்று தேவை. நம் ஊரில் (Dayton, Ohio) காற்று குறைவாயிற்றே!’

எனவே, தங்கள் நாட்டில் உள்ள தலைமை வானிலை மையத்திற்குக் கடிதம் எழுதி, தங்களது நோக்கத்தைத் தெரிவித்து, காற்று மிகுதியாக உள்ள பகுதிகள் பற்றி விசாரித்தனர்.

உடனே, ‘கலிபோர்னியா மாகா ணத்தில் கடற்கரையில் பல இடங்கள் உள்ளன. ஆனால், பாறை மிகுந்த கட் டாந்தரையான அந்தக் கடற்கரைகள் உங்களுக்குச் சரிப்பட்டு வராது. மிகவும் மணற்பாங்கான ‘வடக்குக் கரோலினா’ (North Carolina) கடற்கரைதான் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யும். அதிலும் அருகில் உள்ள Kill Devl Hill’ என்ற மணல் குன்றுகள் நிறைந்த கடற்கரை மிகவும் பொருத்தமான இடம்’ என்று பதில் வந்தது.

தங்கள் ஊரான Dayton–லிருந்து Kitty Hawk சுமார் 700 மைல் தொலை வில் உள்ளது. சைக்கிள்கடைப் பொறுப்பை ஒருவரிடம் ஒப்படைத்து விட்டு, கிட்டி ஹாக் பயணம் பற்றி யோசித்தனர்.

எளிமையான ஒரு கிளைடர் செய்தனர். லிலியென்தால் செய்த கிளைடரிலிருந்து மாறுபட்ட வடிவம். அதனுடைய இறக்கை நீளம் 18 அடி. முதலில் இதைப் பட்டம் மாதிரி பறக்க விட்டுச் சோதனை செய்தபின், இருவ ரில் ஒருவர் ஏறிப் பறக்க முயற்சிப்பது தான் திட்டம்.

அன்றைக்கு மிகப் புதியதான கேம ராவை லிலியென்தால் நன்கு உபயோகப்படுத்தினார் என்று தெரிந் ததும், தாங்களும் கேமரா பற்றிக் கற்றுக் கொண்டு, ஒரு கேமரா செய்தனர்.

புதிய நூற்றாண்டின் தொடக்கம், ஆகஸ்ட் 1900–இல் வில்பர் தனது கிட்டி ஹாக் பயணத்தைத் தொடங்கினார். கிளைடர், கேமரா, Tripod முதலியவற் றைத் தன்னுடன் எடுத்துச் சென்றார்.

மைல் கணக்கில் ஆள் இல்லாத மணல் குன்றுகள் நிறைந்த கடற்கரை. ஒரு சில மீனவக் குடிசைகள். வில்லியம் ஜே. டேட் என்ற ஓய்வு பெற்ற போஸ்ட் மாஸ்டர் இவரை அன்புடன் வர வேற்றுத் தேவையான உதவிகள் செய் தார்.

(அடுத்த இதழில் முடியும்)

இம்மாத ராசி பலன்

**“என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!”**

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.10.2019 அன்று கோள்கள் நிலை

			ராகு
	03.10.2019 சுக். – துலாம் 17.10.2019 சூரி. – துலாம்		
	23.10.2019 புதன்–விருச்சிகம் 28.10.2019 சுக்.–விருச்சிகம்		
சனி கேது	குரு	புதன் சந்திரன்	சூரியன் சுக்கிரன் செவ்வாய்



மேஷ ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன், செவ்வாய் இணைவு பெற்று 6–இல் சஞ்சரிப்பதால், தொழில் துறை அனுகூலம் உண்டு. பொருளாதார நன்மையுண்டு. கோர்ட்டு வில்லங்க விவகாரங்களில் ஈடுபட, பிற்காலத்தில் வெற்றி ஏற்படும். அதேசமயம் இக்காலம் களத்திர, புத்திர வகைப் பிரச்சனைகளையும் சிலர் சந்திக்க நேரிடும். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 7–இல் சுக்கிரன் இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால், சுப விரயம் ஏற்படும். பெண்கள் முகாந்திரமாக எதிர்ப்புகளைச் சிலர் சந்திப்பர். குரு 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் இன்னும் முழுமையாக உங்கள் துன்பங்களிலிருந்து விடுபடவில்லை.

சனி – கேது 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால். தெய்வீகப் பணிகளில் ஈடுபாடு உள்ளவர்கள் மேன்மை அடைவர். 3–இல் ராகு சஞ்சரிப்பதால் தொடர் பயணங்கள், அலைச்சல்களைத் தவிர்க்க இயலாது. திருமணம் முதலிய சுப காரியங்களை அடுத்த மாதம் முதல் தொடங்கலாம். புதிதாகத் தொழில் துறையில் இறங்க விருப்பம் உள்ளவர்கள் அதற்கான முயற்சிகளை இப்போதே தொடங்கலாம். புதனால் 23–ஆம் தேதி வரை உறவினர்கள் வழியில் சில அதிருப்திகளைச் சந்திக்க நேரலாம். மாதத்தின் முற்பாதி புதிய முயற்சிகளுக்கு ஏற்றது.



ரிஷப ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் தடைகள் குழப்பங்கள் ஏற்படினும் மாதத்தின் பிற்பாதியில் நன்மை ஏற்படும். தொழில் துறையில் ஏற்றம், உடல் ஆரோக்கியம் கூடுதல், எதிர்ப்புகள் அகலுதல், குழப்பங்கள் நீங்குதல் முதலிய பலன்கள் ஏற்படும். இம்மாதம் குரு 7–இல் தொடர்ந்து நீடிப்பதால், சுப காரியங்களை நிறைவேற்றிக் கொள்வது நல்லது. 2–இல் ராகு சஞ்சரிப்பதால் எதிர்பாராத வரவினம் ஏற்பட்டாலும் செலவுகளும் நிகராக ஏற்படும்.

புதன் 23–ஆம் தேதி வரை உங்களுக்குத் தன வரவையும், உறவினர்கள் சந்திப்பையும் ஏற்படுத்தலாம். பின்னர் எதிர்ப்புகள் ஏற்படும். 8–இல் சனி, கேது சஞ்சரிப்பதால், தொழில் துறைகளில் பெரியதொரு நன்மையை எதிர்பார்க்க வேண்டாம். அவசர முடிவுகளை எடுத்துத் தொழில், உத்தியோகத் துறைகளில் நீங்களே சங்கடங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். இன்னும் சிற்சில மாதங்கள் வரை பொறுமையுடன் இருப்பது

நல்லது. இம்மாதம் ஏதேனும் ஆடம்பரப் பொருள் வாங்கும் யோகம் உண்டு. மாதக் கடைசியில் சில திருப்பங்கள் மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம். புதிய முயற்சிகள் வேண்டாம்.

மிதுனம்



மிதுன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் அவ்வளவு சிறப்புடைய மாதமல்ல. தேவையற்ற அலைச்சல், உடல் நலிவுகள், காரியங்களில் தடைகள் ஏற்படுதல், குழப்பமான மன நிலை, கடன்களைப் பற்றிய கவலை முதலியவை ஏற்படலாம். சுக்கிரன் 5–ஆம் வீட்டில் சாதகமாகச் சஞ்சரிப்பதால் ஒரு சிலருக்குச் சில அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிட்டலாம். பண வசதி கூடும். எதிர்பாராத ஆதாய வரவு ஏற்படும். இளைஞர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு. 23–ஆம் தேதி முதல் புதன், குரு 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும். உறவினர்கள் சங்கடப்படுத்தக் கூடும்.

ராசி மீது ராகு சஞ்சரிப்பதால் இன்னதென்று அறிய இயலாத நோவுகள் உடலில் இருந்து கொண்டிருக்கும். காலப்போக்கில் சரியாகிவிடும். 7–இல் சனி, கேது சஞ்சரிப்பதால் வயது முதிர்ந்த பெரியவர்கள், விதவைப் பெண்கள், போலிச் சாமியார்களிடம் கவனம் தேவை. கூட்டாளிகளிடமும் எச்சரிக்கை தேவை. சோர்வுகள் இக்காலம் ஏற்படுவது இயல்பு. குரு கடந்த ஓராண்டுக் காலத்தில் உங்களைக் கடனாளியாக்கி விட்டிருக்கும். அடுத்த ஓராண்டுக் காலத்தில் நல்ல சூழ்நிலைகள், மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

கடகம்



கடக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் ஓரளவு சிறப்பான மாதம்தான். தொழில், உத்தியோகத் துறைகளில் அனுகூலம் உண்டு. பணம், பொருள் சேர்க்கை ஏற்படும். வண்டி, வாகன சுகம் உண்டு. முயற்சிகள் பலிதம் ஏற்படும். உடன்பிறந்த ரத்த சம்பந்தம் உடையவர்கள், அதிகாரிகள் மூலம் நன்மை ஏற்படலாம். கடந்த காலத்தில் ஏற்பட்ட பயணங்கள் மூலம் தற்போது நன்மை ஏற்பட வாய்ப்புண்டு. சுக்கிரன் 23–ஆம் தேதி வரை குடும்பத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வாய்ப்புண்டு.

குரு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், உங்களின் அந்தஸ்து கடந்த ஆண்டை விடத் தற்சமயம் உயர்ந்திருக்கும். இனி, எதிர்வரும் ஆண்டு உங்களுக்குச் சோதனைகளை ஏற்படுத்தக்கூடும். மாதத்தின் பிற்பாதியில் அலைச்சல்கள் ஏற்பட்டாலும், நன்மைகள் உண்டாகும். திருமணம் முதலிய சுப காரியங்கள் இம்மாதமே நிறைவேற வாய்ப்புண்டு. இல்லையெனில், அடுத்த ஓராண்டு சற்றுச் சிரமமாகலாம். சனி – கேது 6–இல் சஞ்சரிப்பதால், தெய்வானுகூலத்தால் நல்ல சூழ்நிலையை அடைந்திருப்பீர்கள். இந்தச் சூழ்நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வது நல்லது.

சிம்மம்



சிம்ம ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சிற்சில விஷயங்களில் யதார்த்தமாகச் செயல்படுவதால், வீண் செலவும், வீண் வாதப் பிரதிவாதங்களால் பிரச்சனைகளும் ஏற்படும் வாய்ப்புண்டு. ஒரு சிலருக்குக் கண்களில் பிரச்சனை கள் தோன்றலாம். மாதத்தின் பிற்பாதியில் சற்று உடல் பலவீனம் ஏற்படலாம். இருப்பினும் சுகக் குறைவு ஏற்படாது. செவ்வாய் இம்மாதம் முழுவதும் இரண்டில் சஞ்சரிப்பதால் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகம் செய்ய வேண்டாம். திருமணம் முதலிய சுப காரியங்களில் அடுத்த மாதம் முதல் இறங்கலாம்.

சனி – கேது 5–ஆம் வீட்டில் தொடர்ந்து சஞ்சரிப்பதால் சில நேரங்களில் சுதந்திரமாக முடிவெடுத்துச் செயல்படுவதால் துன்பம் ஏற்படலாம். அடிக்கடி விரக்தி மனப்பான்மை, குழப்பம் ஏற்படும். ராகு 11–இல் சஞ்சரிப்பதால் லாபமுண்டு. உதவிகளும் எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு. வீடு, தொழில் முதலியவற்றில் மாற்றங்களுக்காகக் காத்திருப்பவர்களுக்கு இனி நற்காலம் ஏற்படும். 23–ஆம் தேதி வரை புதன் 3–ஆம் வீட்டில் உங்கள் ராசியதிபதியுடன் இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் ஏற்கனவே நீங்கள் செய்த காரியம் ஒன்றிற்காக வருத்தப்படுவீர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவது நன்மையாகும்.

கன்னி ராசி அன்பர்கள் இம்மாதம் முற்றிலும் கலக்கத்தில் இருப்பீர்கள். கோப தாபம் தவிர்க்க இயலாது. அதிகமான செலவினங்களும், குடும்பப் பிரச்சனைகளும் உங்களது மன அமைதியைக்


கன்னி



குறைக்கலாம். கடந்த ஓராண்டு உங்களுக்கு நற்பெயரைத் தேடித் தந்திருக்காது. வரும் ஆண்டு உங்களுக்குச் சற்று ஏற்றம் உண்டு. உங்கள் ராசி மீது இம்மாதம் முழுவதும் செவ்வாய் சஞ்சரிப்பதால், பிறரால் உங்களுக்குத் துன்பம் வர வாய்ப்புள்ளது. உடலில் காயம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே, எல்லாக் காரியங்களிலும் கவனம் வேண்டும்.

சனி – கேது 4–இல் சஞ்சரிப்பதால், குடும்பப் பிரச்சனைகள் உடனடியாக முடிவுக்கு வராது. 10–இல் ராகு சஞ்சரிப்பதால் தொழில்வழிப் பயணங்கள் ஒரு சிலருக்குத் தொடர்ந்து இருந்து வரலாம். வீடு மாற்றம், தொழில் மாற்றம் குறித்து எதிர்பார்ப்பு உள்ளவர்களுக்கு ஈடேறும் வாய்ப்புக் குறைவு. அப்படி மாற்றங்கள் ஏற்பட்டால், உங்கள் விருப்பத்திற்கு எதிராகவே இருக்கும். திருமணம் முதலிய சுபகாரியங்கள் ஜனன ஜாதகத்தை ஆய்வு செய்து அதன்படி முயற்சி செய்வதே நல்லது. புதன் 23–ஆம் தேதி வரை தன வரவை ஏற்படுத்தும்.


துலாம்



துலாம் ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் விரயம், அலைச்சல் உண்டு. சூரியன், செவ்வாய் சேர்க்கை காரணமாக அரசாங்கத் தண்டனை சிலருக்குக் கிடைக்கும். சிலரது சொத்து அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படலாம். ஒரு சிலர் திருட்டு மூலம் விரயத்தை அடைவர். ஞாபக மறதியால் வயது முதிர்ந்தவர்கள் துன்பம் அடைவர். மாதத்தின் பிற்பாதியில் சிலர் உதவி செய்வர். பொருள் வரவு ஏற்படும். 28–ஆம் தேதி வரை சுக்கிரன் ராசி மீது சஞ்சரிப்பதால், ஒரு சிலர் நல்ல தோற்றத்தை வெளிப்படுத்துவர். இளமை உணர்வுடன் காணப்படுவர்.

இரண்டில் குரு இருப்பதால், உங்கள் பேச்சை மற்றவர்கள் மதித்து நடப்பர். உங்கள் வீட்டில் சுப காரியங்கள் கைகூட வாய்ப்புண்டு. 3–ஆம் வீட்டில் சனி – கேது இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால், சகோதர வர்க்கத்தார் சிற்சில கஷ்ட நஷ்டங்களைச் சந்திக்க நேரலாம். 9–இல் ராகு சஞ்சரிப்பதால் வெளிதேச வர்த்தகத் தொடர்புகள் நற்பலன் கொடுக்கும். கருவுற்ற பெண்கள் கவனமாக இருக்க வேண்டும். செவ்வாய் 12–இல் சஞ்சரிப்பதால், இல்வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது, கவனம்.

விருச்சிகம்



விருச்சிக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் பிரபலஸ்தர்கள், தனவந்தர்கள், உத்தியோகஸ்தர்கள், அரசியல் பிரமுகர்கள் சந்திப்பும், உதவியும் ஒரு சிலருக்குக் கிட்டும் வாய்ப்புண்டு. ரத்த சம்பந்தம் உடைய உறவினர்களால் நன்மை ஏற்படலாம். சிலருக்குப் பதவியில் மாற்றமோ, உயர்வோ கிடைக்க வாய்ப்புள்ளது. மாதத்தின் பிற்பாதியில் உற்சாகம் அதிகரிக்கும். சுபச் செலவுகள் ஏற்படும். அதே சமயம் அலைச்சலும் மிகும். புதன் 23–ஆம் தேதி வரை 12–இல் சஞ்சரிப்பதால், தங்களின் கீழ் பணி செய்யும் பணியாளர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

ஜன்ம ராசியில் குரு சஞ்சரிப்பதால், இன்னும் ஒரு சில நாட்கள் கட்டுப்பாடான சூழ்நிலைகள் இருந்து வரும். இம்மாதம் சுக்கிரன் 12–இல் சஞ்சரிப்பதால், பெண்களால் செலவுண்டு. வாகனப் பீடை ஏற்படவும் வாய்ப்புண்டு. வாக்கு ஸ்தானத்தில் சனி – கேது சஞ்சரிப்பதால், ஆன்மிக ரீதியாகவும், பெரியோர் உறவாலும் பொருளாதார வசதிகள் வந்து சேரும். ராகு 8–இல் சஞ்சரிப்பதால், இடுப்புப் பகுதியில் கட்டி போன்றவையோ, படை, சரும நோய்களோ தோன்றக்கூடும். புதிய முயற்சிகளை மாதத்தின் முற்பாதியில் தொடங்க நன்மை உண்டாகும்.

தனுசு



தனுசு ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சகல காரிய அனுகூலம் உண்டு. மாதத்தின் பிற்பாதியில் தொழில், உத்தியோகத் துறைகளில் எதிர்பார்ப்புகள் ஈடேறும். மாதத்தின் பிற்பாதியில் உதவியும், பொருள் வரவும், லாபமும் ஏற்படும். பெற்றோர்க்கு நல்லதல்ல. குரு 12–ஆம் வீட்டில் இம்மாதம் முழுவதும் சஞ்சரிப்பதால், தர்ம காரியங்களில் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. ராசி மீது சனி – கேது சஞ்சரிப்பதால் உடல் நலிவுகள் இருந்து வரும். மனக் குழப்பம் அதிகரிக்கலாம். போக்குவரத்துகளிலும் கவனம் வேண்டும்.

7–இல் இராகு சஞ்சரிப்பதால்

நூதனமானவர்கள், முன்பின் பழக்கமில்லாதவர்களுடன் நெருங்கிய நட்புக் கொள்வது நல்லதல்ல. புதன் 23–ஆம் தேதி வரை லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணைவர் மூலமோ, தொழில் கூட்டாளிகள் மூலமோ லாபமும், நன்மையும் உண்டாகும். திருமணம் முதலிய சுப காரியங்கள் ஜனன ஜாதகத்தை ஆய்வு செய்து அதன்படி முயற்சிகள் செய்வது நன்று. சனி ராசி மீது சஞ்சரிப்பதால், உங்களது செயல்பாடுகளில் சற்றுச் சோர்வும், தாமதமும் காணப்படும். வயதானவர்களாக இருப்பின், நரம்பு சம்பந்தம் உடைய பாதிப்புகள் வரும்.




மகர ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் யோக பலன்களை எதிர்பார்க்க இயலாது. வீண் பயமும், குழப்பமும், காரியத் தடைகளுமே இருந்து வரும். மாதத்தின் பிற்பாதியில் தொழில்வழி அனுகூலம் ஏற்படும். எண்ணிய காரியங்கள் வெற்றியாகும். சுக்கிரன் 28–ஆம் தேதி வரை 10–இல் சஞ்சரிப்பதால், தொழில் தலத்தில் பெண்களால் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், குரு 11–இல் சஞ் சரிப்பதால் தெரிந்தவர்கள் மூலம் ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

சனி – கேது 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், முதலீடுகள் செய்வதால் உடனடி நன்மை கிட்டாது. வீண் விரக்திக்கு ஆளாக நேரிடலாம். மனதில் சலனத்திற்கும், சஞ்சலத்திற்கும் இடமளிக்கக் கூடாது. ராகு 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், வயிற்றில் உபாதைகள், அஜீரணக் கோளாறுகள் சிலருக்கு ஏற்படலாம். நுண் கிருமிகளால் ஏதேனும் பாதிப்பும் வரக்கூடும். சுகாதாரமாக இருக்க வேண்டும். உணவு விஷயங்களில் கட்டுப்பாடு தேவை. இன்னும் சில மாதங்களில் ஜன்மச்சனி ஆரம்பிக்க இருப்பதால், சுப காரியங்களை இப்போதே நிறைவேற்றிக் கொள்வது நல்லது.




கும்ப ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் எதிர்பாராத செலவுகள், சம்பவங்கள், உடல் நலிவுகள் ஏற்படக்கூடும். மாதத்தின் பிற்பாதியில் நேர்மையான அணுகுமுறைகளாலும், செயல்களாலும் துன்பங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். செவ்வாய் 8–இல் இம்மாதம் முழுவதும் சஞ்சரிப்பதால், அமைதியாக இருந்தாலும் சம்பவங்கள் உங்கள் கோபத்தை அதிகரிக்கக்கூடும். கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும். குரு 10–ஆம் வீட்டில் சஞ் சரிப்பதால், பணப் புழக்கம் சீராக இருந்து வரும். தொழில் வழியில் மாற்றங்கள் விரைவாக ஏற்பட லாம். மீண்டும் உங்களுக்குச் செல்வாக்குக் கூடும் வாய்ப்புண்டு.

லாபஸ்தானத்தில் சனி – கேது சஞ்சரிப்பது கூடுதல் நன்மை. பெரியோர் உதவி, ஆதரவு தொடர்ந்து கிட்டும் வாய்ப்புண்டு. சுக்கிரன் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் அரிய பொருள் லாபம் ஏற்படும். ராகு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், விஞ்ஞானம் தொடர்புடைய கல்வி கற்போர்க்கு நன்மை ஏற்படும். மருத்துவம், கணிப்பொறி மற்றும் உயிரியல் தொடர்புடைய கல்வி கற்பவர்களும் யோகம் அடைய வாய்ப்புண்டு. புதியதான எவ்வித முயற்சிகளுக்கும் இம்மாதம் நல்லதல்ல. மாதத்தின் பிற்பாதியில் புதன் 10–ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால், ஒரு சிலர் தொழில் மாற்றம் குறித்துச் சிந்திப்பர்.



மீன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் பற்பல எதிர்ப்புகள், விரோதங்கள், விவகாரங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. கணவன் – மனைவி உறவு பாதிப்பு ஏற்படக் கூடும். குரு பார்வை காரணமாகப் பிரச்சனை பூதாகரமாக மாறாது. ராகு 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வண்டி, வாகனங்கள், நாற்கால் ஜீவன்களால் ஆபத்துண்டாகலாம். போக்குவரத்துகளில் கவனம் தேவை. மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 8–இல் சஞ்சரிப்பதாலும், சுக்கிரன் சேர்க்கை பெறுவதாலும், இன உணர்வுகள் அதிகரிக்கும். இச்சைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சனி – கேது 10–இல் சஞ்சரிப்பதால், தொழில் துறையில் மந்த நிலை நிலவக்கூடும். பணியாளர் பிரச்சனைகள் ஏற்படக்கூடும். திருமணம் முதலிய சுப காரியங்கள் இம்மாதம் நிறைவேறினாலன்றி எதிர்வரும் குரு மாற்றத்திற்குப் பின் நிறைவேறுவது சற்றுக் கடினமாகலாம். செவ்வாய் 7–இல் சஞ்சரிப்பதால், சிறிய விஷயங்களைப் பெரிதுபடுத்தி, இல்லற வாழ்வில் வீண் சங்கடங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். வாகனங்களைக் கையாள்வதில் கவனம் தேவை. இன்னும் 3, 4 மாதங்களுக்குப் பின் சூழ்நிலை மாறும்.



கொண்டிருந்தது.

சந்திரனின் தரைக்கு 2 கி.மீ.க்கு மேல் பூமிக்கும், லேண்டருக்குமான தொடர்பு துண்டிக்கப் பட்டது, நமது துரதிருஷ்டம். அதனைக் கண்டு நாம் துடித்துப் போனோம். இந்தக் காட்சியைக் கண்டு பிரதமர் மோடி அதிர்ச்சி அடைந்த நிலையிலும், இஸ்ரோ தலைவர் சிவன் அவர்களைக் கட்டித் தழுவி, அவருடைய கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறித் தைரிய மூட்டிய காட்சியைப் பார்த்தவர் யாரும் மறக்க முடியாது.

சந்திரனில் இந்திய தேசியக்கொடி!

'சந்திரயான் – 2' இஸ்ரோ விஞ்ஞானிகள், அதன் தலைவர் திரு. கே. சிவன் தலைமையில் விண்வெளிக்கு அனுப்பிச் சந்திரனின் தெற்குப் பகுதியில் தரையிரங்கச் செய்த சம்பவம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. அமெரிக்கா முதலிய நாடுகளையே ஆச்சரியப்பட வைத்தது.

மிகக் குறைந்த செலவாக ரூ. 1000 கோடியில் இதனைச் செய்தது மிகச் சிறந்த சாதனையாகும்.

அத்தகைய சாதனையை சுமார் 400 இந்திய இஸ்ரோ விஞ்ஞானிகள் பெங்களூரிலிருந்து விண்ணுக்குச் செலுத்த முற்பட்டபோது, அந்தச் சரித்திர நாள் பின்னடைவைச் சந்தித்தது. பிறகு விண்கலத்தின் கோளாறு சரிசெய்யப்பட்டது. விண்கலத்தின் ஆர்பிட்டர், விக்ரம் லேண்டர் ஆகிய இரண்டும் வெற்றிகரமாகச் சந்திர வெளியில் செப்டம்பர் 7, அன்று இரவு 1 மணி 30 நிமிடத்தில் தரையிறங்கத் தொடங்கியதை, இந்தியா மட்டுமல்ல, உலகமே கண்டு வியந்து கொண்டிருந்தது.

இப்போதும் நாம் மயிரிழையில் தான் தோல்வி அடைந்திருக்கிறோம். அந்தத் தோல்வியைக் கடந்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கோடானு கோடி ஆண்டுகளாக இருண்டு கிடக்கும் தென்பகுதிச் சந்திரனில் இந்திய தேசியக் கொடியைப் பறக்க விடுவார்கள்.

நமக்குச் சுதந்திரமே நடுநிசி 12 மணிக்குத்தான் கிடைத்தது. சந்திரனிலும் அந்த இருட்டில்தான் நாம் அந்த வெற்றியைக் கொண்டாடப் போகிறோம்.

– ந.நி.


உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES Derived Engine மற்றும் Gear Box
FORCE GURKHA E.O.V. 4.4.4
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின் செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
NM நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

வாசகர் கடிதங்கள்

2019 செப்டம்பர் 'ஓம் சக்தி' இதழின் அட்டையில் தோன்றி அருள்பாலிக்கும் அத்திவரதரின் நின்ற கோலத் திருவுருவம் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத தேனமுதாய்த் தித்தித்தது.

– **மு. இராமு,** திருமங்கலம்.

'**ப**ழகிப் பார்த்ததில் இவர்கள்' பகுதியில் வ.உ.சி.யின் புதல்வர் வாலேஸ்வரன் பற்றிய சுவையான அனுபவங்களை மரபின் மைந்தன் தொகுத்துக் கொடுத்த விதம் அருமை!

– **ஆர்.கே. லிங்கேசன்,**
மேலகிருஷ்ணன்புதூர்.

ராஜராஜன் பற்றி எஸ். ஆரோக்கியசாமியின் கட்டுரை சிந்திக்கத்தக்கது. ராஜராஜனின் நிறை, குறைகளை ஆய்ந்து தகுந்த பாடம் கற்கலாமே ஒழிய, அவர் மீதான சாடல் சரியாகாது.

– **எஸ்.ஜி. இசட்கான்,** திருப்பூர்.

'**ஓ**ம் சக்தி' செப்டம்பர் 2019 இதழில் 'சுரங்கம்' பகுதியில் வெளியாகியிருந்த "காஷ்மீர்ப் பிரச்சனைக்குக் காந்தியப் பாதையில் ஒரு தீர்வு" எனும் அருட்செல்வரின் கட்டுரை, காஷ்மீர்ப் பிரச்சனைக்கு வித்தியாசமான தீர்வு.

– **ஏ. பாஸ்கர்,** சேலம்.

பருவமழை பொய்த்து வருவதற்கு மணல் கொள்ளையே மூல காரணம் என்ற சி. பிரகாஷ் அவர்களின் கட்டுரை, சம்பந்தப்பட்டவர்களுக்கு நெத்தியடி.

– **இரா. வளையாபதி,**
தோட்டக்குறிச்சி.

'**கொ**ங்கு நாட்டில் மத்வர் கோவில்' கட்டுரையினை விரிவாகவும், படங்களுடனும் அழகுறப் பிரசுரம் செய்துள்ளீர்கள். நன்றி!

– **கே. ஆர். கிருஷ்ணமாச்சாரி,** மதுரை.

கருத்தாழமிக்க "முத்தலாக் என்று மொழியாதீர்" கட்டுரையைப் படித்து ரசித்தேன். கட்டுரையாளர் எஸ்.ஜி. இசட்கானுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

– **மா. மார்க்ஸ்,** பட்டிவீரன்பட்டி.

'**ஓ**டி ஒளிய இடமில்லை" எனும் ஜெ. கமலநாதனின் கவிதை, முதியவர்களின் நிலையைப் படம்பிடித்துக் காட்டியது.

– **அகரம். செ. தர்மலிங்கம்,** திருச்சி.

சொ.சொ.மீ. சுந்தரம் எழுதிவரும் "தீவினை மாற்றும் திருமந்திரம்" தொடர் கட்டுரை தேனாய் இனித்தது. தொடரட்டும் இனிதாய்!

– **அ. முரளிதரன்,** மதுரை.

சூழ்நிலையால் குற்றம் செய்து சிறையில் இருப்பவர்கள் மனம் திருந்தி நல்லவர்களாக வாழ முடியும், நாலு காசு சம்பாதிக்க முடியும் என்பதை அவர்களுடனான நேர்காணலில் அழகாகப் பதிவு செய்திருந்தார், இரா. வேணுகோபாலகிருஷ்ணன்.

– **என்.ஆர். ஜெயசந்திரன்,**
காவேரிப்பட்டணம்.

மணல் கொள்ளை குறித்துக் கட்டுரையாளர் சி. பிரகாஷ் கூறியுள்ள உண்மையான கருத்துக்களை விஞ்ஞானப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

சர்க்கரை நோயிலிருந்து தப்பித்த கவிஞர் புவியரசு, மருந்தே நோய் என்கிறார். கட்டுரையில் அவர் கூறும் கருத்துக்கள் சற்று வித்தியாச மானவை. சிந்திப்பதற்குரியன.

– **த. நாகராசன்,** சிவகாசி.

2019 இதழ்

வெளிவரவுள்ளது...

சிறுகதை எழுத்தாளர்கள் :

கி.ரா., ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன், ராஜேஷ்குமார், கீரனூர் ஜாகிர்ராஜா, பொன்னீலன், திருப்பூர் கிருஷ்ணன், விமலா ரமணி, ஜெய்சக்தி...

கட்டுரையாளர்கள் :

சுகிசிவம், டாக்டர் ம. மாணிக்கம், பெ.சு. மணி, குடவாயில் பாலசுப்பிரமணியன், நெல்லை சு. முத்து, மாத்தளை சோமு, ராணிமைந்தன், பிரேமா நந்தகுமார், இ. சுந்தரமூர்த்தி, ஜெயா வெங்கட்ராமன், , எஸ். ஸ்ரீதுரை, க.தில்லையம்பலம், என். ஆர். ஜெயசந்திரன், இரா. கல்யாணசுந்தரம்...

கவிஞர்கள் :

சிற்பி, முத்துலிங்கம், புவியரசு, பழநிபாரதி, காசி ஆனந்தன், செல்லகணபதி, புதிய மாதவி, ஈரோடு தமிழன்பன், மரபின் மைந்தன் முத்தையா, கவிதாசன், இரா. மீனாட்சி, அப்துல்காதர், சென்னிமலை தண்டபாணி, சேதுபதி, ஜோதிபெருமாள், ஜெயலட்சுமி, தங்கமகன், மலர்மகன்...

ஓவியர்கள் :

மணியம் செல்வன், மாருதி, ஜெயராஜ், ஷ்யாம், அரஸ், ஜீவா, க.ச...

முன்பதிவுக்கு முந்துவீர்..

விலை ரூ.100/- மட்டுமே!

ஓம் சக்தி

மாரியம்மாள் மகாலிங்கம் மன்றம்
69, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு), ஆர்.எஸ்.புரம்,
கோவை 641 002. தொலைபேசி : 0422 4322471, 4322423
E-mail : omsakthieditorial@gmail.com

செப்டம்பர்-2019 இதழ் விவாதம்

காஷ்மீருக்கு இவர்கள் காட்டும் தீர்வுதான் என்ன?

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

பாரதப் பிரதமர் மோடி அவர்கள், ஜம்மு காஷ்மீர், லடாக் பகுதிகளை யூனியன் பிரதேசமாக மாற்றியது சரியே. ஒரே ஆதார் அட்டை, ரேசன் கார்டு முதலியவற்றை மாற்றி, இந்தியாவைச் சர்வாதிகார நாடாக மாற்றாமல், காந்தியின் அகிம்சை வழியில் ஜனநாயக நாடாக இருந்தால் நன்று. நம்முடைய தமிழகத்தில் உள்ள எதிர்க் கட்சிகள், நல்லது எது செய்தாலும் எதிர்ப்பவர்கள். அவர்களை விட்டுத் தள்ளுங்கள்.

– **தி.ஈ.தி. ஈசுவர் மூர்த்தி**,

திருவில்லிப்புத்தூர்.

இப்போதைய மத்திய அரசு 370 மற்றும் 35ஏ சட்டப் பிரிவுகளை நீக்கியது சரியே. அதேநேரம் அரசு கூறியபடி அங்குள்ள மக்கள் என்னென்ன எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறார்களோ, அவற்றையெல்லாம் கண்டிப்பாகச் செய்து கொடுக்க வேண்டும். அதேபோல் அவர்களுக்கு இருக்கும் அச்சத்தையும் போக்க வேண்டும். கார்ப்பரேட் கம்பெனிகளுக்குப் பதில் அரசே அனைத்தையும் செய்ய வேண்டும். நேரு காலம், இந்திரா காலம் இவற்றையெல்லாம் தாண்டி மோடி காலத்தில்தான் இதற்கு விடிவு பிறக்க வேண்டும் என்று உள்ளது போலும்!

– **வரதன்**, திருவாரூர்.

பாகிஸ்தான் வேண்டுமென்றே தீவிர வாதத்தை வளர்த்து வருகிறது. பல ஆண்டு களாகத் தீவிரவாதத்திற்கு இந்தியா கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறது. 70 ஆண்டு களுக்கு மேல் காஷ்மீர் மக்கள் சிரமங்களையும், துயரங்களையும் சந்திக்கிறார்கள் என்றால், அங்குள்ள அரசியல் நிலவரத்தை என்னவென்று எழுதுவது? பல சமஸ்தானங்களை இணைத்து, ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கிய படேலை நிச்சயம் பாராட்ட வேண்டும். ஒரு நாட்டின் வளர்ச்சியில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண் டும் இணைந்து செயல்பட வேண்டும்.

– **ஆ. ர. அருணகிரி**, எண்ணமங்கலம்.

கார்கில் போரிலும், காஷ்மீரில் பணிபுரிந்த இராணுவ அனுபவத்திலும் நான் கூறுவது, தற் போது காஷ்மீரில் எடுத்த முடிவு மிகமிகச் சரி யானது. இதுபற்றிக் கருத்துக் கூறத் தமிழகத்தில் ஒரு தரம் வாய்ந்த அரசியல்வாதி இல்லை. இருப் பவர் அனைவரும் காஷ்மீர் பற்றிக் கடுகளவும் அறியாத காகிதப் பூனைகளே.

– **மு. சுரேஷ்குமார்**, நங்கைநல்லூர்.

மாறாத நாட்டுப்பற்றும், நாட்டின் நிகழ்வுகள், அரசியல் போக்கு இவற்றை ஊன்றிக் கவனிக்கும் திறனும், எவ்விதப் பிரச்சனையாக இருந்தாலும், அதற்கு ஒரு தீர்வைத் தரும் அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள் 17 ஆண்டு களுக்கு முன்பே காஷ்மீர்ப் பிரச்சனைக்கு காந்தியப் பாதையில் ஒரு தீர்வைத் தந்துள்ளார். அன்றைக்கு ஆட்சியிலிருந்தவர்கள் அவரது தீர் வைச் செயல்படுத்தியிருந்தால் காஷ்மீர்ப் பிரச் சனை இன்றைக்கு விவாதப் பொருளாகிவிட்ட நிலைமை வந்திருக்காது.

– **தி. குமாரராஜா**,

உடுமலைப்பேட்டை.

சர்தார் வல்லபபாய் படேல் அவர்களால்கூடச் சாதிக்க முடியாத ஒரு வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியுள்ள நரேந்திரமோடியின் தலைமை யிலான மத்திய அரசினை எப்படிப் பாராட்டினாலும் தகும்! இப்படியொரு அதிரடி பாகிஸ்தானை மட்டு மல்ல, சீனாவைக்கூட இந்தியாவை நினைத்து மிரள வைத்துள்ளது. வாழ்நாள் முழுக்கக் 'கைக் கூலி' வேலை பார்த்து வரும் இந்திய எதிர்க் கட்சிகளின் 'ஓலத்தினை' ஒதுக்கி வைக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

– **இரா. வளையாபதி**, தோட்டக்குறிச்சி.

காஷ்மீர் 370–ஆவது பிரிவின் சிறப்புச் சலுகைகளுக்காக அங்கு வாழும் இஸ்லாமியர்கள் இந்திய அரசுக்கு நன்றி கூறுவதை விட்டுச் சுய நலத் தலைவர்களின் கைப்பாவைகளாகி, தீவிரவாதிகளுக்கு இடமளித்தனர். பிரதமர் மோடி காஷ்மீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டுள்ளார். இந்த நடவடிக்கையை எதிர்க்கும் நம் அரசியல் வாதிகள் தேசத்துரோகிகள்.

– **இரா. கல்யாணசுந்தரம்**, மதுரை.

காஷ்மீரின் சிறப்புத் தகுதியான 370–ஆவது பிரிவும், 35ஏ பிரிவும் நீக்கம் செய்தது வரவேற்கத் தக்கதே. நீண்ட காலமாக இருந்து வந்த காஷ்மீர்ப் பிரச்சனைக்குத் துணிச்சலுடன் பிரதமர் மோடி தீர்வு கண்டிருக்கிறார். இது நாட்டிற்குக் கிடைத்த 2–ஆவது சுதந்திரம். முழுச் சுதந்திரம் கிடைத்த தாகக் கொண்டாடலாம். இதன் மூலம் காஷ்மீர் வளர்ச்சியின் தடை நீக்கப்பட்டு, அங்கு நடந்து வந்த வன்முறைக் கலவரங்களுக்கும், பாகிஸ் தானிலுள்ள தீவிரவாதிகள் ஊடுருவுவதற்கும் தடை ஏற்பட்டுள்ளது.

– **மு. கணபதி**, பெருந்துறை.

ஜம்மு – காஷ்மீர், லடாக் பகுதிகளை மாநில அந்தஸ்தும், யூனியன் பிரதேசமாக அறிவிக்கப் பட்டதும், அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் சுதந்திரமாகவும் பயமின்றியும் வாழவும் முடியும். புதிய தொழில் தொடங்கவும், வேற்று மாநிலத்தார் சொத்துக்கள் வாங்கவும், குடியிருக்கவும் ஜம்மு – காஷ்மீர் பகுதியை ஜனநாயக பூமியாக்கிய பிரதமர் அவர்களுக்கு இந்திய மக்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்கள்.

– **ப. அடைக்கலம்**, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

காஷ்மீர் இந்தியத்தாயின் மணிமகுடம். அதை இழக்கக்கூடாது. 1947–இல் அரசுக்கு அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு ராஜதந்திர நடவடிக் கையாக இருந்தது. இனியும் இது தொடர்வது சரியல்ல. காஷ்மீரில் உள்ள மக்கள் ஜன நாயகத்தை விரும்புபவர்கள் என்பது 70 ஆண்டுக் கால வரலாறு குறிப்பிடுகிறது. சிறப்புச் சட்டம் ரத்தால், கலங்கிப் போனவை மூன்று குடும்பங் களே ஆகும். தமிழ்நாட்டைக் குட்டிச்சுவராக்கிய தி.க., தி.மு.க. இரண்டும் வால் இழந்த நரிபோல் ஆகிவிட்டன.

– **தி. இராதாகிருட்டிணன்**, அரூர்.

காஷ்மீர்ச் சிக்கலை நேரு புரிந்து கொண்ட அளவிற்கு வேறு எவரும் விளங்கிக் கொள்ள வில்லை என்பதே நிதர்சனம். அன்றைக்குச் சர்வ தேச அளவிற்கு அப்பிரச்சனையை எடுத் தாண்டமையால் அன்றைய காஷ்மீர் இன்றளவு வரை நமது இந்தியாவின் ஆளுமையில்தான் இருந்து வருகிறது. ஹரிசிங் (மன்னர்) விருப்பம் ஒன்றாகவும் காஷ்மீரிகளின் விருப்பம் மாறாகவும், சிதறிய வண்ணம் இருந்தமையால்தான் அப்பிராந் தியம் சிறப்பு அந்தஸ்துப் பெற அனுமதிக்கப் பட்டது. காஷ்மீரிகள் தனித்துவம் மிக்கோர் என்ற உண்மை தெளிவாக அறிந்த நிலையில், அவர் களது இந்தியாவின் மீதான நம்பிக்கை வலுப்பெற ஆவன செய்திடல் காஷ்மீர்ப் பதற்றம் தணிக்க உதவும்.

– **எஸ்.ஜி. இசட்கான்**, திருப்பூர்.

காஷ்மீர் முதலான சிக்கல் மிகுந்த பிரச்சனை களில் அனைத்து எதிர்க்கட்சிகளும் பொறுப்புடன் செயலாற்றுவது நமது நாட்டிற்கு நல்லது. அரசிய லாக்கி மகிழ வேண்டாம். இந்தியாவை அவர்கள் எதிர்க்கவில்லையெனில், உள்நாட்டில் அராஜகம் மற்றும் பிளவு ஏற்படும் அபாய நிலையில்தான் பாகிஸ்தான் உள்ளது. எனவே, பிரதமர் மோடி அவர்கள், பிரிவு 370–ஐ நீக்கியதைத் தேசிய நடவடிக்கையாகக் கருத எதிர்க்கட்சியினர் முன்வர வேண்டும்.

– **த. நாகராஜன்**, சிவகாசி.

1947–இல் பாகிஸ்தான் பிரிந்து சென்றதே பிடிவாத்தில் ஆனதுதான். அதற்கு வித்திட்டவர் ஜின்னா! அவர் காந்தியையும், மற்ற எந்தக் காங்கிரஸ் தலைவர்களையும் மதிக்கவில்லை. அதன் பலனை, துர்பாக்கியத்தைக் கடந்த 70 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறோம். 1948–இல் இந்திய ராணுவத்தைக் காஷ்மீருக்கு நேரு அரசு அனுப்பவில்லை என்றால், இன்று காஷ்மீர் நம்மிடம் (இந்தியாவிடம்) இல்லாமல் போயிருக்கும். காங்கிரஸ் ஆட்சியின் பலவீனத்

அட்டைப்பட விளக்கம்

இராஜ அலங்கார முருகன்



தமிழ்க்கடவுள் என்று போற்றப்படுபவர் முருகப் பெருமான். அவர் அழகுத் தெய்வம். முருகு என்றால் அழகு என்றும், இளமை என்றும் பொருள் கூறுவர். இயல்பிலேயே அழகனாகிய முருகப்பெருமானுக்கு அலங்காரம் செய்தால்...? அது அழகுக்கு அழகு சேர்ப்ப தாகவே அமையும். முருகப்பெருமானுக்குச் செய்யும் அலங்காரங்களுள் மிகவும் புகழ் பெற்றது 'இராஜ அலங்காரம்.' ஆண்டிக் கோலத்தில் விளங்கும் முருகனை விட, இந்த அரசக் கோலத்தில் காட்சி தரும் முருகனை அனைவரும் விரும்புவர். அந்த 'இராஜ அலங்கார முருகன்' இம்மாத 'ஓம் சக்தி' அட்டைப்படத்தில் நமக்குக் காட்சி தருகிறார்.

– ஆர்.வி.

தைப் பயன்படுத்தி, பாகிஸ்தான் பலமுறை யுத்தம் தொடுத்தும், நல்ல பதிலடி பெற்றும், அதன் ஆட்சியாளர்களுக்குப் புத்தி வரவில்லை. காங் கிரஸ் ஆட்சியில் செய்ய முடியாததை மோடி அரசு செய்துள்ளது. இது காலத்தின் கட்டாயம்.

– ராமன் தர்மலிங்கம், லவ்டேல்.

இந்தியாவின் ஒரு பகுதி காஷ்மீர் மாநில மாகும். ஜம்மு – காஷ்மீர், லடாக் பகுதிகளை யூனி யன் பிரதேசமாகச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனை அனைத்து நாடுகளும் ஆமோதிப்புச் செய்தன. இதைக்கண்டு பாகிஸ்தான் மனம் மாறி யிருக்க வேண்டும். தவற விட்டுவிட்டது. இப்போது யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டதால், இந்தியாவின் ஒரு பகுதியாக இருப்பதாலும், மற்ற மாநிலங்களுக்குச் சலுகைகள் அளிப்பதுபோல் காஷ்மீர் சிறந்த மாநிலமாகத் திகழ்வதற்குப் பிரதமர் மோடி முன்வர வேண்டும். பாகிஸ்தான் பிரிந்தபோது இருந்த நிலைமைகள் மாறி, காஷ்மீர் – லடாக் பகுதிகள் இந்தியாவின் மாநிலங்களில் முதன்மை மாநிலமாகத் திகழ வேண்டும் என்பதே இந்திய மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

– லிங்கம் சின்னசாமி, தாராபுரம்.

இந்தியா என்ற தாயின் பிள்ளைகள்தான் ஒவ்வொரு மாநிலமும். அதில் காஷ்மீரும் இருப்பது ஆச்சரியமில்லை. ஒவ்வொரு பிள்ளையும் ஒரு குணத்துடன் இருப்பது அன்னைக்குத் தெரியும். அதேபோல காஷ்மீரில் வேறு அந்நியர் வருவதை இந்தியத்தாய் என்ற பிரதமர் மோடி முதலானோர் விரும்பவில்லை. இது ஒன்றும் தவறான நோக்கம் இல்லை. இந்திய ராணுவம் பயன்படுத்தப் படுவதற் கான காரணம், நம் இந்தியா எப்பொழுதும் பாது காப்பான சூழலில் இருக்க வேண்டும் என்பதால் தான். இதை உணராதவர்கள் எது வேண்டு மானாலும் சொல்லுவர். அதைச் செவிடன் காதில் ஊதிய சங்கு போல ஒதுக்கிக் காஷ்மீரில் வளர்ச்சி, விவசாயிகளுக்கு இரண்டு மடங்கு ஊதியம் என்று ஆவன செய்வதே அந்த மாநில வளர்ச்சிக்கு உதவும்.

– உஷாமுத்துராமன், மதுரை.

இந்திய நாட்டின் எல்லைக்குள் 70 ஆண்டு களாக இருந்து கொண்டு, அரசியல் சாசனத்தின் 370–ஆவது பிரிவும், 35ஏ என்ற மற்றொரு பிரிவும் 70 ஆண்டுகளாக வைத்துக்கொண்டு, மற்ற மாநிலங்களைப் போலல்லாமல் விஷேசப் பிரிவு களைக் கொண்டாடுவது நியாயமில்லை. அப்படி யாவது, மற்ற மாநிலங்களைப் போலத் தொழிற் சாலைகள், பொருளாதார வளர்ச்சி, சமூக முன் னேற்றம், சுற்றுலாத்துறை விரிவு, பாதுகாப்பு வசதி ஏற்பட்டுள்ளதா? அதுவுமில்லை. ஆகவே, காஷ்மீர் ஓர் அமைதி நாடாக அமைந்து, தொழில் வளம், சுற்றுலாத்துறை வளர்ச்சி, இந்திய மக்களோடு சேர்ந்து வாழும் தோழமை, காஷ்மீரின் பொது வளர்ச்சி, முன்னேற்றம் காண, 370 சிறப்புப் பிரிவு, 35ஏ சலுகைகளைத் தவிர்த்துத் தன்னிகரில்லாச் சீரான வாழ்க்கை பெற வேண்டும். சாதிகளை

மறந்து மற்ற சாதி மக்களுடனும் சேர்ந்து வாழும் பண்பு விரும்ப வேண்டும்.

– முனைவர் டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன், கோவை.

இந்தியாவின் ஏனைய மாநில மக்கள் செலுத்துகின்ற வரிப்பணத்தைக் கொண்டு காஷ் மீரின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்க வேண்டும். ஆனால், அதே நேரத்தில் அதன் மீது எந்தவித உரிமையையும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது எந்தவிதத்தில் நியாயமானது? 70 ஆண்டு கள் இப்படித்தான் இருந்தது என்று வாதாடுவோர் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் பெற் றுள்ள வளர்ச்சியைக் காஷ்மீர் பெற்றுள்ளதா? தொழில், கல்வி முதலியவற்றில் எந்த நிலையில் உள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். துப்பாக்கியும் கையுமாகச் சுற்றும் இராணுவ வீரர் களின் கண்காணிப்பில் இருப்பதுதான் சுதந் திரமா? இதை மாற்ற நினைப்பது குற்றமா? காலத் திற்கேற்பவும், சூழ்நிலைக்கேற்பவும் சட்டங்கள் உருவாக்கப்பட்டும், மாற்றப்பட்டும் வந்துள்ளது. அதுபோலத்தான் இந்த 370 மற்றும் 35 ஏ–வும். இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் வளர்ச்சி அடை வதைப்போலக் காஷ்மீரும் அடைய வேண்டும்.

– புலவர் கருமலைத்தமிழாழன், ஒசூர்.

காஷ்மீருக்கான சிறப்புத்தகுதி நீக்கப்பட்டது சரிதான். ஆனால், அது முறையாகச் செயல் படுத்தப்படவில்லை என்பதுதான் சர்ச்சைக் குரியது. இது மட்டுமல்ல, பிரதமர் மோடி ஆட்சி யில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத் துமே அவசரகதியில் திட்டமிடப்படாமல் செயல் படுத்தப்படுவது வாடிக்கையாகிவிட்டது. பண மதிப் பிழப்பு எதற்காகச் செயல்படுத்தப்பட்டதாகச் சொல்லப் பட்டதோ, அந்த நோக்கம் இன்னும் ஈடேறவில்லை.

அதேபோல் சரக்கு மற்றும் சேவை வரி அமல் படுத்தியதில் ஏகப்பட்ட குளறுபடிகள். அதுபோல் தான் காஷ்மீர் விவகாரமும் ஆகிவிட்டது. இது பற்றி முழுமையாக ஆராய்ந்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்திச் சட்டம் நிறைவேற்றியிருக்க வேண்டும். குடும்பத்தினரைச் சந்திக்கக்கூட அரசிடம் அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை. தீவிர ஆலோசனை செய்து மிகச்சரியாகத் திட்ட மிட்டு நடவடிக்கை எடுத்திருப்பின் இவற்றைத் தவிர்த்திருக்கலாம்.

– உ.மு.ந. ராசன் கலாமணி, கோபிசெட்டிபாளையம்.

ஓர் அரசாங்கம் கொடுத்திருந்த உறுதி மொழியை வேறு ஓர் அரசு அதைச் சம்பந்தப்பட்ட மக்களைக் கேட்காமலேயே ரத்துச் செய்வது தவறு இல்லை என்ற நிலைப்பாட்டில் தற்போதைய அரசு இயங்கி வருகிறது. இதைப் போலவே வடகிழக்கு மாகாணங்களுக்குக் கொடுத்துள்ள உறுதியைக் காற்றில்விட எவ்வளவு காலம் வேண்டும்? இனி எந்த அரசு கொடுக்கும் உறுதிமொழிகளையும் யாரும் நம்ப மாட்டார்கள். உதாரணமாக ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை, கருப்புப்பண ஒழிப்பு 15 லட்சம்!

– ம.பெ. சுதந்திரகுமார், சென்னை.

மத்திய அரசு எதைச் செய்தாலும் எதிர்க் கட்சி என்ற முறையில் காங்கிரஸ் எதிர்கிறது. காஷ்மீர்ப் பிரச்சனையில் காங்கிரஸ் கட்சியிலேயே சிலர் மத்திய அரசுக்கு ஆதரவாகப் பேசினர். திமு.க.வும், அதன் கூட்டணிக் கட்சிகளும் மத் திய அரசு காஷ்மீரில் மேற்கொண்ட நடவடிக்கை களை எதிர்ப்பது இஸ்லாமியர்களின் வாக்குகளுக் காகத்தான். அரசியல்வாதிகள் நம் நாட்டில் பல இடங்களில் சொத்துக்களை வாங்கிக் குவித்துள் ளனர். அப்படிப்பட்டவர்கள் இனிமேல் காஷ்மீரில் சொத்துக்களை வாங்கலாம். தொழிலில் முதலீடு செய்யலாம்.

– என். ஆர். ஜெயசந்திரன்,

காவேரிப்பட்டணம்.

காஷ்மீர் மசோதா மரபு மீறாமல் சட்டமாக்கப் பட்டிருக்க வேண்டும். அரசியல் சாசனத்தைத் திருத்துவதற்கு முன் ஒரு முறையல்ல, பல முறை சிந்திப்பது அவசியம். பிரச்சனைகள் பெரும் பிரச் சனைகளாக மாறிவிடுவதற்கு அதிரடி நடவடிக் கைகள் காரணமாகிவிடக்கூடாது. காஷ்மீரிகள் இந்தியாவை வெறுக்கிறார்கள் என்றாலும், பாகிஸ் தானை விரும்பி அங்கு இடம் பெயரவில்லை என்பதையும், அவர்கள் சமய நல்லிணக்கவாதி களாகவும் உள்ளார்கள் என்பதையும் நாம் அறிகின்றபோது நமக்கு ஆறுதலுண்டாகிறது.

எது எப்படியிருந்தாலும், காஷ்மீரிகள் அமைதி யான, இயல்பான வாழ்வில் ஈடுபடவும், பொருளா தார ரீதியில் முன்னேற்றம் காணவுமான ஏற்பாடு களைக் காஷ்மீரிகளின் ஒத்துழைப்போடு செய்ய முற்படின், அதுவே காஷ்மீர்ப் பிரச்சனைக்குச் சிறந்த தீர்வாக இருக்கும்.

– மேலை. தமிழ்க்குமரன், மேலைச்சிவபுரி.

தீபத் திருவிழா...!




கவிச்சுடர் அழகுதாசன்

அன்பு வளரவும்
அமைதி பூணவும்
ஐப்பசி தந்த அருமைவிழா!
துன்பம் அகலவும்
தூய்மை பேணவும்
ஊரெலாம் வந்த ஒருமைவிழா!

நரகா சுரனைக்
கொன்று வீழ்த்திய
நல்லதோர் விடுதலை பெற்றவிழா!
பரந்த மனமும்
பெருத்த மழையும்
வேண்டியே வழிபடும் வேள்விவிழா!

தேடும் செல்வமும்
ஆயுள் நூறும்
அளித்திட வந்த சக்திவிழா!
நாடு செழிக்கவும்
நல்லறம் ஓங்கவும்
நாட்டில் வந்த பக்திவிழா!

வாய்மை ஓங்கவும்
மானுடம் வெல்லவும்
மண்ணில் வந்த பொதுமைவிழா!
தீயோர் திருந்தவும்
தீமைகள் மாயவும்
திக்கெலாம் வந்த தீபவிழா!


LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷனர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
*For purchase above RS.8000/- condition apply
LG
SAMSUNG
SONY
PHILIPS
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
VIDEOCON
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
Micromax nothing like anything
VOLTAS LIMITED
Butterfly
TATA Sky
Crompton Greaves
USHA
HAVELLS
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811



கட்டுரை

இந்திய விண்வெளித் துறையின் தந்தை
டாக்டர் விக்ரம் ஏ. சாராபாய்



நெல்லை சு.முத்து

“விக்ரம் சாராபாய் நாடறிந்த சாதனையாளர்களுள் ஒருவர் என்பது உண்மை. ஒவ்வொரு பாமர மனிதனின் வாழ்வுக்குத் தேவையான எண்ணற்ற பல துறைச் செயல்பாடுகளில் ஒரே சமயத்தில் அயராது தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். இத்தகைய முயற்சியின்போது தனிமனித உறவுகளின் நெருக்கத்தையும் வளர்த்துக் கொண்ட மாமனிதர்! அவரது ஆர்வத்தின் மையக் களமாக இருந்தது அறிவியல் ஒன்றே என்பது தெள்ளத் தெளிவாகும்.'' இவ்விதப் புகழ்மாலை சூட்டியவர் அமெரிக்க மாசச்சூசெட்ஸ் தொழில்நுட்பப் பயிற்றகத்தின் அண்டவெளிக் காஸ்மிக் கதிர் இயற்பியல் முன்னோடி புரூனோ ரோஸ்ஸி.

நம் நாட்டு அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வித்திட்ட அறிவியலாளர்கள் வரிசையில் முன்னணி வகிக்கும் டாக்டர் விக்ரம் ஏ.சாராபாய், குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகரில் ஒரு ஜைனக் குடும்பத்தில் 1919 ஆகஸ்ட் 12 அன்று பிறந்தவர். தந்தை அம்பாலால் சாராபாய், அகமதாபாத்தில் சிறந்த தொழில் அதிபர். தாயார் சரளா சாராபாய். அம்பாலால் சாராபாய் உண்மையிலேயே ‘மேக் இன் இண்டியா’ திட்டத்தின் மூலவர் என்று கூடச் சொல்லலாம். அந்நிய முதலீடுகள் இல்லாமலேயே, காலிக்கோ (Calico Mills) தொழிற்சாலை தொடங்கியவர்.

தாயார் நடத்தி வந்த ‘ரெட்ரீட்’ என்னும் கல்விக் கூடத்தின்வழி இந்தியாவில் முதன்முறையாக அறிமுகமான ‘மாண்டிசோரி’ கல்வி முறையில் பயின்றார் சிறுவன் விக்ரம் சாராபாய். பயிற்சி வகுப்புகள் நடத்த, இல்லத்திற்கே ஆசிரியர்கள் வருவார்கள். அம்பாலால் சாராபாய் தன் இல்லக் குழந்தைகள் 8 பேருக்காக 13 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இருந்தனர். அவர்களில் மூவர் முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்களாம்.

கடினமான கல்விக் கொள்கை ஏதும் இல்லை. பொதுத் தேர்வு என்று ஒரே வாணலியில் போட்டு வறுத்து எடுக்காமல் மைதானங்களில்



எஸ்.எஸ்.பட்னாகர், ஹோமி ஜே.பாபா, பேரா. சர்.சி.வி. இராமன், விக்ரம் சாராபாய்

சைக்கிள் ஓட்டுதல், தோட்டக் குளத்தில் படகு சவாரி முதலிய இயல்பான பொழுதுபோக்கு களுடன் கூடிய எளிய கல்விமுறை. விளை யாட்டுப் பொம்மைகளும், அறிவார்ந்த குழந்தைப் பாடல்களும், உலக விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகளும்தாம் பாடங்கள். அந்த மாநிலக் கல்வி பயின்று விஞ்ஞானி ஆன மகான் சாரா பாய்.


குஜராத் கல்லூரி இடைநிலைத் தேர்வில் முதலாம் ஆண்டு வேதியியலில் முதல் மாணவர். ஒரு மதிப்பெண் வித்தியாசத்தில் கல்லூரியில் இரண்டாம் மாணவர் சாராபாய்.

சாராபாயின் உடல்வாகு, தலை அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பின்னாளில் அவர் உன்னதப் புகழ் பெறுவார் என்று பெற்றோரிடம் நோபல் இலக்கியவாதி ரவீந்திரநாத் தாகூர் ஒரு முறை கூறினாராம். 1.11.1935 நாளிட்ட தாகூரின் சிபாரிசுக் கடிதத்துடன் 1937–ஆம் ஆண்டு லண்டனில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் புனித யோவான் கல்லூரியில் சேர்ந்தார். இயற்பி யலும், கணிதமும் பயின்று, 1940–ஆம் ஆண்டு இளநிலைப் பட்டதாரி ஆனார். அணுக்கரு இயற் பியல் (Nuclear Physics) ஆய்விலும் ஈடுபட்டார்.

இரண்டாம் உலகப் போரின்போது ஐரோப்பா வில் ஏற்பட நெருக்கடி நிலையினால், இந்தியா திரும்பினார் சாராபாய். இங்கு பெங்களூருவில் இந்திய அறிவியல் கழகத்தில் (Indian Academy of Science) சேர்ந்தார். 1940 முதல் 1945 வரை நோபல் விஞ்ஞானி சர்.சி.வி.இராமனின் மாணவர் சாராபாய். 'அணுசக்தித் துறையின் தந்தை' என்று புகழப்படும் டாக்டர் ஹோமி ஜஹாங்கிர் பாபாவின் சக மாணவர்.

1942–ஆம் ஆண்டு அறிவியல் கழக சஞ்சிகையில் இவர் எழுதிய 'அண்டக்கதிர்களின் காலாந்தரப் பதிவுகள்' (Time Distribution of Cosmic Rays) என்ற ஆய்வுக் கட்டுரையே இவரை விஞ்ஞானியாக உலகிற்குப் பறை சாற்றியது.

1942–ஆம் ஆண்டு புனே நகரில் 'வானிலை ஆய்வுத் துறை'யில் (Meterological Department) சேர்ந்து தமது ஆய்வுப் பணியைத் தொடங்கினார். அதன் இயக்குநரான கல்பாத்தி ராமகிருஷ்ண ராமநாதன் (கே.ஆர்.ராமநாதன்) உடன் கலந்து ஆலோசித்து 1943–ஆம் ஆண்டு உயரமான இமய மலைப் பகுதியில் தங்கி, அண்டவெளியில்



நீல் ஆர்ம்ஸ்ட்ராங் உடன் டாக்டர் சாராபாய்

இருந்து தங்குதடையின்றிப் பொழியும் அண்ட வெளிக் கதிர்வீச்சினை ஆராய்ந்தார்.

1942–ஆம் ஆண்டு மிருணாளினி என்னும் நடனக் கலைஞரைத் திருமணம் செய்து கொண் டார் சாராபாய். அறிவியலும், கலையும் இணைந்த தோர் இல்லறத்தில், மகளாக நாட்டிய மங்கை மல்லிகா, மகனாக விஞ்ஞானி கார்த்திகேய சாராபாய் தோன்றினர்.


இங்கிலாந்தில் கேவண்டிஷ் பரிசோதனைச் சாலையில் ஆய்வுகள் நடத்தினார். நிலநடுக்கோட் டினை ஒட்டிய 'வெப்ப மண்டலப் பிரதேசங்களில் அண்டக்கதிர்வீச்சு' (Cosmic Ray Investigation in Tropical Latitudes) என்கிற தலைப்பினில் 1947–ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத் தில் முனைவர் பட்டமும் பெற்றார்.

சுதந்திர இந்தியாவில் 1947 நவம்பர் 11 அன்று அகமதாபாத், மகாத்மா காந்தி அறிவியல் நிறுவனத்தில் 'கர்மக்ஷேத்திரா கல்வி அறக் கட்டளை' மற்றும் 'அகமதாபாத் கல்விக்கழகம்' ஆகியவற்றுடன் இணைந்து அகமதாபாத் ஆய்வுக் கூடம் என்கிற அறிவியல் கோயிலைச் சர்ச்சைக்கு இடம் இல்லாத வகையில் கட்டி எழுப்பினார். தொடக்கக் காலத்தில் அகமதாபாத் கல்விக் கழகத்தின் சில வகுப்பறைகளிலேயே ஆராய்ச்சி கள் நடைபெற்றன.

இன்று சி.எஸ்.ஐ.ஆர் (CSIR) என்று அறியப் படும் அறிவியல், தொழில்துறை ஆய்வுக் குழுமத் தின் (Council of Scientific and Industrial Research) பேராசிரியர் எஸ்.எஸ்.பட்னாகர் மற்றும் இந்திய அணுசக்தித் துறைத் தலைவர் டாக்டர்

ஹோமி ஜே.பாபா ஆகியோர் ஒத்துழைப்புடன், 1947–ஆம் ஆண்டு டாக்டர் சாராபாய் எழுப்பிய அகமதாபாத் ஆய்வுக் கூடத்தின் சொந்தக் கட்ட டத்திற்கு 1952–ஆம் ஆண்டு சர்.சி.வி.ராமன் அடிக்கல் நாட்டினார். அதுவே 'இயற்பியல் ஆராய்ச்சிக் கூடம்' (Physical Research Laboratory) என்கிற பொலிவுடன் 1954–ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேருவினால் 'திறப்பு விழா'க் கண்டது.

1951–ஆம் ஆண்டிலேயே டாக்டர் சாராபாய் குஜராத் எல்லையை ஒட்டி ராஜஸ்தானில் அபு



சர்.சி.வி.இராமனின் மாணவர் சாராபாய்

மலையில் அண்டக்கதிர் ஆய்வுக்கூடம் நிறுவினார். முதன்முதலாக ஓசோன் படல ஆய்வு இங்கிருந்துதான் மேற்கொள்ளப்பட்டது.

1956–ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற 'உற்பத்தித் திறன் மாநாட்டிற்கு' (Productivity Congress) இந்தியத் தொழில் அதிபர்களை டாக்டர் சாராபாய் வழி நடத்தினார். பரோடாவில் (வாதரோதா) 'சாராபாய் கெமிக்கல்ஸ்' (1950) எனும் வேதிமத் தொழிற்சாலையில் மேலாளர் பொறுப்பு வகித்தார். இவரது முயற்சியினால் சாரா பாய் 'மெர்க் கெமிக்கல்ஸ்' (Sarabhai Merck Chemicals) 1958–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது.

1960–ஆம் ஆண்டு கொல்கத்தாவில் 'ஸ்டாண்டர்டு ஃபார்மசூட்டிக்கல்ஸ்' என்னும் மருந்துத் தொழிற்சாலைப் பொறுப்பேற்றார். பரோடாவில் சாராபாய் ஆய்வு மையம், சாராபாய் பொறியியல் குழுமம், சாராபாய் கண்ணாடித் தொழிற்சாலை எனப் பல்வேறு அமைப்புகளின் மூலவர் டாக்டர் சாராபாய்.

அகமதாபாத் நகரில் 'ஆப்பரேசன் ரிசர்ச் குரூப்' என்ற பெயரில் இந்தியாவிலேயே முதன் முறையாகச் சந்தை நிலவர ஆராய்ச்சிக் குழுமத் தினைத் தோற்றுவித்தார். 'வளர்ச்சிக்கான நேரு அறக்கட்டளை', இந்திய மேலாண்மை நிறுவனம், 'ஆதிரா' (ATIRA) என்று சுருக்கி அழைக்கப் பெறும் 'அகமதாபாத் ஜவுளித் தொழில்துறை ஆய்வுக் கழகம்' சூழலியல் திட்டமிடல் மற்றும் தொழில்நுட்ப மையம், பார்வையற்றோர் நலக் கழகம் போன்றவற்றின் உருவாக்கத்தில் முழுமை யாகப் பங்களித்தவர். தம் மனைவியுடன் இணைந்து 'தார்ப்பணா நிகழ்கலைகள் கல்வியகம்' ஒன்றையும் நிறுவினார்.

அகமதாபாத்தில் மட்டுமன்றி, திருவனந்த புரத்தில் விண்வெளி ஆராய்ச்சி, கொல்கத்தாவில் 'மாறுபடு ஆற்றல் சைக்ளோட்ரான் திட்டம்', ஹைதராபாத்தில் 'இந்திய மின்னணுவியல் கழகம்', ஜார்கண்டில் 'இந்திய யுரேனியம் கழகம்' என உண்மையான தேசியச் சிந்தனையுடன் அறி வியலுக்குப் பாடுபட்ட உன்னத மனிதர் விக்ரம் சாராபாய். கே.ஆர்.ராமநாதன் ஆலோசனைப்படி, 1955–ஆம் ஆண்டு காஷ்மீரில் குல்பர்க்கில் முதன் முதலாக நவீன ஆராய்ச்சி நிலையம் தோற்று விக்கப்பட்டது.

அணு ஆற்றலின் அமைதிப் பயன்பாடுகள் குறித்த நான்காவது ஐக்கிய நாடுகள் (United Nations Committee on the Peaceful uses of Outer Space, 1962) மாநாட்டின் துணைத் தலைவராகவும் செயல்பட்டவர். 1962–ஆம் ஆண்டு கட்டாக் நகரில் நடைபெற்ற இந்திய அறிவியல் பேரவையில் இயற்பியல் துறைத் தலைவராகவும், 1964–ஆம் ஆண்டு உதயப்பூரில் நடைபெற்ற புக்வா மாநாட்டின் அமைப்பாளராகவும், 1966–ஆம் ஆண்டு இந்திய மின்னணுத் துறைக் குழுவில் உறுப்பினராகவும் செயல்பட்டார்.

இந்திய அணுசக்தித் துறையின் தலைவரான பேராசிரியர் ஹோமி ஜே. பாபாவின் உதவியுடன் அன்றைய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு வின் முனைப்பான ஊக்கத்தினால் பேராசிரியர் விக்ரம் ஏ.சாராபாய் தலைமையில் 1962–ஆம் ஆண்டு 'இன்கோஸ்பார்' (INCOSPAR) எனும் 'இந்தியத் தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் குழுமம்' (Indian National Council for Space Research) உருவானது.



டாக்டர் சாராபாயுடன்
ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்

அணுசக்தித் துறையிலும் சிறப்பாகப் பங்களித்தவர். 1970ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற பன்னாட்டு அணுசக்தி முகமை மாநாட்டின் தலைவராகவும் செயல்பட்டார் டாக்டர் சாராபாய்.

விண்வெளித் துறையினைப் பொருத்தமட்டில், புவிகாந்த நடுக்கோட்டுப் பகுதியில், திருவனந்தபுரம் அருகில் தும்பா கடற்கரை கிராமம், வானிலை ஆராய்ச்சிக்கு ஏற்ற இடம். பல முன்னேற்ற நாடுகளின் துணையுடன் அங்கு 'டெர்ல்ஸ்' (TERLS) எனச் சுருக்கி அழைக்கப்படும் 'தும்பா நிலநடுக்கோட்டு ராக்கெட் ஏவுதளம்' (Thumba Equitorial Rocket Launching Station) உதயமானது.

அறிவியல்பூர்வ நல்லிணக்கத்தை விரும்பியவர் டாக்டர் சாராபாய். ஆ.ப.ஜெ.அப்துல் கலாம், ஆர்.ஆராவமுதன், இரா.மா.வாசகம், ஏ.இ.முத்துநாயகம், ஏ.வி.சிட்னிஸ், எம்.ஆர்.குறுப்பு, டி.ஈஸ்வரதாஸ், வி.ஆர்.கவாரிக்கர், ஆர்.டி.ஜான்,



அப்போலோ வீரர்கள் கொண்டுவந்த
நிலா மண்ணை ஆராய்கிறார்
டாக்டர் சாராபாய்

எச்.ஜி.எஸ்.மூர்த்தி, பி.பி.காலே, ஏ.எஸ்.பிரகாசராவ், யு.ஆர்.ராவ், சுரே தாக்குர், ஒய்.ஜனார்த்தனராவ், எம்.கே.முகர்ஜி போன்ற தனிச்சிறப்பு மிக்கப் பலரையும் தம்முடன் இணைத்துக்கொண்டார்.

1963 நவம்பர் 21 அன்று இந்த ஏவுதளத்தில் இருந்து அமெரிக்க நாட்டின் 'நைக்கி அப்பாச்சி' என்கிற வானிலை ஆய்வூர்தி செலுத்தப்பட்டது. இந்திய மண்ணில் இருந்து ஏவப்பட்ட முதலாவது ஏவூர்தி இது.

அரை நூற்றாண்டுக்கு முன், தும்பா நிலையத்தில் உந்து எரிபொருள் துறையால் 'மிருணாள்' என்ற எரிபொருள் தயாரிக்கப்பட்டது. அந்த நைட்ரோ–கிளிசரின் எரிபொருளால் இயங்கும் ரோகிணி–75 ஆய்வூர்தி 1969 பிப்ரவரி 21 அன்று ஏவப்பெற்றது. உள்நாட்டு பாலி வினைல் குளோரைடு எரிபொருள் நிறைத்த ஆய்வூர்தி 1969 மார்ச் 2 அன்று 'நிலைப் பரிசோதனை' செய்யப்பட்டது. 1969 டிசம்பர் 7 அன்று வெற்றிகரமாக விண்ணில் பறக்க விடப்பட்டது.

டாக்டர் சாராபாய் பிறந்த பொன்விழா ஆண்டில் 1969 ஆகஸ்ட் 15 அன்று இந்திய அணுசக்தித் துறையின்கீழ் இஸ்ரோ (ISRO) என்கிற 'இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம்' (Indian Space Research Organisation) தோற்றம் கண்டது. திருவனந்தபுரத்தில் இவர் உருவாக்கிய 'விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையம்' இன்று அனைத்துலக நாடுகளில் முன்னணி வரிசையில் நிற்கிறது.

சாந்தி சொரூப் பட்னாகர் விருது (1962), பத்ம பூஷன் 1966) போன்ற விருதுகள் பெற்றவர். 1971 டிசம்பர் 30 அன்று மறைவுக்குப் பிறகு, பத்ம விபூஷன் (1972) விருது வழங்கப்பட்டது. இவரது முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலியாக, சாராபாய் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.


1973–ஆம் ஆண்டு பன்னாட்டு வானவியல் ஒன்றியம், நிலாவில் 'அமைதிக்கடல்' பிரதேசத்தில் 'பெஸ்ஸல்' என்னும் குழிவிற்கு 'சாராபாய் பள்ளம்' என்று பெயர் சூட்டிக் கௌரவித்து இருக்கிறது.

இன்று சந்திரயான்–1 திட்டத்தில் அவரது தலைமைச் சீடர் டாக்டர் அப்துல் கலாம் ஆலோசனையின்பேரில் நம் தேசியக்கொடி பதித்த 'மிப்' என்ற 'நிலா மோதுகலன்' சந்திரனில் சென்று விழுந்தது.

சந்திரயான்–2 திட்டத்தின்கீழ் 'விக்ரம்' எனும் கலன் சந்திரனில் மெல்லத் தரை இறங்குகிறது என்றால் நிலாவில் முதல் இந்தியர் விக்கரம் சாராபாய் அல்லவா? ●

நூல் விமர்சனம்

‘ஈரோடு தமிழன்பன் ஆயிரம்’



ஈரோடு தமிழன்பன் ஆயிரம்
தொகுப்பாசிரியர் :
தி. அமிர்தகணேசன்
வெளியீடு :
விழிகள் பதிப்பகம்
8/எம் 139, 7-ஆம் குறுக்குத் தெரு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர் விரிவு
சென்னை – 600 041
செல் : 94442 65152
பக்கம் : 1000, விலை ரூ. 700/-

‘ஈரோடு தமிழன்பன் ஆயிரம்’ கவிதை நூலைக் கைகளில் வைத்து வாசிக்க வாசிக்க, கைகளுக்குத் தான் கனக்கிறது. மனசோ, மலரினும் மெல்லிதா கிறது. பிறகு அது மணக்கவும் தொடங்குகிறது. வார்த்தைகளுக்குள்ளிருந்து வரும் வாசனையை நுகர நுகர, மனம் மயங்குகிறது. கவிதையோடு கரை கிறது.

இந்த மாயத்தை நமக்குள் வினைப்படுத்தும் ரசாயன மாற்றம் ஒன்று நிகழ்த்துகிறது. திடமாக உண்டவற்றைத் திரவங்களாக்கும் செரிமானம் தொடரும் வரை நமது ஆரோக்கியத்திற்கு அமோக லாபம்.

இரை தேடி உண்ட ஜீவராசிகள் எல்லாமே மறுபடியும் பசி வரும்வரை படுத்தேதான் கிடக்கும். இந்த ஜீவராசிகளில் மனிதன் மட்டும் விதிவிலக்கு. இவனுக்குப் பசி இருந்து கொண்டேயிருந்தாலும், இவன் படுத்துக் கிடக்கும் ஜீவராசியல்ல.

அடிவானத்தில் மறைகின்ற சூரியக் கதிர்களின் மஞ்சள் கீற்றுகளை மனித மனம் கொஞ்சுகிறது. தனது இறுக்கங்களிலிருந்து இளகும் பனி போல உருகிப்போகிறது. விலங்குக்குள்ளிருந்து விடுபட்டுப் பறவையாகச் சிறகு விரித்து மனம் பூத்துப் போகும் அத்தருணமானது, கண நேரமாய் இருந்தாலும், அதன் ஒரு திவலை போதும் நமது ஆன்ம தாகத் தைத் தணிக்க.

ஈரோடு தமிழன்பனின் ஆயிரத்தில் – எக் கவிதையை உருவி எடுத்தாலும், அதனுடைய படிமம், குறியீடு, கற்பனை, மின்னோட்டம், ஸ்பரிசம் ஆகிய அனைத்தின் சேர்மானம் நம்மை என்னமோ செய்கின்றது.

அதனால்தான் புதுக்கவிதையை மறுதலித்து வந்த எழுத்தாளர் ஜெயகாந்தனை ஈரோடு தமிழன்பனின் புதுக்கவிதை மறுவாசிப்புச் செய்ய

வைத்தது. இவருடைய சமகாலத்து இலக்கிய ஆளுமைகள் எவராயினும் இவரைத் திரும்பிப் பார்க்காமல் கடந்துவிட முடியவில்லை.

இருபத்தியோரு வயதிலேயே மரணமடைந்து விட்ட ஆங்கிலக்கவி ஜான் கீட்ஸ் எழுதிய மூன்று இள மங்கைகளைப் பற்றிய ஒரு கவிதையில், ஒருத்தியை Lady of Love என்பான். அதில் காதல் தோல்வியும், துயரமுமே அவனுக்கு மிஞ்சியது. அடுத்தவள் Lady of Fame என்பான். ஆம். ஆசைப் பட்டது போலப் புகழ் அவனுக்கு அமையவில்லை. மூன்றாமவள் Lady of Poesy என்பான். அவள் கவிதைப் பெண். அவள் மட்டும் அவனை ஏமாற்றவில்லை. கவிதை எனும் அம் மங்கையின் மடியிலேயே மகாகவி கீட்ஸ் மாய்ந்து கிடந்தான்.

ஈரோடு தமிழன்பனும் கவிதையின் மடியில் படுத்துப் படுத்து எத்தனையோ விடியல்களை இன்னும் கண்டு வருகின்றார். இவருக்கான புகழ் உத்தரவாதப் பட்டுள்ளதை எவரே மறுப்பார்!

கவிதை முடிவுக்கான யுகம் சம்பவித்துவிட்டதோ என்ற எனது சந்தேகத்தைப் பற்றி அவரிடம் நான் உரையாடியபோது, முன்பைவிட மும்மடங்கு வீரியத்தோடு அந்த யுகம் பிரகாசமாக இருப்பதாகப் பிரசங்கமே செய்தார்.

கவிதை – அவருடைய சென்னி மலைச்சாரலில் தினசரி மலரும் குறிஞ்சிப் பூவாக உள்ளது. மனோ தைரியம் கரை புரளும் அவருக்குள், ‘நடந்தாய் வாழி’ எனக் கவிதை நவீனத்துவமடைந்து வருவதை நமக்குப் போதிக்கிறார்.

கவிதையில்லாமல் போனால், மொழிக்கு முகம் இருக்காது. **ஈரோடு தமிழன்பனின் கவிதைகள் ஆயிரம்** – சலித்து எடுக்கப்பட்டவையாக இருந்தாலும், விடுபட்டுப் போனவையும் கூட வெல்லப் பிள்ளையாரின் சர்க்கரைத் துகள்கள்தான். அவற்றிலும் அதே சுவை.

சங்க இலக்கியத்தில் உடன் போக்குப் பற்றிய ஒரு சம்பவம் உண்டு. பெற்று வளர்த்த தாய், பரபரப்போடு வீட்டை விட்டு வெளியேறி, ஊரையும் கடந்து எதிர்ப் படுவோரை எல்லாம் “ஐயா, நீங்கள் வரும் வழியில் ஓர் ஆடவனோடு என் மகள் உடன் போனதை உற்றுக் கவனித்துப் பார்த்த ஞாபகம் உள்ளதா?” எனக் கேட்கிறாள். அத்தாயின் தவிப்பைப் பார்த்தவருக்குப் புரிகிறது அவளுடைய பரபரப்பு.

இத்தாய் கேட்ட வழிப்போக்கர் ஆடவராக இருந்தால், “வழியில் கட்டிளங்காளையை மட்டுமே கவனித்துப் பார்த்தேன். உடன் நடந்து வந்த அந்தத் தங்கத் தாரகையை அப்படிக் கவனிக்கவில்லை தாயே!” என்கின்றனர். பெண்களாய் இருந்தால், “ஆமாம் தாயே, பேரிளம் பெண்ணொருத்தி சென்றதைக் கண்டேன். உடன் வந்த சிங்கத்தை உற்றுக் கவனிக்கவில்லை” என்றனர்.

ஆம்! தமிழர் நாகரிகம், நடைமுறை வாழ்க்கையாக இருந்த காலம் அது.

இந்த உடன்போக்குச் சங்கப் பாடல் சம்பவத்தை ஈரோடு தமிழன்பன் **இதுபோல் அதுவும் ஒரு மழைநாள் இரவில்** என்ற அவருடைய கவிதை, சங்கத் தமிழைச் சங்கீதமாக்கித் தந்துள்ள அழகை ரசித்தேன்.

ஒரு தாயின் பொன் கனா ஒன்று வீட்டுச் சிறையிலிருந்து விடுதலையாகியது. அந்த விடுதலைக்காக மதம் பிடித்த காற்று, மரங்களில் மோதி உடைந்து சிதறியது. கதவுகளின் சந்துகளில் ஊழிக் கலவரம் கசியத் தொடங்கியது. இந்தப் பின்புலத்தில் தான் அத்தாயின் நிழலில் வளர்ந்த ஒரு கிளி ஒரு கிளை நோக்கிப் பறந்து சென்றது.

விடலைப் பருவ விளையாட்டில் உடலுக்குரிய அந்நிய அரவணைப்பு அவசியமாகிறது. தாயின் தழுவல் வேறு, தலைவனின் தழுவல் வேறு. மகளிடமுள்ள பருவ மாறுதல்களைக் கண்ட தாய்க்கு, ஒவ்வோர் இரவின் நகர்வும் சோதனையாகத்தான் இருந்தது.

காவல் எத்தனை கடுமையானதாக இருந்தாலும், கண் சிமிட்டல்களா லேயே காதலர்கள் உரையாடி விடுவார்கள் என்பதை அத்தாய் அறிவாள்.

திட்டமிட்டபடி அந்தப் பொற்தேர் புறப்பட்டுப் போய்விட்டது. அவள் இருந்த அறையில் திறந்த பேனா – விரித்த புத்தகம் – கலைந்த போர்வை மட்டுமே இருந்தன – மகள்தான் இல்லை. ஆனாலும், மகளின் இரு சொட்டுக் கண்ணீர்த் துளிகளைத் தாய் அங்கே கண்டெடுத்தாள்.

மகள் ஓடிப் போவதற்கான ஒத் திகையின் மறைபொருளைப் புரிந்து கொள்ள முடியாத தற்குறியானவளாக இருந்த தாய், தவிக்கிறாள். புத்தி பேதலிக்கிறாள். மகளின் பழைய பாசமுத்தங்களில் மனம் நனைந்து ஈரமாகிறது.

ஒரு வேளை மகளே தாயிடம் தனது தீர்மானத்தைத் தெரிவித்திருந் தால், சம்பிரதாயங்களை எல்லாம் உடைத்து நொறுக்கி மகளுக்கு முதல் ஆசீர்வாதத்தைத் தானே வழங்கி யிருப்பாள்.

இன்றைக்குத் தாயாக உள்ள இவளே, மாடப் புறாவாக அவனோடு சிறகடித்துப் பறந்து போனதை இப் போது நினைக்கிறாள். அப்போது அவளுடைய தாய் பட்ட துயரத்தை அனுபவித்துத் துடிக்கிறாள். அச்சுப் பிசகாமல் அதே சம்பவம் மீண்டும். தப்பித்துப் போன மகளின் அப்பா – தனது கணவன் – இப்படித் தன்னைக் கடத்திய அந்த மழைநாள் போல்தான் இதுவும் நிகழ்ந்துவிட்டதை நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, மகிழ்ந்து போனாலும், தாய்க்கு உரிய தவிப்பும் பாசமும் கவிதை முழுவதும் சூடு பரப்பி வியாபித்துக் கிடக்கிறது.

இக்கவிதையில் உள்ள ஏக்கப் பெரு மூச்சுகளை, இதய வெடிப்புகளை, அடிமடியில் பற்றிக்கொண்ட நெருப்பை, மகரந்தச் சேர்க்கைக்கு வட்டமிட்டுப் பறந்த மணிவண்டை, மகளில்லாத அந்த அறைச் சிறையை, இவளைக் கடத்திச் சென்றுவிட்ட நெஞ்சம் கவர்ந்த கள்வனை என எல்லாமே தமிழ்ப் பண்பாட்டின் தடயங்களாக உள்ளதைக் கவிஞர் தொட்டுக் காட்டிய பாங்கு ஒவ் வொன்றும் இன்புறுத்துகின்றது.

ஐரோப்பியப் பண்பாட்டில் இந்த உடன்போக்குக் காதல் முறை உண்டா? இல்லை.

இந்த உடன்போக்கு – கருத் தொருமித்த காதலரை உறவுப் படுத்துகிற உன்னதமான முற்போக்கு. செம்புலப் பெயல் நீர் போலச் சேர்த்து வைத்த அன்றைய நடை முறை வாழ்க்கை.

இது எப்படி இப்போது வக்கிரப் பட்டுச் சாதி ஆணவக் கொலையாக மாறியது என்பதைப் பற்றிச் சிந்திக்கவும் செய்கிறது.

ஈரோடு தமிழன்பன் ஆயிரத்தில் உருவி எடுத்த ஒரு கவிதைக்குச் செய்த உரைவிளக்கமே, ஒட்டுமொத்த இன் றைய சமுதாயத்தின் மனப்போக்கைச் சித்தரிக்கப் போதுமானது.

ஆயிரம் கவிதைகளையும் இப்படி உரைமயப் படுத்தினால், ஈரோடு தமிழன்பன் இன்னொரு பாப்லோ நெரூடாவாகத் தமிழ் இலக்கிய வீதியில் பவனி வருவதைக் கண்டு கொள்ள முடியும்.

– சிபி.

கட்டுரை



கலைமாமணி

கவிஞர் கா.மு. செரீப்

இஸ்லாமியராக இருந்தும் இந்துசமயப் புராணங்களில் ஆழ்ந்த புலமையும், ஞானமும், மரியாதையும் கொண்டவர்! அபலைக்குப் பிறந்த பெண் குழந்தையைத் தன் சொந்த மகள் போல வளர்த்துத் திருமணம் செய்து வைத்தவர்! சுய மரியாதை உணர்வும், தேசப்பற்றும் கொண்டு தனக்கென வாழாதத் தன்னலமற்றவர்! இத் தகைய சிறப்புகளைப் பெற்றவர்தான் 'காதர்ஷா முகமது செரீப்' என்ற முழுப் பெயர் கொண்ட கலைமாமணி கவிஞர் கா.மு. செரீப்!

எளிமையான குடும்பம் : தஞ்சை மாவட்டத் திலுள்ள அபிவிருத்தீஸ்வரம் என்ற ஊரில் 1914–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16–ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று காதர்ஷா முகமது – முகமது இப்ராகிம் பாப்பாத்தம்மாள் தம்பதி யருக்கு கா.மு. செரீப் மகனாகப் பிறந் தார். வசதி குறைவான, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எளிமை யான குடும்பம்.



இளமையில் கசாப்புக்கடை வைத்துக் கறிவெட்டிக் கொடுத்து வணிகம் செய் தார். ஆனால், சுத்தமான சைவராகவே வாழ்ந்தார். பெற்றோர் போதித்த ஒழுக்கம், பண்பு, இவை தவிர பள்ளிப் படிப்பு ஏதும் இல்லை. பட்டறிவும், இறைவன் கொடுத்த அறிவும் அவரை உயரிய சிந்தனைகள் கொண்டவராகவும், கவிகள் புனை யும் ஆற்றல் மிக்கவராகவும், சுயமரியாதையுடன் வாழவும் மாற்றின.

முதல் கவிதை : தமிழே உயிர்மூச்சென வாழ்ந்த கா.மு. செரீப் தன்னுடைய இருபதாம் வயதில் 1934–ஆம் ஆண்டில் தந்தை பெரியாரின் சுயமரியாதைப் பிரச்சாரத்தால் கவரப் பட்டு, தந்தை பெரியாரின் 'குடிஅரசு' இதழில் முதல் கவிதையை எழுதி னார். அவரின் முதல் கவிதையே எழுச்சிக் கவிதையாகவும், புரட்சிக் கருத்துக்களைப் புகட்டும் கவிதையா கவும் இருந்தது.

என்.ஆர். ஜெயசந்திரன்

அந்நாளில் நம் பாரத நாடு ஆங்கிலேயர் களின் கட்டுப்பாட்டிலிருந்த போதும் அன்றைய அரசு இந்தியைத் தேசிய மொழியாக்கிட வேண்டும் என்று தீர்மானித்தது. அந்த இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து ''வீழ்க இந்தி!'' என்ற தலைப்பில் முதல் கவிதையை எழுதியவர் கா.மு. செரீப்!

அவர் ''தொண்டன்'' என்ற பெயரில் பத்திரி கையைத் தொடங்கி, அதில் பெரியாரின் சுயமரி யாதைக் கருத்துகளை வெளியிட்டார். மேலும் கர்மவீரர் காமராஜரின் தியாகமும், எளிமையும், சிறந்த சேவையும் அவரைக் கவர்ந்தபடியால் காமராஜரின் மேலும் விசுவாசம் கொண்டார்.

தமிழ் முழக்கம் : அறிஞர் அண்ணாவின் ''சந்திரமோகன்'' நாடகத்தில் கா.மு. செரீப் எழுதிய ''திருநாடே'' என்ற பாடல் 1948–இல் மிகவும் பிரபலமாகப் பாடப்பட்டது. அண்ணாவின் ''சந்திரமோகன்'' நாடகம் தமிழ்நாட்டின் எல்லா முக்கிய நகரங்களிலும் நடத்தப்பட்டது. அதனால் அந்தத் ''திருநாடே'' என்ற பாடலை அக்காலத்தில் முணுமுணுக்காதவர்களே இல்லை என்று சொல் லும் அளவிற்குப் பிரபலமாகியிருந்தது.

'ஞானபீட விருது' பெற்ற பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன், கருத்து வேறுபாடுகளால் ''ஜனசக்தி''யிலிருந்து வெளியேறினார். அவர் கா.மு. செரீப்பைச் சந்தித்தார். அப்பொழுது கா.மு. செரீப் நடத்தி வந்த 'தமிழ் முழக்கம்' பத்திரி கையில் தன்னுடைய படைப்புகளை ஜெயகாந்தன் எழுதினார். ஜெயகாந்தனின் கதைகளில் இரண்டு பத்திகளைக் குறைத்து, தான் வெளியிடும் 'தமிழ் முழக்கம்' பத்திரிகையில் வெளியிட்டார் செரீப். அதனால் கருத்து வேறுபட்ட ஜெயகாந்தன் அதிலிருந்து விலகினார்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் முதலாளியுடன் சந்திப்பு : சேலத்தில் மிகவும் பிரபலமாக இருந்த மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர். சுந்தரம், கா.மு. செரீப் அவர்களுடைய கவிதைகளைப் பற்றிக் கேள்விப்பட்டார். டி.ஆர்.எஸ். உடனே கவிஞருக்குத் தந்தி மணிஆர்டர் மூலம் இருநூறு ரூபாய் அனுப்பி, தன்னை சேலத்தில் வந்து சந்திக்கும்படி தகவல் அனுப்பினார்.

கவிஞர் அத்தொகையைப் பெற்றுக் கொள் ளாமல், தான் சேலத்தில் நடக்கும் திராவிடக் கழகக் கூட்டத்திற்கு வருவதாகவும், சேலம் வந்ததும் சந்திப்பதாகவும், தானே சேலம் வருவ தால் தாங்கள் அனுப்பிய பணத்தைத் திருப்பி அனுப்பியுள்ளேன் என்ற தகவலையும் அனுப்பி னார். அதனைப் படித்த டி.ஆர்.எஸ். மற்றவர் களிடம் இல்லாத சிறந்த பண்பும், நேர்மையும் கவிஞரிடம் இருப்பதை அறிந்து கொண்டார்.

சில நாள்கள் கழித்துச் சேலம் சென்ற பொழுது டி.ஆர்.எஸ். அவர்களைச் சந்தித்தார். அவரிடம் டி.ஆர்.எஸ். மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிக்கும் படங்களுக்குப் பாடல்கள் எழுதித் தரச் சொன்னார். அப்பொழுது அங்குப் படத் தயாரிப்புப் பொறுப்பாளராக இருந்த எம்.ஏ. வேணு கவிஞரிடம், ''கவிஞரே! தங்களின் பாடல்களை முதலாளி மிகவும் ரசித்துப் பேசினார். தங்களுடைய உயரிய பண்பு முதலாளிக்குப் பிடித்துவிட்டது. தாங்கள் எழுதும் பாடலுக்கு முந்நூறு ரூபாய் தருகிறோம்'' என்று கூறியதும், கவிஞர் திகைப்படைந்து வாயிலிருந்து ஏதும் வார்த்தை வராமல் மௌனமாக இருந்தார்.

கவிஞரின் மௌனத்தைக் கண்ட எம்.ஏ. வேணு, கவிஞர் தனக்கு வழங்கும் ஊதியம் குறைவாக உள்ளதாக நினைக்கிறார் என்று எண்ணி, ''கவிஞரே! கவலைப் படாதீர்கள். தங்களின் ஒரு பாடலுக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம்'' என்றார். அந்தக் காலத்தில் கிராம போன் இசைத் தட்டில் பதிவுசெய்ய எழுதப்படும் பாடலுக்கே பத்து ரூபாய்தான் வழங்குவார்கள்.

வித்தியாசமான நிபந்தனை : படத் தயாரிப்புப் பொறுப்பாளர் எம்.ஏ. வேணு கூறியவற்றைக் கேட்ட கவிஞர் அவரிடம், ''அப்படியே ஆகட்டும். ஆனா ஒரு நிபந்தனை. நான் ஓர் அரசியல்வாதி. கட்சி வேலைக்காக எனக்கு அழைப்பு வரும். நான் போவதைத் தடைசெய்யக் கூடாது. தங் களின் படத் தயாரிப்பும் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதற்கான பாடல்களும் தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

''எனவே எனக்கு உதவியாளராக மருத காசியை வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண் டும்'' என்றார். கவிஞருடைய நிபந்தனையை எம்.ஏ. வேணு முதலாளியிடம் கேட்டு அனுமதி கொடுத்தார். தன்னுடன் மருதகாசியும் பாடல்கள் எழுதினால், தனக்கு வாய்ப்புக் குறையும், வருமானமும் குறையும் என்று நினைக்காமல், தன்னால் மற்றவர்களும் வளம் பெறட்டும் என்ற

உயரிய நோக்கம் கொண்டவராக விளங்கி னார். கா.மு. செரீப்.

கா.மு. செரீப் செய்த இந்த ஏற்பாட்டி னால் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிக்கும் திரைப்படங்களுக்கு மருதகாசி பாடல்கள் எழுதிப் புகழ் பெற்றார்.

மாடர்ன் தியேட்டர்ஸ் பாடலாசிரியர் : 1950–ஆம் ஆண்டில் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிக்கும் திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுத ஆரம்பித்தவர், தொடர்ந்து பல படங் களுக்குப் பாடல்கள் எழுதினார். மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பான 'பொன்முடி' என்கிற படத்திற்குப் பாரதிதாசன் கதைவசனம் எழுத, கவிஞர் எழுதிய 'ஆஹா ஆஹா வாழ்விலே' என்ற பாடல் பட்டிதொட்டி யெங்கும் பிரபலமானது.

கலைஞரை அறிமுகம் செய்தவர் : தனக்குக் கிடைத்த வாய்ப்புகள் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட கவிஞர், கலைஞர் கருணாநிதியைக் கதை, வசனகர்த்தா வாக அறிமுகம் செய்துவைத்தார். கலைஞரின் 'மந்திரிகுமாரி' நாடகத்தைத் திரைப்படமாகத் தயாரித்தபோது, கலைஞர் எம்.ஜி.ஆரைப் பரிந் துரை செய்தார். ஆனால், முதலாளி டி.ஆர்.எஸ். சற்றுத் தயக்கம் காட்டினார்.

எம்.ஜி.ஆர். தாடையில் குழி தெரிகிறது என்று சொல்ல, தாடையில் சிறிய தாடியை ஒட்டவைத்துவிட்டால் குழி மறைந்துவிடும். எடுப் பானத் தோற்றமும் கிடைக்கும் என்று கலைஞர் சொல்ல, கவிஞர் கா.மு. செரீப், 'தம்பி கருணா நிதி சொன்னால் சரியாகத்தான் இருக்கும்' என்று ஆமோதித்தார்.

டி.ஆர்.எஸ். எம்.ஜி.ஆரை 'மந்திரிகுமாரி' படத்துக்கு ஒப்பந்தம் செய்தார். படம் மகத்தான வெற்றி! நான் கவிஞரைத்தான் 'அண்ணன்' என்று அழைப்பேன். அண்ணாவை அண்ணா என்றே அழைப்பேன். நான் யாரையும் அண்ணன் உறவு சொல்லி அழைப்பது கிடையாது என்று கலைஞர் கூறியுள்ளார்.

பிரபலமான பாடல்களின் பிதாமகன் : 'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே', 'ஏரிக்கரையின் மேலே போறவளே பெண் மயிலே', 'வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இதுதானடா'



கலைஞருடன் கவிஞர் கா.மு. செரீப்

என்ற பாடல்களுடன் 1955–இல் வெளியான 'டவுன் பஸ்' படத்தில் வரும் 'சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா?' என்ற பாடலும் 'பொன்னான வாழ்வு மண்ணாகிப் போமோ' என்ற பாடலும், அன்னையின் ஆணை திரைப்படப் பாடல் 'அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை / அவள் அடிதொழ மறப்பவர் மனிதரில்லை'' என்ற பாடலும் இப்பொழுதும் நம் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. நீண்ட காலம் கடந்தும் நம் நெஞ்சைவிட்டு அகலாத சாகாவரம் பெற்ற பாடல்கள்!

திருவிளையாடல் பாடல்களின் உண்மை நிலை : கவிச்சுடர் கவிஞர் கா.மு.செரீப் பற்றிப் பலர் அறியாத ஒரு தகவலும் உண்டு. அவர் பிறப்பால் ஓர் இசுலாமியர் ஆனாலும், இந்துசமயப் புராணங்களில் ஆழ்ந்த ஞானமும், மதிப்பும், மரியாதையும் கொண்டவர். 'திருவிளையாடல்' படத்தின் இயக்குநர் ஏ.பி. நாகராஜன் அந்தத் திரைப்படத்தில், பாண்டிய நாட்டைத் தனது பாடலால் தோற்கடிக்க வந்திருக்கும் ஏமநாத பாகவதரை அடக்கவும், பாண்டிய நாட்டின் கௌர வத்தை நிலைநாட்டவும் ஏற்றதொரு பாடலைத் தரும்படி கவிஞர் கண்ணதாசனிடம் கேட்டார்.

பல பாடல்கள் எழுதியும் மனநிறைவடையாத ஏ.பி. நாகராஜன், வேறு வழியின்றி கவிஞர் கா.மு. செரீப்பைச் சந்தித்தார். கவிஞர் கா.மு. செரீப் முந் தைய காலத்தில் எழுதி வெளிவராமல் நின்று போன படமான 'சிவ லீலை' என்ற படத்திற்கு எழுதிய பாடலான 'பாத்தா பசுமரம் படுத்து விட்டால் நெடுமரம்' என்ற பாடலையும் திருவிளை யாடல் திரைப்படத்தில் சேர்த்துவிட்டார்.

அந்தத் திரைப்படம் வெளியானபோது பாடல்களை எழுதியவர் கவியரசு கண்ணதாசன் என்றே விளம்பரப்படுத்தியிருந்தார்கள். அதை அறிந்த கா.மு. செரீப் தன்னுடைய நீண்ட நாளைய நண்பனாக விளங்கிய ஏ.பி. நாகராஜனுக்கு எந்தத் தொல்லையும் கொடுக்கக் கூடாது என்று கண்டும் காணாதது போலிருந்துவிட்டார்.

எல்லை மீட்புப் போராட்டம் : கா.மு. செரீப் கவிஞராகவும், சிறந்த பேச்சாளராகவும், திரைப்பட வசனகர்த்தாவாகவும், சமூக அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். நம் நாடு சுதந்திரம் பெற்ற பின்பு மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. அச்சூழ்நிலையில் தமிழ்



கவிஞர் கா.மு. செரீப் வெளியிட்ட 'தமிழ் முழக்கம்' இதழ்

நாட்டின் வரலாற்றுச் சிறப்பும், சமூகம், பண்பாடு, ஆன்மீக வரலாறும் கொண்ட திருப்பதி, திருத்தணி ஆந்திராவிற்கு என்று ஒதுக்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தின் சில வட்டங்கள் கேரளாவில் சேர்க்கப்பட்டிருந்தன. சென்னை எங்களுக்கே! மதராஸ் மனதே! என்று சென்னையில் வாழ்ந்தவர்கள் போரிட்டனர்.

இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி மேலிடம் தமிழர்களின் கோரிக்கைகளையும், உணர்வுகளையும் கண்டுகொள்ளவில்லை. பொதுவுடைமைச் சித்தாந்தவாதிகள் எல்லா மாவட்டங்களும் இந்தியாவில்தானே உள்ளன என்று கூறினர். தேசியக் கட்சிகளும், தமிழ்நாட்டிலுள்ள மற்ற கட்சிகளும் எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்காத நிலையில் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், மார்ஷல் நேசமணி, கவிஞர் கா.மு. செரீப் முதலியோர் மொழிவழி மாநிலங்கள் நேர்மையாக அமைய வேண்டும் என்று போராடினார்கள். அவர்களின் போராட்டத்திற்குப் பொது மக்களும் ஆதரவு தந்தனர். தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். திருத்தணியைத் தமிழ்நாட்டுடன் இணைத்தார்கள். கன்னியாகுமரி தமிழ்நாட்டுடன் இணைந்தது. முழுச் சென்னையும் தமிழ்நாட்டுக்கே கிடைத்தது.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. பொன்விழா : எல்லை மீட்புப் போராட்டத்திற்கு முக்கியக் காரணக் கர்த்தாவாக விளங்கிய சிலம்புச் செல்வர் ம.பொ.சி.–யின் 50–வது பிறந்த நாளில் அவர் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில், ஐம்பது பவுன் தங்கக் காசுகள் பரிசளிப்பது என நண்பர்கள் தீர்மானித்தனர். அதற்கான நிதி திரட்டும் பணி கவிஞர் கா.மு. செரீப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் அரும்பாடுபட்டும் நாற்பத்தி நான்கு பவுன் தங்கம் வாங்கும் அளவிற்குத்தான் நிதி கிடைத்தது. மேலும் ஆறு பவுன் தங்கம் வேண்டும். பொது மக்களிடமும், ஆதரவாளர்களிடமும் ஏற்கெனவே நிதி பெறப்பட்டுவிட்டது. எனவே வேறு வழியில்லாத நிலையில் தன் மனைவியிடம் சென்று, ''உன்னிடம் உள்ள தங்க நகைகளைக் கொடு'' என்று கேட்க, அவரது மனைவியும் பதில் ஏதும் பேசாமல் தான் அணிந்திருந்த நகைகளைக் கழற்றித் தந்தார். பின்னர் சிலம்புச் செல்வருக்கு ஐம்பது பவுன் தங்கக் காசுகள் வழங்கப்பட்டன.

அபலைப் பெண்ணை ஆதரித்த வள்ளல் : காதலில் விழுந்த இளம்பெண் ஒருத்தி கர்ப்பமானாள். காதலன் கை விரித்துவிட்டான். பெண் இந்து மதத்தைச் சார்ந்தவள். பெண்ணின் தந்தையோ கவிஞரின் நெருக்கமான நண்பர். தன் மகளுக்கு நேர்ந்த அவலத்தைக் கவிஞரிடம் சொல்லி, தானும் தன் மகளும் தற்கொலை செய்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கவிஞரின் கைகளைப் பிடித்து அழுதார். அவரை ஆரத்தழுவி ஆறுதல் கூறி ''கவலைப் படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். அமைதியாக இருங்கள்'' என்றார்.







கவிஞர் கா.மு. செரீப் பாடல்கள் உள்ள சில திரைப்படங்கள்

தன் மனைவியை அழைத்து அந்தப் பெண்ணை அவரிடம் ஒப்படைத்து, ''நீ அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு வேளுக்குடிக்குச் சென்று அந்தப் பெண்ணுக்குக் குழந்தைப் பிறக்கும்வரை அவளுடன் இருந்து நீ அவளை உன் மகள் போல கவனிச்சுக்கோ'' என்று அனுப்பிவைத்தார்.

அந்தப் பெண்ணிற்குப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்ததும், அந்தப் பெண்ணை மட்டும் அவள் வீட்டுக்கு அனுப்பிவைத்தார். அந்த அபலைப் பெண்ணுக்குப் பிறந்த பெண் குழந்தையைத் தன் சொந்தக் குழந்தையைப் போல வளர்த்து ஆளாக்கித் திருமணமும் செய்துவைத்தார். இதுபோன்ற சம்பவங்கள் திரைப்படங்களில்தான் வரும். தன் நண்பருக்கு எந்தக் கஷ்டமும் வரக்கூடாது என்று விரும்பி அதற்காகப் பாடுபட்டவர் கா.மு.செரீப்.

சுயமரியாதை உணர்வு : கலைஞர் முதல்வராக இருந்தபோது, கவிஞரின் மனைவி கவிஞருக்குத் தெரியாமல், கலைஞரிடம் தன் மகனுக்கு ஏதாவது வேலை கிடைக்க உதவ வேண்டும் என்று கேட்டார். கலைஞர் அந்தப் பெண்மணியிடம் 'அண்ணன் அதை விரும்பமாட்டார். அவருக்குத் தெரிந்து அவர் சொன்னால் செய்கிறேன்' என்று கூறிவிட்டார்.

இந்தத் தகவலை அறிந்த கவிஞர், தன் மனைவியைக் கடிந்து கொண்டார். ''உன்னை யார் கலைஞரைப் பார்க்கச் சொன்னது? சிபாரிசு அடிப்படையில் மகனுக்கு வேலை தேவையில்லை. நான் சுயமரியாதைக்காரன். நானே கலைஞர் பதவியில் இல்லாதபோதுதான் பார்ப்பேன். எல்லாம் தெரிஞ்ச நீ இப்படிச் செய்யலாமா? இன்னைக்கு இல்லேன்னா நாளைக்கு வேலை கிடைக்கும். கவலைப் படாதே'' என்று கூறிவிட்டார்.

தமிழுக்குச் செய்த தொண்டு : 'தமிழ் முழக்கம்', 'சாட்டை' முதலிய மாதம் ஒருமுறை, மாதம் இருமுறை, வாரம் ஒருமுறை எனப் பத்திரிகைகள் நடத்தி நட்டப்பட்டார். கைப்பொருளையும் இழந்தார். சிறுகதை நூல்கள் 3, நாவல் 1, நாடக நூல்கள் 4, பயண நூல் 1 என்பனவற்றை எழுதியவர்.

சீறாப்புராணத்தின் எட்டுப் பாகங்களுக்கும் உரை எழுதி அறிஞர்களின் பாராட்டுப் பெற்றவர். கலைமாமணி விருது, திரு.வி.க. விருது பெற்றவர். சிவாஜி, பாரத தேவி, தினமணி கதிர், இந்துஸ்தான், ம.பொ.சி.–யின் தமிழ் முரசு, செங்கோல் எனப் பல்வகை ஏடுகளில் எழுதிப் புகழ் பெற்றவர். அருந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் கற்றவர். தமிழில் பிற மொழிச் சொற்கள் உலாவருவதைக் கண்டித்துத் 'தாய் நாடு' ஏட்டில் எழுதியவர்.

ஐந்து லட்சம் ரூபாய் அன்பளிப்பு : அயல் நாட்டிலுள்ள சார்ஜா தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் அவர் தமிழுக்கு ஆற்றியத் தொண்டினைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் கவிஞரை சார்ஜாவிற்கு வரவழைத்தது. விழாக் குழுவினர் கவிஞருக்கு ஐந்து லட்ச ரூபாய் அன்பளிப்பாக வழங்கினர். ஆனால், அதே ஏற்க மறுத்து, அந்த அன்பளிப்புப் பணத்தை அதை தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டார்.

''கலைமாமணி கா.மு. செரீப் தான் எழுதிச் சம்பாதித்ததை நாட்டிற்காகவும், தமிழ்மொழிக்காகவும் செலவு செய்தபடியால் அவரது குடும்பத்தை வறுமை சூழ்ந்துக் கொண்டது. அதனால் அவர் கடைசி வரை வாடகை வீட்டில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவர் இசுலாமியராக இருந்தபோதும், தமிழ்மொழிபால் உள்ள பற்றினால் தன் மகளுக்கு ''அவ்வைப் பிராட்டி'' என்கிற தமிழ்ப் பெயரைச் சூட்டினார். சொல் வேறு, செயல் வேறு அல்ல, இரண்டும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர். தன்னுடைய எண்பதாவது வயதில் 1994–ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏழாம் நாள் வியாழனன்று அவர் அமரரானார். அவர் எழுதிய இறைவனுக்காக வாழ்வது எப்படி? இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானா? நல்ல மனைவி, தஞ்சை இளவரசி, வள்ளல் சீதக்காதி, விதியை வெல்வோம் ஆகிய நூல்கள் நாட்டுடமையாக்கப்பட்டன. ●

கட்டுரை

மருந்தாகும் வில்வம்



மூலிகை மருத்துவர் அண்ணாஜோதி

திருக்கோயில்களில் மரம், செடி எனத் தல விருட்சங்கள் உண்டு. காலம் காலமாகத் தல விருட்சங்களை வளர்த்து வருவதன் மூலம், அத்தாவர இனங்கள் பல நூற்றாண்டுக் காலமாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தல விருட்சங்களும், கோயில் நந்தவனம், கோயில் காடுகளில் வளரும் தாவரங்களும் பெரும் பங்காற்றி வருகின்றன.

புவி வெப்பமயமாதலால் பெருகி வரும் இன்னல்களைக் குறைக்க உலகம் முழுவதும் தாவரங்களை வளர்ப்பது, காடுகளின் சதவிகிதத்தை உயர்த்துவது பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் கோயில்களில் உள்ள தல ருட்சங்களும், பிற தாவரங்களும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதையும் நாம் கவனித்து, அவற்றைப் பேணிக் காத்திட வேண்டும். இக்கட்டுரையில், தலவிருட்சமான வில்வத்தைப் பற்றிப் பார்ப்போம்.

வில்வம் தல விருட்சமாக உள்ள திவ்யதேசங்கள்: திருவெள்ளறை, திருச்சிறுபுலியூர், திருவெள்ளக்குளம், திருவசிந்தபுரம்.



வில்வத்தின் தாவரவியல் பெயர், ஏகில் மார்மெலோசு. தட்பவெப்பம் : குளிர்ச்சி. சுவை : துவர்ப்பு, கைப்பு. பிரிவு : கார்ப்பு. வில்வத்தின் வேறு பெயர்கள் : கூவிளம், சிவத்துருமம், நின்மலி, மாலூரம் ஆகியன.

வில்வத்தின் இலை, பூ, காய், கனி, பட்டை, ஓடு, பிஞ்சு, பிசின் முதலியவை மருத்துவக் குணமுள்ளவை. வில்வத்தின் இலை வியர்வையைப் பெருக்கும், மிகு வெப்பத்தை அகற்றும், காம உணர்வைப் பெருக்கும். வில்வப்பழம் மலமிளக்கியாகும். பூவும், காயும் பசியைத் தூண்டும்.

தமிழறிஞரும், சித்த மருத்துவருமான கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள், ‘தமிழ் மருந்துகள்’ என்னும் நூலில் வில்வம் பற்றிய இரண்டு மருத்துவ அனுபவங்களைத் தந்துள்ளார்.


1. நன்றாகப் பழுத்த வில்வப் பழத்தின் விதையை நீக்கிச் சதையை மட்டும் எடுத்து, சீனக் கற்கண்டில் கலந்து, இலந்தைப் பழ அளவு காலை நேரத்தில் மட்டும் சாப்பிட்டு வந்தால், உடல் பலவீனம் நீங்கி, வலிமை ஏற்படும். சில வேளைகளிலேயே குணம் நன்றாகத் தெரியும். புளி, காரம் உணவில் குறைத்துச் சாப்பிடவும்.

2. வில்வ இலையில் 10 கொழுந்து இலைகளைக் காலை நேரத்தில் மட்டும் வாயில் போட்டு மென்று, தின்று பாலைக் குடித்துவர, உள்காங்கை நீங்கி, உடல் பெருக்கும். சில நாட்களிலேயே பயன் காணலாம். 40 நாள்கள் போதுமானது. காரம், புளி, உணவில் குறைக்கவும். இவ்வாறு கி.ஆ.பெ. கூறியுள்ளார்.

வில்வத்திற்கு இன்னும் பல மருத்துவக் குணங்கள் உள்ளன. சிலருக்கு நல்ல தூக்கமின்மையாலும், பித்தத்தின் அளவு மிகுதியாலும் கண்கள் சிவந்து

காணப்படும். கண் எரிச்சல் இருக்கும்.

இவர்களுக்கு வில்வமரத்தின் இளந்தளிர்களைக் கொண்டு வந்து சட்டியில் வதக்கிச் சூடு ஆறியதும் கண்களை மூடி, அவற்றின்மீது வைத்துத் துணியால் கட்டிச் சிறிது நேரம் கழித்துக் கட்டை அவிழ்த்து எடுத்துவிடலாம். இவ்வாறு சில முறை செய்துவர, கண்கள் தொடர்பான கோளாறுகள் நீங்குமென மருத்துவ நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கி.ஆ.பெ.

பசி மந்தத்திற்கு வில்வ இலையைச் சுத்தம் செய்து காலை, மாலை கொட்டைப் பாக்களவு மூன்று நாள், ஆறு வேளைகள் எனச் சாப்பிட்டுவர, நல்ல பசி ஏற்படும்.

'மூலிகை மருத்துவ குண அகராதி' என்ற நூலில் கூறியுள்ளது போல், ஒரு கைப்பிடியளவு வில்வ இலையைச் சுத்தம் செய்து புதுச் சட்டியில் சில நிமிடங்கள் வதக்கி, ஒரு குவளை நீர் விட்டு நன்றாகக் கொதித்ததும் இறக்கி ஆறவிட்டுக் காலை ஒரு பாதியளவும், மாலை மறு பாதியளவுமாக 21 நாள் சாப்பிட்டுவர, அனைத்து விதமான பித்தக் கோளாறுகளும் நீங்குவது உறுதி.

இன்று வேகமாகப் பரவி வருகிற, பலருக்கும் காணப்படும் புற்றுநோய்க்கு வில்வம் மருந்தாகிறது. வில்வத்தையே பிரதானமாகக் கொடுத்து இரைப்பைப் புற்றுநோயைக் குணமாக்கிய சம்பவங்கள் உண்டு.

ஆந்திராவில் வசித்துவந்த ஒரு சாமியாருக்கு, அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டிய அளவுக்கு வயிற்றில் புற்றுநோய் அதிகமாகிவிட்ட நிலையில், வில்வ இலைகளைப் பசும்பாலிட்டு அம்மியில் அரைத்து, பசும்பாலில் கலந்து குடித்து வரச் சில மாதங்களில் சாமியார் குணம் பெற்றுப் பல ஆண்டுகள் வாழ்ந்தாராம்.

எனது அனுபவத்தில் இரு சக்கர வாகனம் பழுது பார்க்கும் கடையில் உதவியாளனாக வேலை செய்து வந்த 14 வயதுச் சிறுவனுக்கு முதுகுத் தண்டில் ஏற்பட்ட புற்று நோய்க்கு, அடையாறு புற்று நோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தான்.

அவனுக்கு மாதா மாதம் ஹீமோ தெரப்பி ஊசி செலுத்தப்பட்டும், முதுகுத் தண்டு வலி அதிகமாகவே இருந்தது. பசும்பாலில் வில்வ இலையை அரைத்துப் பசும்பாலில் கலந்து குடித்து வரச் சொன்னேன். பதினைந்து நாட்களுக்குப் பிறகு அடிக்கடி வரும் முதுகுத் தண்டு வலி எப்போதோ ஒரு முறையே வருவதாக அந்தச் சிறுவன் சொன்னான்.



வில்வ மரம்

ஆக, வில்வ இலை புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைத் தெரிந்து கொண்டேன். இது குறித்துச் சித்த மருத்துவச் சான்றோர்கள் மேலும் ஆய்வு செய்து மருந்தாக்கி மக்களுக்கு அளிப்பது நன்மையை உண்டாக்கும்.

உடல் எரிச்சலுக்கும், உள்ளங்கால் எரிச்சல், சோர்வு முதலியவற்றிற்கும் வில்வ இலை நல்ல பலனைத் தருகிறது.

கோயில் தல விருட்சங்களைச் சுற்றி விட்டு மட்டும் வராமல், அதே இனம் கோயிலுக்கு வெளியே எங்குள்ளது எனப் பார்த்து, அதனைப் பயன்படுத்தி நோய்களைக் குணமாக்கிக் கொள்ள வேண்டியது அவசியம். ●


Sakthi
as pure as mother's love
தூய்மையின் வலிமையுடன்
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi
MILK
SUPREME
Sakthi
MILK
SELECT
Pasteurised Toned Milk
500ml
Sakthi
MILK
SPECIAL
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

கட்டுரை

மு. பழனி இராகுலதாசன்

தமிழக அரசியல் – ஆன்மிக வரலாற்றில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், விடுதலைப் போராளி பசும்பொன் முத்துராமலிங்க பிரம்மச்சாரியும் தவிர்க்க முடியாத இருபெரும் ஆளுமைகள் ஆவர்.


குன்றக்குடி அடிகளார்

தொடங்கி பரமஹம்சர் வரையிலான ஆன்மிகம் பேசியவர்.

குன்றக்குடி அடிகளார் – பசும்பொன் பிரம்மச்சாரி இருவரும் கால் பதித்து நின்று செயல்பட்ட இடங்கள் வேறு வேறுதான். அதாவது, அடிகள் மடத்தில் நின்றார்; பசும்பொன் பிரம்மச்சாரி கட்சி அரசியலில் நின்றார். நின்ற இடங்கள் வேறு வேறுதான்; ஆனால், பார்வையும் சிந்தனையும் “இந்திய தேசம்” என்ற மையத்தில் குவிந்தும், படிந்தும் கிடந்தன.

துறவியர் இருவரின் தொலைநோக்குப் பார்வை


பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆன்மிகத் தளத்தில் நின்று அரசியல் பேசியவர். அரசியல் என்றால், பஞ்சாயத்துத் தொடங்கி, நாடாளு மன்றம் வரையிலான அரசியல் பேசியவர். இந்தியா தொடங்கி, சர்வதேசியம் வரையிலான அரசியல் பேசியவர்.


அதேபோல, பசும்பொன் முத்துராமலிங்க பிரம்மச்சாரியும் அரசியல் தளத்தில் நின்று கொண்டு ஆன்மிகம் பேசியவர். உள்ளூர் அரசியல் தொடங்கி, ஐ.நா. அரசியல் வரை, வள்ளலார்



அதாவது, பசும்பொன் பிரம்மச்சாரி அரசியல் பேசினால், அது ஆன்மிக அடித்தளம் மேவியதாக இருக்கும்; குன்றக்குடி அடிகள் ஆன்மிகம் பேசினால், அது அரசியல் அடித்தளம் கொண்டதாக

இருக்கும். சம காலத்து ஆன்மிக – தேசியச் சிந்தனையாளர்களான இவ்விரு ஆளுமைகளையும் கண்டும், கேட்டும் துய்த்த பெருமக்களுக்கு இந்தச் செய்தி புதிய செய்தியாக இருக்க முடியாது.


மகாத்மா காந்தி


நேருஜி

பசும்பொன் பிரம்மச்சாரி பல்வேறு அரசியல் காரணங்களுக்காகப் பண்டித நேரு அவர்களைக் கடுமையாகவே விமர்சனம் செய்தார். காந்தியடிகளுக்குப் பிறகு அகில இந்திய அரசியலில், விரிவான தளத்தில், உலகப் பார்வை கொண்ட ஓர் ஆளுமை – பண்டித நேருவை விட்டுவிட்டால், நம்பிக்கையான வேறு ஓர் ஆளுமை இல்லையே என்று கணித்துக் கொண்ட தவத்திரு குன்றக்குடி அடிகள் ஒவ்வோர் அசைவிலும் பண்டித நேருவை ஆதரித்துத்தான் பேசினார், எழுதினார்.

இந்தியா விடுதலை அடைந்த போது, "இந்தியா இப்படிச் சேதாரம் அடைந்துவிட்டதே" என்று சிந்தனையாளர்கள் பல்லாயிரம்பேர் கண்ணீர் உகுத்தனர். "இப்படி ஆகிவிட்டதே, இது தவிர்க்க முடியாதா?" என்று பண்டித நேருவும் கலங்கித்தான் போயிருந்தார். வேறு வழியில்லை.

அண்ணல் காந்தியடிகளின் கருத்தையும், கண்ணீரையும் மீறித்தான் இந்திய தேசம் துண்டாடப் பட்டது. 'இந்தியா', 'பாகிஸ்தான்' என்று பிரிக்கப்பட்டது. அந்தப் பிரிவினையின் முன் – பின் விளைவுகள், காரண – காரியங்கள் இன்று வரையிலும் ஒரு நீண்ட விவாதமாகவே, அகில இந்திய அளவிலும், உலக அளவிலும் விவாதிக்கப்படுகின்றன.

இந்த விஷயத்தில், அகில இந்தியச் சிந்தனையாளர்கள், அவர்கள் எந்த அணியினர் ஆயினும் ஆகுக, "இந்தியா – பாகிஸ்தான்" பிரிவினையை விவாதித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இந்த விவாதத்தின் ஒரு தொடர் அம்சமாக, ஒரு முக்கியமான செய்தியாக, நாம் அறிய வருவது குன்றக்குடி அடிகளாரும், பசும்பொன் முத்துராமலிங்க பிரம்மச்சாரியும் ஒரே பாதையில், ஒரு திசை நோக்கியே பயணப்பட்டிருக்கிறார்கள் என்பதாகும்.

பசும்பொன் பிரம்மச்சாரி நேரடியாக ஓர் அரசியல்வாதி; கட்சிக்காரர். எனவே, அவர் தேசப் பிரிவினை குறித்துப் பல கருத்துக்களை நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும், பொதுக்கூட்டங்களிலும், பத்திரிகையாளர் சந்திப்பின்போதும் வெளிப்படையாகவும், உரத்தும் முழங்கிப் பேசினார். பிரிவு தொடர்பான அவரது விமர்சனத்தில் மவுண்ட்பேட்டன் முதல், ராஜகோபாலாச்சாரியார் வரை, தேசப் பிரிவினைக்குக் காரணமான யாரும் விடுபடவில்லை.

"எப்படியோ தேசம் பிரிக்கப் படத்தான் வேண்டும் என்றால், அதற்கு ஓர் அடிப்படையான முகாந்திரம் வேண்டாமா? தெளிவான வழிவகை வேண்டாமா? பாகிஸ்தானில் குழப்பம்! காஷ்மீரத்தில் குழப்பம்! மேற்கில் ஒரு பாகிஸ்தான், கிழக்கில் ஒரு பாகிஸ்தான் என்று இரண்டு பாகிஸ்தான்கள்! செயற்கையான, தேசியப் பார்வைக்கு, வரலாற்றுப் பார்வைக்கு ஒவ்வாத பிரிவினை!

மவுண்ட் பேட்டன் மூளையில் உதித்த சதி வேலை! இந்தப் பிரிவு நீடிக்காது! என்றாவது ஒரு நாள் பாகிஸ்தான் இந்தியாவுடன் இணையும்! இணைக் கப்படும்" என்று பசும்பொன் பிரம்மச் சாரி தொடர்ந்து பேசிவந்தார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளா ரின் இருப்பிடம் அரசியல் அல்ல; ஆன்மிகம்; தேச பக்தி மிகுந்த ஆன் மிகம்; எந்தக் காரணத்தைக் கொண் டும் இந்திய நாடு பிரிக்கப்பட்டிருக்கக் கூடாது என்பதே அடிகளின் தொடர்ந்த கருத்தாகவும் வாதமா கவும் இருந்து வந்தது. இவர் காரணம், அவர் காரணம் என்றெல்லாம் பெயர் சொல்லி, சுட்டிக்காட்டி விவாதம் செய்வதைத் தவிர்த்த அடிகள், தனது எதிர்கால நம்பிக்கையாக "இந்தியா, பாகிஸ்தான் இணைய வேண்டும்" என்பதை உரத்துச் சொல்லி வந் திருக்கிறார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளின் நெஞ்சம் மார்க்சிய நெஞ்சம். மார்க் சியம் போருக்கு எதிரானது. உலக சமாதானத்தை வரவேற்பது. எனவே, போருக்கும் பூசலுக்கும் தொடர்ந்து வழிவகுத்துக் கொண்டிருக்கும் இந்திய – பாகிஸ்தான் பிரிவினையை அடிகள் எதிர்த்தும் மறுத்துமே பேசிவந்திருக் கிறார். "இந்தியாவும் பாகிஸ்தானும் என்றாவது இணைந்துவிட வேண்டும்" என்று விருப்பம் தெரி வித்து எழுதி வந்திருக் கிறார்.

இந்த வகையில், கடந்த 1994, ஜூலை மாதம் 28–ஆம் தேதியன்று, சென்னை ஏவி.எம். இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் அடிகள் ஆற்றிய சென்னை கம்பன் கழகச் சொற்பொழிவு மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தச் சொற்பொழிவில், தவத்திரு அடிகள், "... இரண்டாவது உலகப் போரின் போது, வல்லரசுகளால் பிரிக்கப்பட்ட கிழக்கு ஜெர்மனிக்கும், மேற்கு ஜெர்மனிக்கும் இடையில் இருந்த சுவரை இன்று இடித்துவிட்டு ஒரே ஜெர்மனி நாடாக்கியுள்ளனர். அது போல, எதிர்காலத்தில் இந்திய இளை ஞர்களும், பாகிஸ்தான் இளைஞர் களும் ஆவேசத்துடன் சேர்ந்து, இந்தியாவையும், பாகிஸ்தானையும் ஒரு நாடாக்க வேண்டும்; இது எதிர் காலத்தில் நடக்கும்; இது வரலாற்றின் தேவை" (கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் – சமூகம் என்ற நூல்; பக். 70; வானதி பதிப்பகம்) என்று முழங்கி இருக்கிறார்கள்.

ஒரு தேசத்தைப் பிரித்துப் போடு தல் என்பது பற்றிய சிந்தனையில், இன்னொரு முக்கியமான செய்தியை இங்கு நினைவுகூர்தல் பொருத்த மாகும். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், தவிர்க்க முடியாமல், உலக அமைதி கருதி, ஒரு நாட்டுடன் போரிட்டு, அந்த நாட்டை வென்று கட்டுக்குள் கொண்டு வருவது அவசியமாக இருக்கலாம்.

அப்படித்தான் இரண்டாம் உலகப் போரின்போது, ஹிட்லரின் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டது. அப்போது வெற்றி பெற்ற நாடுகளின் தலைவர்களான ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகிய மூவரும் அடுத்த கட்ட ஆலோ சனையில் ஈடுபட்டனர்.



ஹிட்லர்

அப்போது நிகழ்ந்த அரசியல் நிகழ்வின் அடிப் படையில் "THE ROOTS OF EUROPEAN SECURITY" என்ற ஓர் ஆங்கில நூல், "THE SOVIET UNION NEITHER PARTITION NOR



ஸ்டாலின்



DESTRUCTION OF THE GERMAN STATE" என்று தலைப்பிட்டு ஒரு கட்டுரை எழுதியிருந்தது. தொடர்ந்து எழுதும்போது, "STALIN WAS NOT ENTHUSIASTIC ABOUT EITHER PROPOSAL ON THE DISMEMBERMENT OF GERMANY ADVANCED BY ROOSEVELT AND CHURCHIL" என்றும் சுட்டிக் காட்டியிருந்தது.

ஒரு நாட்டை எதிர்த்து வென்று காட்டுவது என்பது வேறு; அவ்வாறு வென்ற பிறகு, அந்த நாட்டை, அந்த மக்களைப் பிரித்துப் போடுவது என்பது வேறு என்பதைத் தோழர் ஸ்டாலின் வெகு நுணுக்கமாக உணர்ந்திருந்தார் என்பது உலக வரலாற்றில் ஓர் அபூர்வமான செய்தியாகும்.

இந்த வரலாற்று நிகழ்வுப் பின்னணியில்தான் "இந்தியாவைப் பிரித்துப் போடுதல்" என்ற நிகழ்வையும் நாம் புரிந்து தெளிதல் வேண்டும்.

பசும்பொன் பிரம்மச்சாரி நேரடியாகவே அரசியலில் பங்கேற்றிருந்தவர், நேதாஜி சுபாஷ் சந்திர போஸைப் பின்பற்றிப் பல நிலைப்பாடுகளை மேற்கொண்டு இயங்கியவர். அவரது அறிவிப்பில், அரசியல் முழக்கங்களில் கடுமையான வேகமும், விரைவும் இருக்கவே செய்தன.

ஆனால், தவத்திரு குன்றக்குடி அடிகளின் தேசப்பிரிவினை எதிர்ப்பு நிலைப்பாடு கட்சி அடிப்படைகளைத் தாண்டி ஒருவித நிதானமான நிலைப்பாடு கொண்டிருந்தது. "இந்தியா – பாகிஸ்தான் மீண்டும் இணைய வேண்டும்" என்று அடிகள் மிகத் தெளிவாக ஆற்றொழுக்கு நடையில் அழுத்தமாகவே அறிவித்தார்.

இதை, யார் நிறைவேற்ற வேண்டும்? என்று கேள்வி எழுப்புகிற தவத்திரு குன்றக்குடி அடிகள், "இதை நிறைவேற்ற இந்திய இளைஞர்களும், பாகிஸ்தான் இளைஞர்களும் இணைந்து முன்வருவார்கள்" என்று அறிவிக்கின்றார்; அல்லது இரு தேசத்து இளைஞர்களை நோக்கி அறைகூவி அழைக்கின்றார்.

தவத்திரு அடிகளின் இளைஞர்களை நோக்கிய அழைப்பில் அல்லது அறைகூவலில் "இந்துக்கள்" என்றோ, "இஸ்லாம்" என்றோ மதம் சார்ந்த சொல்லாடல் இடம் பெறவில்லை. இந்த நிதானம், பக்குவம் சார்ந்த அழைப்பு, ஆன்மிகம் சார்ந்த தவத்திரு அடிகளின் பரிபக்குவ அறைகூவல் என்றே கணிக்கலாம்.

'பாரத நாடு பழம்பெரும் நாடு' என்பார் மகாகவி பாரதி. இந்தப் பழம் பெரும் நாடு, ஆன்மிகச் சிந்தனையாளர்களைப் பெற்றெடுத்த நாடு. அவர்களது அரசியல் சார்ந்த, சமுதாயம் சார்ந்த நம்பிக்கைகள் வீண் போவதில்லை. தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், பசும்பொன் முத்துராமலிங்க பிரம்மச்சாரியும் ஆன்மிக, அரசியல், சமுதாயத் தளங்களில் மிக முக்கியமான பதிவுகளைச் செய்த பெருமக்கள் ஆவர்.

இவர்களது தேசபக்தி மிக்க தொலைநோக்குப் பார்வையும், பதிவும் என்றாவது ஒரு நாள் நிறைவேறும் என்று நாம் நம்பிக்கை கொள்வோம். ●

வீரத்தில் விளைந்திட்ட சுதந்திரம்



விளைந்தது சுதந்திரப் பயிர் என்கிறோம்; விளைநிலம்?
பல வீரர்களின் இன்னுயிர் அல்லவோ?
சுதந்திரம் பற்றி நான் சொல்லவோ?
நம் போதாத பற்றைத் தான் கொல்லவோ?

பிரிவினைகளால் அடிமைப்படுத்தினான்
அயல்நாட்டுக்காரன்.
தடியடி பல தாங்கி
தாய்நாட்டுக் கொடிகாத்து
மடிந்தான் ஒரு தீரன்.
இன்று... கூடி வாழ முடியாமல் நாம்!

உயிர் தங்கும் உடற்கூண்டைப் பலர் சிதைக்க
ஒருவேளை உணவின்றி பரிதவிக்க
அடிப்படை உரிமைகளை மாற்றான் பறிக்க
கொடுஞ்சிறை வாசம் உறவுணர்வைச் சற்றே பிரிக்க
பல்லுயிர் இழந்து, இன்னல்கள் கடந்து,
சுதந்திரம் பெற்றனர் முன்னோர்! செவிலிகள் நாம்!
செவிக்கு எட்டியதா? செவிலிகள் நாம்!

தந்திரம் ஏதும் இன்றிப் பெற்ற சுதந்திரத்தைப்
பேணாது இருப்பது மடமை!
முறையாக வளர்ப்பது நம் கடமை!
முடக்கிப் போட்ட வலை கிழித்துப் பறந்தோமே
வெண்புறாக்கள் ஏன் இன்னும் சிறைக்குள்ளே?
ஏற்றத் தாழ்வு ஏதும் இன்றி
அமையும் வாழ்வு சுதந்திரம்
வந்தே மாதரம்! அது தாரகை மந்திரம்.
நம் உடைமையைக் காக்க
நாம் ஒன்றிணைதல் வேண்டும்.
பரவட்டும் நம் புகழ் திக்கெட்டும் என்றென்றும்!



நந்தினி



இந்து சுவாமியின் பார்வையில் இஸ்லாம்

- **பா**மர மக்களுக்கு இஸ்லாம் ஒரு செய்தியாக வந்தது. முதல் செய்தி சமத்துவம். ஒரே மதம்தான் உள்ளது. அது அன்பு, வம்சம், நிறம் அல்லது வேறு எது பற்றியும் எந்தக் கேள்வியும் கிடையாது.
- சமத்துவம் பற்றி ஏதேனும் ஒரு மதம் பாராட்டத்தக்க முறையில் சொல்லியிருந்தால், அது இஸ்லாம் மட்டுமே என்பதுதான் எனது அனுபவம்.
- புரோகிதர்களிடமிருந்தும், பண்ணையார்களிடமிருந்தும், விடுதலை கிடைக்கும் பொருட்டே ஏழை எளிய மக்கள் இஸ்லாமைத் தழுவியிருப்பார்கள் என்று தோன்றுகிறது.
- இனத்தையும், மதத்தையும் கடந்து முஸ்லிம்கள் கடைப்பிடிக்கின்ற முழுமையான சமத்துவத்திலேதான் இவர்களின் சிறப்பு இருக்கின்றது.
- இஸ்லாம் எங்கெல்லாம் சென்றதோ அங்குள்ள மக்களை அரவணைத்து வாழ்வளித்தது. கிருத்துவம் எங்கெல்லாம் சென்றதோ அங்குள்ள பூர்வ குடிகளை இல்லாதொழித்தது.
- இந்தியாவை முகம்மதியர்கள் வென்றது ஏழை எளியவர்களுக்கு ஒரு விடுதலை வாய்ப்பாக அமைந்தது. எனவேதான் நமது மக்களில் ஒரு பகுதியினர் முஸ்லிம்கள் ஆனார்கள்.
- வாளாலும், நெருப்பினாலும் மட்டுமே அந்த மதமாற்றங்கள் நடைபெற்றதாக நினைப்பது பைத்தியக்காரத்தனத்தின் உச்சகட்டம்.
- சொல்லப் போனால் இந்துக்களே முகலாயப் பேரரசிற்குப் பெரும் ஆதாரமாக, தங்கும் தூண்களாக விளங்கினார்கள் எனலாம். ஜஹாங்கீர், ஷாஜஹான், தாராசிகோ முதலிய முகலாயப் பேரரசர்களின் அன்னையர்கள் இந்துக்களே.
- மதத்தின் கதவுகளை மூடாமல் திறந்தே வைத்திருக்க வேண்டும். மூடக் கூடாது. முகம்மதிய சாம்ராஜ்ஜியம் நம் நாட்டில் நீண்ட காலம் எவ்வளவு வலிமையுடனும் திண்மையுடனும் விளங்கியதற்குக் காரணம், முஸ்லிம்கள் நம் மதத்தில் தலையிடாததுதான்.
- முஸ்லிம்கள் ஆட்சியின் போதே இராமானுஜர் செய்த அரும்பணி வடஇந்தியா முழுவதும் பரவியது.

(இதிலிருந்து மத விவகாரங்களில் முஸ்லிம் அரசர்கள் தலையிட வில்லை என்பதை அறியலாம்).

- துருக்கி நாட்டுச் சுல்தான் ஆப் ரிக்கச் சந்தையில் ஒரு நீக்ரோவை வாங்கி, அவரைத் துருக்கிக்குச் சங் கிலியால் பிணைக்கப்பட்ட நிலை யில் கொண்டு வரலாம். ஆனால் அந்த நீக்ரோ முஸ்லிமாக மாறிவிட் டால், அவரிடம் போதிய தகுதியும், திறமையும் இருந்தால், சுல்தான் மகளைக் கூட அவர் மணந்து கொள்ளலாம்.
- எங்களுடைய தத்துவம் ஒரு சிகரம் போல் ஓங்கி நிமிர்ந்து நின்றாலும், செயல்முறையில் எங்கள் குறைபாட் டை நீங்கள் நன்கு உணர்ந்து விடு வீர்கள். மற்றைய இனத்தவர்களைக் காட்டிலும் முஸ்லிம்கள் சிறப்புற்று இருக்கின்றார்கள்.
- இனப்பற்று, வர்ணப்பற்று முதலிய வற்றைப் பொருட்படுத்தாமல் அவர்கள் காட்டுகின்ற சமத்துவத்தி லேதான் அவர்களுடைய சிறப்பு வீற்றிருக்கிறது.
- என்னுடைய மனக்கண்ணில் எதிர் காலம் குற்றம் குறையற்ற முழுமை யானதாக இருக்கும். கஷ்டங்களி லிருந்தும், குழப்பங்களிலிருந்தும் மீண்டுவிடும். வேதாந்த மூளையும் இஸ்லாமிய உடலும் கொண்ட ஒளி மயமான, யாராலும் அடக்க முடி யாத இந்தியாவாகத் திகழும்.
- இஸ்லாத்தைத் தழுவி ஒரு முஸ்லிம் பெயரைச் சூட்டிக் கொண்டாலே, அவர்களுக்குப் புதிய மரியாதை கிடைக்கிறது. நிலைமை இப்படி இருக்கும்போது, நீங்கள் எதிர்த்துப் போராட வேண்டியது உங்கள் மதத் தின் பழமையான வழக்கங்களையும், சாதி முறையையும்தானே தவிர, நிச்சயமாக முஸ்லிம்களை எதிர்த்து அல்ல.
- முஹம்மது – சமத்துவத்தின் தூத ராக விளங்கினார். மனிதகுல சமத் துவத்தில் அனைத்து முஸ்லிம்களும் சகோதரர்கள் என்ற கொள்கையின் தூதராக அவர் விளங்கினார்.
- முஹம்மது தனது வாழ்வின் மூல மாக முஸ்லிம்களிடையே முழுமை யான சமத்துவமும், சகோதரத்துவ மும் இருக்க வேண்டியதை எடுத்துக் காட்டினார்.
- இனங்களைக் கடந்து, இனம் அல் லது நிறத்திற்கு அப்பாற்பட்டு முழு மையான சமத்துவத்தை நிலை நாட்டி, முஸ்லிம்கள் மகத்தான வர்கள் என்பதை நீங்கள் இங்கே உணரலாம்.
- குர்ஆனும் முஹம்மது நபியின் அருள்வாக்கு என்று பரம்பரை யாகச் சொல்லப்படுகிற ஹதீஸின் பல பாகங்களும் நேராகவோ, மறை முகமாகவோ சொல்லிக் காட்டாத விஞ்ஞானமோ, கலையின் துறையோ இல்லை.
- முழுமையான சமத்துவமும், சகோ தர மனப்பான்மையும் முஸ்லிம்களி டையே திகழ வேண்டும் என்ற உண் மையைத் தம் வாழ்க்கை வாயிலாக முஹம்மது மெய்ப்பித்துவிட்டார்.
- அங்கே (இஸ்லாத்தில்) வேறுபாடு இல்லை; சாதி வேற்றுமை இல்லை; கொள்கை வேற்றுமை இல்லை. வர்ண வேறுபாடு இல்லை; பால் வேற்றுமை இல்லை.
- இஸ்லாம் வெகு மக்களுக்கான தூதுச் செய்தியாக வந்தது. அதன் முதல் தூது சமத்துவம் ஆகும். அன்பு என்ற ஒரே மார்க்கமே உண்டு. இனி இனம், நிறம் அல்லது வேறு எந்தப் பாகுபாடு குறித்தும் கேள்வி எழுப்பக் கூடாது.
- இந்த நடைமுறைப் பண்புதான் வெற்றியை அளித்தது. இந்த மாபெரும் தூதுச் செய்தி மிக எளி மையானதாக இருந்தது. விண்ணை யும், மண்ணையும் படைத்த ஒரே கடவுளை நம்புங்கள். அவன்தான் ஏதுமில்லாதவற்றில் இருந்து உங் களைப் படைத்தான். எந்தக் கேள்வி யும் எழுப்பாதீர்கள்.

நன்றி : 'சமரசம்' (16–31 ஆகஸ்ட் 2019)



பொருளாதார மேம்பாட்டுக்குத் தற்சார்புப் பயிற்சி!

நம் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி வருவதற்கு முன்பு வரை தற்சார்புப் பொருளாதாரமே மேலோங்கியிருந்தது. அவரவர் தேவைக்கேற்ற பொருள்களை அவரவர்களே தயாரித்துக் கொள்ளுதல், அவற்றின் மூலம் பிற தேவைகளுக்குப் பண்டமாற்றுச் செய்து கொள்ளுதல் முதலியன காலம் காலமாக நடைபெற்று வந்தன.

தற்போது வந்துள்ள சந்தைப் பொருளாதாரம் தற்சார்புப் பொருளாதாரத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டதுடன், நம் நாட்டின் பாரம்பரிய உணவுப் பொருள்களையும், பயன்பாட்டுப் பொருள்களையும் விலக்கி விட்டு மேற்கத்தியத் தயாரிப்புப் பொருள்களையும், உடலுக்குத் தீங்கிழைக்கும் இரசாயனப் பொருள்களையும் விற்பனை செய்து பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

அவரவரது அன்றாடத் தேவைக்கான பொருள்களை அவரவர்களே செய்து கொள்ளும் தற்சார்புப் பயிற்சிகளை வழங்கி வருகிறார் கோவையைச் சேர்ந்த திருமதி. பிரியதர்சினி ரங்கநாதன். அவர், அப்பொருள்களை நாமே தயாரிப்பதற்கும், அவற்றிற்கான மூலப்பொருள்கள் வாங்குதல், சந்தைப்படுத்துதல் முதலியவற்றிற்கும் வழிகாட்டி வருகிறார். அவருடன் அவரது கணவர் திரு. ரங்கநாதன் அவர்களும் இணைந்து பயிற்சி கொடுத்து வருகிறார்.

அவர்கள் தந்து வரும் தற்சார்புப் பயிற்சிகள் தொடர்பாக 'ஓம் சக்தி'க்கு அளித்த பேட்டி...



திருமதி. பிரியதர்சினி

கேள்வி : "நீங்கள் இயற்கை வாழ்வியல் தற்சார்புப் பயிற்சி அளிக்க வந்ததன் பின்னணியைப் பற்றிக் கூறுங்கள்.

பதில் : எனக்குச் சிறு வயதிலேயே எனது தாத்தா, பாட்டி இருவரும் பல பண்டைய பாரம்பரியப் பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுத்தனர். நான் தமிழாசிரியையாகப் பணியாற்றியதால், நம் பாரம்பரிய வாழ்வியலில் எனக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. பின்னர் பாரம்பரிய உணவிலும் கவனம் செலுத்தத் தொடங்கினேன்.

இப்படியே இயற்கை வாழ்வு வாழ்ந்து வரத் தொடங்கிய காலத்தில் எனது கணவருக்கு வாத நோய் வந்துவிட்டது. அதனால் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தார். அப்படியும், அவருக்கு உடலின் வலதுபுறம் செயலிழந்துவிட்டது.

நான் சிறு வயதிலிருந்தே ஆங்கில மருத்



துவத்திற்குச் செல்லாதவள். எனவே, என் கணவர் ஆங்கில மருத்துவச் சிகிச்சை எடுப்பதை விரும்ப வில்லை. அங்கிருந்து வீட்டிற்கு வந்துவிட வேண்டுமென்று விரும்பி, டாக்டரிடம் பேசி வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன்.

வீட்டிற்கு வந்தபின் வேறு என்ன சிகிச்சை எடுக்கலாம் என யோசித்து, அக்குபங்சர் சிகிச்சை யிலும், உணவுப் பழக்க வழக்கங்களிலும் சரி செய்ய முயன்றேன். இதனை எங்கள் உறவி னர்கள் பலர் கூடாதென்றனர். ஆனால், அவற்றை யெல்லாம் புறக்கணித்து, உணவு முறை மற்றும் அக்குபங்சர் சிகிச்சை செய்ததில் 20 நாட்களி லேயே குணமடைந்துவிட்டார். அதைப் பார்த்துப் பலர் ஆச்சரியப்பட்டனர்.

அப்போதுதான் இந்த இயற்கை வாழ்வியல் பற்றி மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி விழிப் புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

அதன்பின்னர் நானே அக்குபங்சர், வாசியோகம், ரெய்கி சிகிச்சை முறை முதலியன வற்றைப் பயின்றேன். இவற்றையெல்லாம் சேர்த்து மக்களுக்குக் கற்றுக் கொடுக்கவே ‘‘தற்சார்பு வாழ்வியல் பயிற்சி’’ வகுப்புகள் தொடங்கி, இன்று வரை நடத்தி வருகிறோம்.

கேள்வி : நீங்கள் தரும் பயிற்சி, பொருள்கள் தயாரிப்பதற்கா? ஆரோக்கிய விழிப் புணர்வுக்கா?

பதில் : மேலோட்டமாகப் பார்த்தால், வகுப்பு என்பது தற்சார்புப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி போன்றுதான் தெரியும். ஆனால், வகுப்பில் காலை யில் தொடங்கி, மாலை முடியும் வரை பல்வேறு செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம். பொருள் கள் தயாரிக்கப் பழகிக் கொள்வதோடு, அப் பொருள்கள் மூலமாக ஒருவரது ஆரோக்கியத்தை எப்படி மேம்படுத்துவது என்பதையும், ஒரு வேளை ஆரோக்கியத்தை இழந்திருந்தால் அதை எப்படி மீட்டெடுப்பது என்பதையும் அறிந்து கொள் வார்கள். மூன்றாவதாக, நமது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு இந்தப் பயிற்சி உதவுகிறது.

இத்தனை பொருள்களை நாம் தயாரிப்பதன் மூலம் எப்படி நமது பொருளாதாரம் சிக்கனமாகும் என்பதையும் விளக்கமாகச் சொல்லித் தருவோம்.



ஒவ்வொரு பொருளுக்குள்ளும் நமது ஆரோக் கியம் எப்படி இருக்கிறது என்பதைப் பயிற்சியில் தான் உணர்வார்கள்.

கேள்வி : உங்கள் பயிற்சி வகுப்பு என்பது எத் தனை நாள்கள் நடைபெறும்?

பதில் : எங்கள் பயிற்சி வகுப்பு ஒரே நாள்தான் நடைபெறுகிறது. ஒரே நாளில் சுமார் 15 பொருள்கள் எப்படித் தயாரிப்பது என்பதை நேரடி யாகச் செயல் முறையில் கற்றுக் கொடுத்துவிடு கிறோம். அதுபோக, இவற்றை ஏன் நாமே தயாரிக்க வேண்டும், எதற்குப் பயன்படுத்த வேண் டும், ஏன் இரசாயனப் பொருள்களைப் பயன் படுத்தக் கூடாது, அதனால் நமக்கு ஏற்படும் பக்க



விளைவுகள் என்னென்ன, நாம் எந்த அளவிற்குப் பாதிக் கப்படுகிறோம் என்பது பற்றிய விளக்கங்களும் வகுப்பில் கற்றுக் கொடுக்கிறோம்.

சான்றாக, ஒரு பற்பொடி தயாரிப்பது என்றால், அந்தப் பற் பொடி எதற்குத் தயாரிக்கிறோம், அதில் என்னென்ன சேர்க்கிறோம் என்ப தைப் பார்க்க வேண்டும். கடுக்காய், தான்றிக் காய், நெல்லிக்காய் சேர்ந்த திரிபலா இந்தப் பற்பொடியில் இருக்கிறது. இந்தத் திரிபலா நம் உடலில் மலச்சிக்கலைத் தீர்க்கிறது.

இவற்றுடன் ஏலக்காய், கிராம்பு, உப்பு முதலிய பொருள்களும் இந்தப் பற்பொடியில் சேர்கின்றன. பல் துலக்கும்போது, ஒரு சிறிதளவாவது அந்தப் பொடி நம் உடலுக்குள் செல்லும். இதனால் பல் பிரச்சனை மட்டும் தீர்வதில்லை. இதை வாழ்நாள் முழுதும் சேர்த்துக் கொண்டு வந்தால், உடலில் நச்சுக்களே சேராது. அத்துடன் குடலின் ஆரோக்கியமும் மேம்படும்.

இப்படி ஒவ்வொரு பொருளைப் பற்றியும், ஏன் சேர்க்க வேண்டும், எவற்றைச் சேர்க்க வேண்டும், எவை கூடாது, உணவில் இவற்றைச் சேர்ப்பதால் கிடைக்கும் நன்மைகள் முதலியவற்றைப் பயிற்சி வகுப்பில் எடுத்துரைக்கிறோம்.

கேள்வி : எத்தனை வகையான பொருள்களைத் தயாரிக்கக் கற்றுக் கொடுக்கிறீர்கள்?

பதில் : நம் அன்றாட வாழ்விற்கு என்னென்ன பொருள்கள் தேவையோ, அவற்றையெல்லாம் தயாரிக்கக் கற்றுக் கொடுக்கிறோம். சான்றாகப் பற்பொடி, குளியல்பொடி, தலைக்குளியல் பொடி, முகப்பரு போக்கும் பசை, முகப்பவுடர், குளியல் சோப்பு, இயற்கை ஷாம்பு, துணி துவைக்கும் சோப்பு, பாத்திரம் துலக்கும் பொடி, சாம்பார் பொடி, ரசப்பொடி, சாதப்பொடி, சிறுதானிய பிஸ்கெட் டுகள், சிறுதானிய கேக், சிறுதானிய ஜூஸ், வலி நீக்கும் எண்ணெய், கண் மை, முடி வளர்ச்சி எண்ணெய், குங்குமம், ஹேர் டை, சத்து மாவு, சூப் இப்படி நமக்கு வேண்டிய எல்லாப் பொருள் களையும் தயாரிக்கப் பயிற்சி அளிக்கிறோம்.

கேள்வி : இப்பயிற்சிகள் பெண்களுக்கு மட்டும் அளிக்கப்படுகின்றனவா?

பதில் : ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும் பயிற்சி அளிக்கிறோம்.

கேள்வி : பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கிறீர்களா?

பதில் : ஆம்! பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்க்கும் பயிற்சிகள் அளித்து வருகிறோம். மாணவ, மாணவியர் படித்து முடித்துச் செல்லும்போது, அவர்களுக்குச் சுய தொழில் தெரிந்திருக்க வேண்டும் என்பதற் காகப் பல கல்வி நிறுவனங்களிலிருந்து எங்களை அழைத்து மாணவர்களுக்குப் பயிற்சி தரச் சொல் கிறார்கள். அருட்செல்வர் நிறுவிய ‘குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி’யில்கூடப் பயிற்சி தந்துள்ளோம்.

மாணவ, மாணவியர்க்குக் குளியல்பொடி, பற்பொடி, ஷாம்பு, வலி நிவாரணித் தைலம் இப்படி யான சில பொருள்கள் தயாரிக்கக் கற்றுக் கொடுக்கிறோம். பெண்கள் தற்போது பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் ரசாயனக் கலவைகள் கொண்ட நாப்கின்களைப் பயன்படுத்துவதால் வரும் கெடுதல்களை எடுத்துச் சொல்லி, அதற்கு மாற்றாக, பருத்தித் துணியில் நாமே இயற்கை நாப்கின் தயாரிக்கக் கல்லூரிப் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கிறோம்.

கேள்வி : ஒரு பயிற்சி வகுப்பிற்கு எத்தனை பேர் சேர வேண்டும்?

பதில் : பொதுவாகப் பயிற்சி வகுப்பை ஏற்பாடு செய்பவர்கள் குறைந்தது நூறு பேர் களைச் சேர்த்துத்தான் ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால், பத்துப் பேர்கள் சேர்ந்தாலும் நாங்கள் பயிற்சி கொடுக்கிறோம்.

கேள்வி : இதற்குக் கட்டணம் எவ்வளவு வாங்கு கிறீர்கள்?

பதில் : எங்கு பயிற்சி வகுப்பு என்றாலும், எங்களுக்குப் போக்குவரத்துச் செலவும், உணவுச் செலவும் வாங்கிக் கொள்கிறோம். அதற்கு மேல், அவர்களாகப் பார்த்துக் கொடுக்கும் தொகை யைப் பெற்றுக் கொள்கிறோம். இவ்வளவுதான் என்று நிர்ணயித்துக் கேட்பதில்லை.

கேள்வி : மலைவாழ் மக்களுக்கு ஏதேனும் பயிற்சி கொடுக்கிறீர்களா?

பதில் : மலைவாழ் மக்களுக்கும் பயிற்சிகள் தந்துள்ளேன். அண்மையில் ஏற்காடு மலைப்பகுதியில் வாழும் மலைவாழ் மக்களுக்குச் சில பயிற்சிகள் கொடுத்தேன். அந்தப் பகுதியிலிருக்கும் 'ரெட் ரீட்' என்னும் கல்வி நிறுவனம் எங்களை அழைத்து அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கச் சொன்னது.

அங்கிருக்கும் வியாபாரிகள் மூலமாகத்தான் கடுக்காய், தான்றிக்காய் முதலியவற்றை நாங்களே வாங்குகிறோம். இவற்றை அந்த மலைவாழ் மக்கள்தான் அவர்களுக்குச் சேகரித்துக் கொடுக்கிறார்கள். அந்தப் பொருள்களின் மதிப்பு அம்மக்களுக்குத் தெரியாதிருந்தது.

அப்பயிற்சியின்போது, அம்மக்களுக்கு மலைகளில் கிடைக்கும் இம்மாதிரியான இயற்கை மருத்துவப் பொருள்களின் மதிப்பை எடுத்துரைத்து, அவற்றை அவர்களே விற்பனை செய்ய வழிகாட்டினோம்.

மேலும், அப்பொருள்களின் மூலம் மதிப்புக் கூட்டப்பட்ட விற்பனைப் பொருள்களைத் தயாரிக்கப் பயிற்சி கொடுத்து, அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்யக் கற்றுக் கொடுத்தோம். இதன்மூலம் அவர்களுக்குப் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி ஏற்பட்டுள்ளது. இதேபோல் ஜவ்வாது மலைப்பகுதியிலும் பயிற்சி கொடுத்துள்ளோம்.

கேள்வி : நீங்கள் தரும் பயிற்சியில் தயாரிக்கப்படும் பொருள்கள் அவரவர் தேவைக்கு மட்டுமா? சந்தைப்படுத்தவுமா?

பதில் : அவரவர் தேவைக்கும், சந்தைப்படுத்தவுமாக இரண்டு வகைப் பயன்பாட்டிற்கும் பயிற்சிகள் கொடுக்கிறோம். மூலப் பொருள்களை எப்படித் தேர்ந்தெடுப்பது, எப்படித் தயாரிப்பது, எப்படி அவற்றைப் பாக்கெட்டுகளில் அடைப்பது, பெயர் வைப்பது, அரசிடமிருந்து சான்றிதழ்கள், உரிமங்கள் பெறுதல், அவற்றைக் கொண்டு எப்படிச் சந்தைப்படுத்துவது? எங்கெங்கெல்லாம் சந்தை வாய்ப்புகள் உள்ளன முதலான தகவல்கள் அனைத்தையும் பயிற்சியில் வழங்குகிறோம்.


• கணவருடன்
திருமதி. பிரியதர்சினி

பயிற்சி பெறுபவர்களை ஒரு குழுவாக இணைக்கிறோம். அவர்களிலேயே ஒருவருக்கொருவர் கலந்து பேசித் தங்கள் தேவைகளையும், விற்பனை செய்ய உள்ளவற்றையும் அறிந்து, விற்றும், பெற்றும் கொள்கின்றனர். நாங்கள் வாங்கி அவற்றை விற்பனை செய்து தருவதில்லை. வழிகாட்டுதல் மட்டுமே செய்கிறோம்.

கேள்வி : இயற்கைத் தயாரிப்புப் பொருள்கள் என்றாலே, விலை அதிகமாக இருப்பதால், இரசாயனப் பொருள்களை மக்கள் அதிகம் வாங்குகிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில் : விலை அதிகமாக இருப்பதற்கு வாய்ப்புகள் குறைவு. இதற்கான மூலப் பொருள்கள் மலைகளிலிருந்து வருகின்றன. அவற்றை வாங்கி விற்கும் வியாபாரிகள், இடைத்தரகர்கள் அதிக விலைக்கு விற்கின்றனர். அதனால் தயாரிப்புகளும் விலை அதிகமாக உள்ளன. ஆனால் தற்போது ஏற்காட்டில் ஏற்பாடு செய்துள்ளதைப்போல அவற்றைச் சேகரிப்பவர்களிடமே வாங்கும்போது விலை குறைவாகக் கிடைக்கின்றன. அதனால், தயாரிப்புகளும் விலை குறைவாகக் கிடைக்கும்.

இதில் மனித உழைப்பு அதிகம். இதற்குக் கூலி சற்று அதிகமாகத்தான் இருக்கும். பிளாஸ்டிக் பைகள் இல்லாமல், காகிதப் பைகளில் பொருள்களை அடைப்பதால் அவற்றின் விலை சற்றுக் கூடுதலாகிறது.


சில இயற்கைப் பொருள்களின் விலை சற்றுக் கூடுதலாக இருப்பது உண்மைதான். ஆனால், குறைந்த விலையில் வாங்கிப் பயன்படுத்தும் இரசாயனப் பொருள்களால் ஏற்படும் பின்விளைவுகளான நோய்வாய்ப்படுதல், அதனால் ஏற்படும் மருத்துவர் கட்டணம், மருத்துவமனைக் கட்டணம், மருந்துகள் விலை முதலியவற்றை எண்ணிப் பார்த்தால், இந்த விலை உயர்வால் தீங்கில்லை, நோயில்லை, மருத்துவச் செலவில்லை என்பதை உணரலாம்."

தற்சார்புப் பயிற்சிக்காகத் திருமதி. பிரியதர்சினி ரங்கநாதன் அவர்களை 98435 48435 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

பேட்டி :

இரா. வேணுகோபாலகிருஷ்ணன்

சிறுகதை



‘தென்னை மரம்’



எஸ். ஹாஜா

> "நம்ம ஊர் பள்ளிவாசலோடு சேர்ந்து ராமசாமி என்பவருடைய வீடு இருக்கு. அவர் வீட்டுத் தென்னைமரத்தில இருந்து விழுகிற தேங்காயும், ஓலை மட்டையும் நம்ம பள்ளிவாசல் கூரை மீது விழுந்து ஓடெல்லாம் நொறுங்கிப் போவுது. ரொம்ப நாளா அது நடந்திட்டு இருக்கு. அப்ப அப்ப புதிய ஓடு மாற்ற வேண்டியிருக்கு. நாங்க அவரு வீட்டுக்குப் போயி விஷயத்தை எடுத்துச் சொல்லி தென்னைமரத்தை வெட்டச் சொன்னோம். அவரும் சரின்னு சொல்லிட்டாரு. ஆனா...."

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட ஒரு பழைய பள்ளிவாசல் அது. மேற்கூரை ஓடுகளால் வேயப்பட்டது. அந்த ஓடுகளும் சில இடங்களில் உடைந்து காணப்பட்டன.

‘ஆழ்வார்குறிச்சி’ என்ற அந்தச் சிற்றூரில் வாழும் முஸ்லீம்களின் ஒரே பள்ளிவாசல் அது ஒன்றுதான். முஸ்லீம்களின் தொழுகைப் பள்ளியாக அது இருந்தாலும், மற்ற மதத்தினரும் அங்கு தங்குத் தடையின்றி வந்துபோகும் ஒரு மதநல்லிணக்க ஆலயமாக அது திகழ்ந்து கொண்டிருந்தது.

பள்ளிவாசலில் தொழுகை முடிந்து வெளியேவரும் முஸ்லீம்கள், மந்திரம் சொல்லி முகத்தில் ஊதினாலும், தலையில் தடவினாலும் குழந்தைகளின் நோயும், அவர்களுக்குப் பிடித்திருக்கும் காத்து, கறுப்பும் குணமாகிவிடும் என்பது அந்த ஊர் மக்களின் நம்பிக்கை. அதற்காகப் பிற மதத்தைச் சார்ந்த தாய்மார்களும் தமது குழந்தைகளுடன் பள்ளிவாசல் முன் வரிசையாக நிற்பதை அங்கு எப்போதும் காணலாம்.

நோன்பு மாதங்களில் ‘நோன்புக் கஞ்சி’ ஜாதி, மத பேதமின்றி எல்லோருக்கும் விநியோகிக்கப்படும். மற்ற பண்டிகைக் காலங்களிலும் ‘நெய்ச்சோறு’ முதலிய உணவு வகைகளும் எல்லோருக்கும் வழங்கும் பழக்கம் பண்டுதொட்டே அங்கு நடந்து வருகிறது.

சின்ன ஊராக இருந்தாலும் அங்குள்ள மக்களுக்குப் பெரிய மனசு. மதங்களை மறந்து மனிதர்களாக வாழ்ந்து வந்தார்கள். அண்ணன் – தம்பி, மாமா – மச்சான், வாப்பா – மகன் என்ற உறவு இப்போதும் அங்கே நிலை கொண்டிருந்தது.

மதநல்லிணக்கத்துக்குப் புகழ்பெற்ற ஊராகத் திகழ்ந்து கொண்டிருந்த அந்த ஆழ்வார்குறிச்சியில் திடீரெனச் சிறிய பதற்றம் தொற்றிக் கொண்டது.

பள்ளிவாசலின் பக்கத்தில் ராமசாமி என்பவரின் வீடு உள்ளது. பள்ளிவாசலும் ராமசாமியின் வீடும் சேர்ந்தாற் போல் இருக்கும். ராமசாமி வீட்டு முற்றத்தில் ஓங்கி வளர்ந்த தென்னை மரமொன்று உள்ளது. அம்மரத்தின் தலைப் பகுதி பள்ளிவாசலின் மேல் பகுதியில் வளைந்து நின்றது. மரத்தில் இருந்து தேங்காயும், காய்ந்த ஓலைகளும் அடிக்கடிப் பள்ளிவாசல் மேற்கூரையில் வந்து

விழும். அதனால் பள்ளிவாசலின் மேற் கூரையில் உள்ள ஓடுகளும் நொறுங்கித் தரையில் விழும். இது அடிக்கடி நடந்து கொண்டிருந்தது. அது அவர்களுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுத்தது. அடிக் கடி ஓடுகளை மாற்றுவதால் பணச் செலவும் அதிகமானது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க நினைத்தார்கள். பள்ளிவாசல் நிர்வாகிகள், ராமசாமியின் வீட்டுக்குச் சென்றார்கள்.

"ஐயா! உங்க வீட்டுத் தென்னை மரத்திலிருந்து தேங்காயும், காய்ந்த ஓலைகளும் பள்ளிவாசல் மீது அடிக்கடி விழுகிறது. அதனால் ஓடுகளெல்லாம் நொறுங்கிப் போகுது. மழை பெஞ்சா தண்ணியெல்லாம் கூட பள்ளிவாச லுக்குள் ஒழுகுது. அதனால அந்தத் தென்னை மரத்தை வெட்டிப் போட்டு டுங்க. அதுக்குண்டான செலவை நாங்க தர்றோம்" நிர்வாகிகள் ராமசாமியிடம் முறையிட்டனர்.

"சரி பாய். அப்படியே செய்கிறேன். இன்னும் இரண்டு நாளில் மரத்தை வெட்டி விடுகிறேன்."

மரத்தை வெட்ட ஒப்புக் கொண்டார் ராமசாமி. "அப்பாடா..." நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர் பள்ளி வாசல் நிர்வாகிகள்.

இரண்டு நாட்கள் கடந்தது. மரம் வெட்டப்படவில்லை. ஒரு வாரம், ஒரு மாதமாகியும் மரம் வெட்டப்படாத தால் ஆத்திரமடைந்தனர் பள்ளிவாசல் நிர்வாகிகள். ராமசாமியின் வீட்டுக்கு மீண்டும் படையெடுத்தனர்.

"ஏன் இன்னும் மரம் வெட்டப்பட வில்லை. இரண்டு நாட்களில் வெட்டி விடலாம் என்று கூறினீர்களே, ஒரு மாதமாகியும் வெட்டவில்லையே காரணம் என்ன?"

"அது வந்து பாய்..." இழுத்தார் ராம சாமி.

"என்னாச்சு சொல்லுங்க... ஏன் இன்னும் வெட்டல?"

"என் பையன் வெட்டவேண்டா முன்னு சொல்றான்..."

"யாரு... மூத்தவன் சங்கரா..."

"ஆமாங்க பாய்."

"சரிதான். நாங்க நினைச்சது சரியாத்தான் இருக்கு. கொஞ்ச நாளா அவன் போக்கே சரியில்லை. சில பசங்களோடு சேர்ந்து மதநல்லிணக் கத்தைக் கெடுக்கிறது மாதிரி பேசிட்டு நடக்கிறான்!"

பேசிக் கொண்டிருக்கும் போதே சங்கர் வீட்டிற்குள் நுழைந்தான்.

"என்ன சங்கர்! தென்னை மரத்தை வெட்ட வேண்டாமுன்னு சொல்றி யாமே! உங்க அப்பாதான் ஒத்துக் கிட்டாரே. நீ ஏன் முடியாதுன்னு சொல்றே!"

"மரத்தையெல்லாம் வெட்ட முடி யாது. உங்க வேலையைப் பாத்துட்டுப் போங்க" என்று முகத்தில் அடித்தாற் போல் சொல்லிவிட்டு வந்ததும் வரா ததுமாக வீட்டைவிட்டு வெளியேறி னான் சங்கர்.

பிரச்சனை பெரிதானது. ஊர்க் கூட்டத்தைக் கூட்டினார்கள் பள்ளி வாசல் நிர்வாகிகள். ஊரில் உள்ள முஸ்லீம்கள் அனைவரும் ஒன்று கூடினர். விஷயம் கூட்டத்தின் முன் வைக்கப்பட்டது.

"பொறுத்தது போதும். எவ்வளவு நாட்கள்தான் கஷ்டத்தையும் நஷ்டத் தையும் தாங்கிக் கொள்வது. இப்பவே நாம எல்லோருமா கூட்டமாப் போயி மரத்தை வெட்டிப் போடுவோம் வாங்க..'' கூட்டத்தில் குரல்கள் எழுந்தன."

"மரத்தை வெட்டுகிற பொறுப்பை எங்ககிட்ட கொடுங்க. நாங்க பார்த் துக்குறோம்" இளைஞர் பட்டாளம் எழுந்து நின்றது. ஆளுக்கு ஆள் எழுந்து நின்று பேசவே, கூட்டத்தில் சலசலப்பு உண்டானது.

"அமைதி... அமைதி... நாம அவசரப் பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடக் கூடாது. பொறுமையா இருக்கணும். ஊரில நாம எல்லோரும் அண்ணன் தம்பிகளாகப் பழகிட்டு வர்றோம். அந்த உறவு இன்னும் தொடரணும். ஊரில

எந்தப் பிரச்சனையும் வந்துவிடக் கூடாது..." தலைவர் கூட்டத்தை அமைதிப்படுத்தினார்.

"அப்ப... இதற்கு என்னதான் முடிவு?" கையை நீட்டி, வேட்டியை மடித்துக்கட்டி, ஆவேசமானார் கறிக் கடை தாவூத்பாய்.

"ஒன்று செய்வோம். பொட்டல் புதூரில இருக்கிற நமது "தலைமை இமாம் பகுறுதீன் ஆலிமிடம்' இந்த விஷயத்தை எடுத்துச் சொல்லி, அவரை வச்சி ராமசாமியிடம் பேசிப் பார்ப் போம். பகுறுதீன் ஆலீம் சொன்னால் அவர் நிச்சயம் கேட்பார். அதனால இப்பவே நாங்க நிர்வாகிகள் போயி அவரைச் சந்திக்கிறோம். பகுறுதீன் ஆலிம் என்ன சொல்கிறாரோ அதன் படி நடப்போம்" தலைவர் தனது கருத்தை அவையின் முன் வைத்தார்.

"அதுவும் சரிதான். பகுறுதீன் ஆலிம் நினைச்சா கண்டிப்பா நடக்கும். சண்டை சச்சரவு இல்லாம சமா தானமாப் போகப் பார்ப்போம்." முதிய வர்கள் பலர் எழுந்துநின்று குரல் கொடுக்கக் கூட்டம் அமைதியானது.

தலைமை முஸ்லிம் மதகுரு பகுறு தீன் ஆலிம் அவர்கள் ஆழ்வார்குறிச்சி அருகில் பொட்டல்புதூர் என்ற ஊரில் வசித்து வருகிறார். நெல்லை மாவட்டம் முழுவதும் நன்கு அறியப்படுபவர். சாதி, மத பேதமன்றி எல்லோரிடமும் நன்கு பழகக் கூடியவர். மதநல்லிணக்கக் கூட்டங்களில் பங்கெடுப்பவர். சுற்று வட்டார ஊர்களில் நடக்கும் எல்லா விசேஷங்களிலும் கலந்து கொள்பவர். சில பிரச்சனைகளைச் சுமூகமாகத் தீர்த்து வைப்பவர். சமூக சேவையில் ஆர்வம் உள்ளவர். அரசியல்வாதிகளிட மும், அரசு அதிகாரிகளிடமும் அவருக் குத் தனி மதிப்பு உண்டு.

பள்ளிவாசல் நிர்வாகிகள் பகுறுதீன் அலி ஆலிம் வீட்டுக்கு வந்தனர்.

* "அஸ்ஸலாமு அலைக்கும்"

* "அலைக்குமிஸ்ஸலாம்' – வாங்க உட்காருங்க. என்ன ஆழ்வார்குறிச்சி ஊரே திரண்டு வந்திருக்கு. ஏதாவது விசேஷமா?"

"ஆமா...! ஊரில் ஒரு சின்ன பிரச் சனை."

"என்ன பிரச்சனை? கல்யாணப் பிரச்சனையா? குடும்பப் பிரச் சனையா?"

"அப்படியெதுவுமில்லை."

""வேறு என்னப் பிரச்சனை?"

"நம்ம ஊர் பள்ளிவாசலோடு சேர்ந்து ராமசாமி என்பவருடைய வீடு இருக்கு. அவர் வீட்டுத் தென்னை மரத்தில இருந்து விழுகிற தேங்காயும், ஓலை மட்டையும் நம்ம பள்ளிவாசல் கூரை மீது விழுந்து ஓடெல்லாம் நொறுங்கிப் போவுது. ரொம்ப நாளா அது நடந்திட்டு இருக்கு. அப்ப அப்ப புதிய ஓடு மாற்ற வேண்டியிருக்கு. நாங்க அவரு வீட்டுக்குப் போயி விஷயத்தை எடுத்துச் சொல்லி தென்னைமரத்தை வெட்டச் சொன்னோம். அவரும் சரின்னு சொல்லிட்டாரு. ஆனா, அவரு டைய மகன் சங்கர் வெட்ட முடியா துன்னு தகராறு பண்ணுறான். அத னால ஊரே கொந்தளிச்சுப் போயிக் கிடக்கு. ஏதாவது பிரச்சனை வந்திடு மோன்னு பயமா இருக்கு. நீங்க வந்து ராமசாமியிடமும், அவர் மகன் சங்கரிடமும் பேசிப்பார்த்தா ஒரு வேளை மரத்தை வெட்டச் சம்மதிப் பார். அதுக்காகத்தான் வந்தோம்..,"

மதகுரு சிறிது நேரம் கண்ணை மூடியபடி அமைதியாக இருந்தார்.

நல்ல பதிலை எதிர்பார்த்துக் காத் திருந்தனர் பள்ளிவாசல் நிர்வாகிகள்.

"இதுதான் பிரச்சனையா! சரி ஒன்று செய்யுங்க. பேசாம பள்ளி வாசலை இடிச்சிடுங்க."

இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்தனர் பள்ளிவாசல் நிர்வாகிகள். "என்னடா! தென்னை மரத்தை வெட்டச் சொன்னா பள்ளிவாசலையே இடிக்கச்

---

* அஸ்ஸலாமு அலைக்கும் = தங்களுக்குச் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்.

* அலைக்குமிஸ்ஸலாம் = தங்களுக்கும் அப்படியே ஆகட்டும்.

சொல்றாரே!" என்று கலக்கமடைந்தனர்.

"என்ன சொல்றீங்க ஆலிம். பள்ளி வாசலை இடிக்கவா....?"

"ஆமா..! பள்ளிவாசலைத்தான் இடிக்கச் சொன்னேன். அந்தப் பள்ளி வாசல் கட்டி ஐம்பது வருடத்திற்கு மேல ஆயிடிச்சி. இன்னும் ஓடு மேஞ்ச பழைய பள்ளிவாசலாகவே இருக்கு. பக்கத்து ஊரில உள்ள பழைய பள்ளி வாசல்களெல்லாம் புதிய பள்ளிவாசல்களா மாறிடிச்சி. அதனால நீங்களும் அந்தப் பள்ளிவாசலை இடிச்சிட்டுக் கான்கிரீட் தளம் போட்டுப் புதிய பள்ளிவாசலைக் கட்டுங்க. தென்னை மரத்தை வெட்ட வேண்டாம். சரியா..."

"அதுக்குப் பணத்துக்கு நாங்க எங்க போவோம்? எங்க ஊரில உள்ளவங்கெல்லாம் கூலிவேலை செய்றவங்க. கான்கிரீட் தளம் போட நிறையப் பணம் செலவாகுமே.."

"ஊர் ஊராப் போங்க. பணத்தை வசூல் பண்ணுங்க. பள்ளிவாசல் கட்ட எல்லோரும் பணம் தருவாங்க. நானும் ஒரு கடிதம் தர்றேன். அதையும் எல்லோரிடமும் காட்டுங்க. கண்டிப்பா பள்ளிவாசல் கட்டப் பணம் கிடைச்சிடும்."

மதகுருவின் முடிவை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

பள்ளிவாசலை இடிக்கப் போகிறார்கள் என்ற செய்தி காட்டுத்தீ போல ஊர் முழுவதும் பரவியது. அது ராமசாமியின் காதிலும் விழுந்தது. இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார் ராமசாமி. உள்ளத்தில் ஒருவித பயம் உருவானது.

"ஐயோ! ஒரு தென்னைமரத்திற்காகப் பள்ளிவாசலையே இடிக்கப் போகிறார்களே. பள்ளிவாசல் இடிப்புக்கு ராமசாமிதான் காரணம் என்று ஊர் உலகம் என்னைக் குத்தம் சொல்லுமே! மரத்தை வெட்டியிருந்தா பள்ளிவாசலை இடிச்சிருக்க மாட்டாங்களே. எல்லாம் இந்த சங்கர் பயலால வந்தது. நான் இனி என்ன செய்வேன்..." என்று புலம்பினார்.


சங்கரை வரவழைத்து அதட்டினார். அறிவுரை கூறினார். அவனையும் அழைத்துக் கொண்டு ஓர் ஆட்டோவில் மதகுருவின் வீட்டுக்கு விரைந்தார்.

"ஐயா! நான்தான் ராமசாமி. என்னை மன்னிச்சிடுங்க. தென்னை மரத்தை நான் வெட்டிப் போடுகிறேன். தயவுசெய்து பள்ளிவாசலை மட்டும் இடிக்காதீங்க. எங்க பையன் தெரியாமச் சொல்லிப்புட்டான். ஊர்க்காரங்க கிட்டச் சொல்லுங்க. ராமசாமி தென்னை மரத்தை வெட்ட ஒத்துக்கிட்டாரு. அதனால பள்ளிவாசலை இடிக்க வேண்டாமுன்னு. ப்ளீஸ்..." அழாக் குறையாகச் சொன்னார் ராமசாமி. இதைக் கேட்டு மதகுரு புன்முறுவல் பூத்தார்.

"ஐயா ராமசாமி! கவலைப் படாதீங்க. பள்ளிவாசலை நான்தான் இடிக்கச் சொன்னேன். தென்னை மரத்தை வெட்டுறதில எனக்குக் கொஞ்சமும்கூட விருப்பம் இல்லை. மரங்களை வெட்டக் கூடாதுன்னு கொள்கை உள்ளவன் நான். பூமியில வளர்ந்து கிடக்கிற ஒரு புல்லைக்கூட புடுங்கக் கூடாதுன்னு நினைப்பவன். மரங்களை வளர்ப்பதற்குப் பல உதவிகளை நான் செய்து வருகிறேன். மரம் நடும் பல விழாக்களில் கலந்து கொள்கிறேன். அப்படிப்பட்ட எனக்கு மரத்தை வெட்ட எப்படி மனசு வரும்?

"ஒரு மரத்தை நட்டு வளர்ப்பது எவ்வளவு கஷ்டமுன்னு எனக்குத் தெரியும். அதனால மரத்தை வெட்ட வேண்டாம். அந்தத் தென்னை மரம் அப்படியே நிக்கட்டும். அவர்கள் புதிய பள்ளிவாசலைக் கட்டுவாங்க, உங்க மேல யாருக்கும் கோபம் இல்லை. அதனால தைரியமா இருங்க. சந்தோஷமாப் போயிட்டு வாங்க.. வீட்டுல காலி இடம் ஏதாவது இருந்தா அதிலயும் ரெண்டு மூனு தென்னை மரத்தை நட்டு வளர்த்துங்க..."

மதகுருவின் பேச்சு அவருக்கு ஆறுதலை கொடுத்தது. அது ராமசாமியின் பயத்தைப் போக்கியதோடு மதகுருவின்



மீது பாசத்தையும் உருவாக்கியது. சட்டென எழுந்தார். சட்டைப்பையில் கையை விட்டார். அதிலிருந்து ஐந்நூறு ரூபாய் நோட்டு ஒன்றினை எடுத்து மகனிடம் கொடுத்து, அதை மதகுருவிடம் கொடுக்கச் சொன்னார்.

"ஐயா! புதிய பள்ளிவாசல் கட்டுவதற்கு எங்களால் ஆன சிறிய நன்கொடை. வாங்கி கொள்ளுங்கள்."

கவிஞர் புவியரசுவின் 89–ஆவது ஆண்டுப் பிறந்த தினத்தை, கோவை காந்தியடிகள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலுள்ள ‘காந்தியடிகள் தமிழ்ப் பண்பாட்டு மையம்’ 15.9.2019 அன்று சிறப்பாகக் கொண்டாடியது.

கவியரசர் சிற்பி அவர்கள் தலைமை தாங்கிப் புவியரசுவின் இலக்கிய முற்போக்குச் சிந்தனைகளையும், அவருடைய தமிழரசுக் கழக அரசியல் வாழ்க்கையையும் தொகுத்துப் பேசினார்.

புவியரசுவின் அபிமானிகள் அவருக்குப் பொன்னாடை அணிவித்தும், பூச்செண்டுகள் கொடுத்தும் பாராட்டிக் கவிஞரிடம் வாழ்த்துப் பெற்றார்கள்.

வாழ்த்துரை வழங்கிய கவிஞர் பெ. சிதம்பரநாதன் அவர்கள், புவியரசுவிற்கும், ‘சிலம்புச் செல்வர்’ ம.பொ.சி.–க்கும்



கவிஞர் புவியரசுவின் 89-ஆவது பிறந்த தினவிழா!

இருந்த தொடர்பை, தோழமையை, தொண்டிமையை எடுத்துக் கூறினார்.

கவிஞர் கனல் மைந்தன் அவர்களும் மற்றும் பலரும் வாழ்த்திப் பேசினர்.

ஏற்புரையைக் கவிஞர் புவியரசு முதல் உரையாக வழங்கி விட்டார். வரவேற்புரையை காந்தியடிகள் பள்ளித் தாளாளர் திரு. கே.ஏ. சுப்பிரமணியன் வழங்க, நன்றியுரையைப் பள்ளிச் செயலாளர் திரு. ஆர். சண்முகசுந்தரம் வழங்கினார்.

விழா நிறைவில் அனைவருக்கும் மதிய விருந்து வழங்கப் பட்டது.

– ந.நி.



'நினைவின் பயணம்' நூல் வெளியீடு!



கோவை விஜயா பதிப்பகம் முனைவர் டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன் அவர்களின் 'நினைவின் பயணம்' நூலை சென்ற ஆகஸ்ட் 31–ஆம் தேதி கோவையில் வெளியிட்டுள்ளது.

அந்த நூல், முனைவர் டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன் அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூல். டாக்டர் அவர்கள், தொழில் ரீதியில் டாக்டர். அதேசமயம் தமிழ் இலக்கியத் தளத்தில் அவர் ஒரு ஆராய்ச்சியாளர். அதனால் முனைவர்.

இந்நூலுக்கு முன்பு, "பாரதி என்றொரு மானுடன்" என்ற பாரதி பற்றிய ஆராய்ச்சி நூலை பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவராகத் தன் 80–ஆவது வயதில் பதிவு செய்து முனைவர் பட்டம் பெற்றவர் டாக்டர். பாரதியைப் பற்றிய சிறு தகவல்களிலிருந்து, பெரும் சம்பவங்கள் வரை அந்நூலில் அவர் தொகுத்துள்ளார்.

இந்தப் பின்புலத்தில் 'நினைவின் பயணம்' என்ற தன் வாழ்க்கையின் அனுபவங்கள் பற்றி எழுதிய கட்டுரைகளை, விஜயா பதிப்பகம் வெளியிட்டது. இந்நூலினை வெளியிட்டுச் சிறப்புரையாற்றிய 'சொல்லின் செல்வர்' திரு. சுகிசிவம் மிகுந்த ஆழமான திறனாய்வைச் செய்தார்.

டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதனின் இரண்டு மகன்களும் தந்தையின் கட்டுரைகளைப் புத்தகமாக்கி விழாக் கொண்டாடியதை திரு. சுகிசிவம் வியந்து பாராட்டினார்.

நூலின் முதல் படிகளைப் பெற்று வெளியிட்ட 'ஓம் சக்தி' இணையாசிரியர் திரு. பெ. சிதம்பரநாதன் அவர்களும், கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா அவர்களும் வாழ்த்துரை வழங்கினர்.

ஏற்புரை வழங்கிய டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன் அவர்கள், தமது அனுபவங்களைத் தொகுத்த விஜயா பதிப்பகத்திற்கு நன்றி கூறினார். வரவேற்புரை வழங்கிய விஜயா பதிப்பக உரிமையாளர் திரு. மு. வேலாயுதம், டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன் அவர்களின் இந்த நூலினை இளைய தலைமுறை படிக்க வேண்டும் என்றார்.


இவ்விழாவில், சென்னை திருமதி. வாசுகி கண்ணப்பன் அவர்கள் 'கலைமாமணி' விருது பெற்றதற்காக திரு. சுகிசிவம் அவர்கள் அவரைப் பாராட்டிச் சிறப்பித்தார்.


கோவை மாநகரத்தின் அறிவுஜீவிகளாகிய ஆடிட்டர்கள், ஆர்க்கிடெக்டுகள், டாக்டர்கள், பேராசிரியர்கள், இலக்கியவாதிகள், தொழிலதிபர்கள் எனப் பல விதமான உயர் தரப்பினர்கள் கலந்து கொண்டது விழாவின் பெருமையைச் சித்தரித்தது.

– ந.நி.

சிவாலயம் மோகனின்

‘பெரிய புராணம்’





சிவாலயம் மோகன் வயதால் முதியவரல்ல. அவரது சாதனைகளைக் கணக்கிட்டால், அவர் வணக்கத்திற்குரியவர். பழஞ்சுவடிகளாக இருந்த நமது சைவ சமயப் படைப்புகளைப் புதிய தாளில், புதிய மெருகோடு வளரும் தலைமுறைக்குத் தொடர்ந்து வழங்குவதில் இவரோடு யாரும் போட்டிபோட முடியாது.

திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு வேதாந்த உரை வழங்கியவர் கோ. வடிவேலு செட்டியார். அந்த உரை கிடைப்பதற்கு அரிதாகிவிட்டது.

கோ. வடிவேலு செட்டியாரின் அரிய உரையை, தெளிபொருள் விளக்கத்தோடும், குறிப்புகளோடும் சிவலாயம் மோகன் 2015–இல் இரு தொகுதிகளாக வெளியிட்டுத் தமிழ் கூறும் நல்லுலகத்தை ஆச்சரியப்படுத்தினார்.


இதே பரிமேலழகர் உரைக்குச் சித்தாந்தப் பேராசிரியர் கிருஷ்ணாம்பேட்டை கி. குப்புசாமி முதலியார் அறத்துப்பால், பொருட்பால் இரண்டிற்கும் தந்துள்ள விளக்க உரையை இரண்டு பாகங்களாகப் பதிப்பித்து 2017–இல் வழங்கினார்.


களத்தூர் வேதகிரி முதலியாரின்

திருக்குறள் உரையைச் சிறப்பாகப் பதிப்பித்து 2018–இல் வெளியிட்டுள்ளார்.

இதேபோல, 2019–இல் தெய்வச் சேக்கிழாரின் பெரியபுராணத்திற்கு திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளின் உரையை நான்கு பகுதிகளாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். சேக்கிழாரின் 4286 பாடல்களுக்கும் இந்த உரைகள் விளக்கம் தருகின்றன.

இத்தகைய அரிய உரைகளை நான்கு தொகுதிகளாக வெளியிட்டுத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு வழங்கியுள்ள சிவாலயம் ஜெ. மோகன் அவர்களை என்றைக்கும் தமிழ் நன்றியோடு போற்றும் என்பதில் சந்தேகமில்லை.





தமிழுக்குத் தொண்டு செய்வோர் காலத்தை வென்று தமிழோடு வாழ்வர். தமிழ் உள்ள வரை அவர்கள் வாழும் நாட்களும் நீளும். கோளும், ஊழும் அவர்களுக்கு அடிபணிந்து நிற்கும்.

இந்த நுண் நோக்கத்தில்தான் தமிழோடு தன்னை வாழ்வித்துக் கொள்வதற்குச் சிவாலயம் மோகன் இச்செந்தமிழ்ப் பணியைச் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் தேக்கி வைத்து விந்தை புரிந்து வருகிறார். வாழ்க அவர் பணி!

பெரியபுராணம்

உரையாசிரியர் : ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள்,
பதிப்பாசிரியர் : சிவாலயம் ஜெ. மோகன்,
சிவாலயம், ப.எண். 25–ஏ,
புதிய எண். 14/7, ஜி.எஸ். பிளாட்ஸ், 2–ஆவது தெரு,
கிழக்கு அபிராமபுரம், மயிலாப்பூர்,
சென்னை – 600 004.
தொலைபேசி : 044 – 24987945. பக் : 4162.
விலை : ரூ. 3800/– (4 தொகுதிகளும் சேர்த்து).

– ந.நி.

திலகவதியார் திருவருள் ஆதீனத்தில் 6–ஆம் ஆண்டு திருமுறை மாநாடு!



'சுந்தரர் தேவாரம் ஆய்வுரைகள்' நூல் வெளியீடு

புதுக்கோட்டை 'திலகவதியார் திருவருள் ஆதீனத்தின்' சார்பில் கடந்த ஜூலை 14–ஆம் தேதி 6–ஆம் ஆண்டு திருமுறை மாநாடு சீரும், சிறப்புமாக நடைபெற்றது.

தொழிலதிபர் திரு. என். மணி வண்ணன் முன்னிலையில், திலக வதியார் திருவருள் ஆதீனகர்த்தர் தவத்திரு தயானந்த சந்திரசேகர சுவாமி கள் அறிமுக உரை நிகழ்த்தினார்.

ஆதீனத்தின் சார்பில் பதிப்பித்த 'சுந்தரர் தேவாரம் ஆய்வுரைகள்' நூலை தவத்திரு ஊரன் அடிகள் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கி னார். தமிழக முன்னாள் அமைச்சர் திருச்சி என். நல்லுசாமி தமிழ் மொழி யின் சிறப்பைப் பற்றி நினைவு கூர்ந்தார். சுந்தரர் தேவாரம் பற்றி பேரா. சொ.சொ.மீ. சுந்தரம் ஆய் வுரை நிகழ்த்தினார்.

மதியம் இரண்டாம் அமர்வில் சீர் வளர் அழகிய நிரம்பிய ஞானதேசிக சுவாமிகள் தலைமையில் முனைவர் சண்முக செல்வகணபதி, முனைவர் மா. சிதம்பரம், முனைவர் சொ. சேது பதி ஆகியோர் சுந்தரர் தேவாரத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறினர்.

தொடர்ந்து பேரா. அய்க்கண் அவர்களுக்கு, 'வாழ்நாள் சாதனை யாளர்' விருதும், நெல்லை ஆ. சுப்பிர மணியன் அவர்களுக்கு 'இசைவாணர்' விருதுடன் 'வாழ்நாள் சாதனையாளர்' விருதும் வழங்கப்பட்டன. இதேபோல் இரா. சம்பத்குமார் அவர்களுக்கு, 'திருத்தொண்டுப் பேரறிஞர்' விருதும், முனைவர் சி. சேதுராமன் அவர் களுக்கு 'எழுத்துச் செம்மல்' விருதும் வழங்கப்பட்டன.

விழாவில் சுந்தரர் தேவாரம் – திருப்பாண்டிக் கொடுமுடித் திருப் பதிகம் ஒப்பித்தல், பாடுதல் பிரிவு களில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற 6, 7–ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்க்குத் தங்கக் காசு, வெள்ளிக் காசுகளுடன் சான்றிதழ் களும் நினைவுப் பரிசுகளும் வழங்கப் பட்டன.

– ந.நி.



‘தினமணி’ பத்திரிகை 86–ஆம் ஆண்டில் சென்ற செப்டம்பர் 11–ஆம் தேதி அடியெடுத்து வைத்துள்ளது. நாம் சுதந்திரம் பெற்றே 72 ஆண்டுகள்தான் முடிந்துள்ளன. சுதந்திரத்திற்கு 14 ஆண்டுகளுக்கு முன்பு ‘தினமணி’ தன் பயணத்தைத் தொடங்கியது.

அன்றைக்கு பாரதியார் பணி செய்த “சுதேசமித்திரன்” பத்திரிகை தமிழ்நாட்டில் வெளிவந்து கொண்டிருந்தது. ‘தினமணி’ பத்திரிகை அதிபர் கோயங்கா அவர்கள், தேசியக் கண்ணோட்டமுள்ள மிகச்சிறந்த பத்திரிகையாளராவார்.

இந்தியாவின் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்த ‘தினமணி’ பாரதியார் மறைந்த 13–ஆவது ஆண்டு நினைவு நாளில் தொடங்கப்பட்டது. அரையணா விலையில் 8 பக்கங்களுடன் வெளிவந்த ‘தினமணி’, இன்றைக்கு ரூ. 7 விலையில் 18 பக்கங்களோடு வெளிவந்து கொண்டிருக்கிறது.

‘தினமணி’ முதல் தலையங்கமே, தமிழ்நாட்டு மக்களைத் தமிழர்களாக மட்டுமே பார்த்தது. அவர்களை மத ரீதியில் இந்து, முஸ்லிம், கிறிஸ்துவர் என்று பேதம் பாராட்டவில்லை.

‘தினமணி’யை முதுகெலும்புள்ள பத்திரிகையாக நிமிர்ந்து நடமாடவிட்ட நெஞ்சுரமுள்ள அறிவுஜீவிகள் நாம் நினைவுகூரத்தக்கவர்கள். ‘தினமணி’ ஆசிரியர்கள் திரு. டி.எஸ். சொக்கலிங்கம், திரு. ஏ.என். சிவராமன், திரு. ஐராவதம் மகாதேவன், திரு. கஸ்தூரி ரங்கன், ராம. திரு. சம்பந்தம் இவர்களை மறக்க முடியாது.

வாழையடி வாழை என வந்த இந்த வழியில் இன்றைய ஆசிரியர் திரு. கி. வைத்தியநாதன், இதன் கம்பீரம் குறையாமல் இன்றைக்கும் இப்பத்திரிகையை நிர்வகித்து வருவது தமிழ் வாசகர்களுக்குப் பெருமையாகும். அவர் கூறியபடி நாட்டுப்பற்று, சமூக நல்லிணக்கம், ஜனநாயக மரபு, தமிழ்த்தொண்டு, சமயம் கடந்த சமரச சன்மார்க்கம் இவை ஐந்தும்தான் ஐம்பெரும் காப்பியக் கொள்கைகளாக ‘தினமணி’க்கு மகத்தான ஒளி வட்டத்தை உண்டாக்கியிருக்கின்றன.

வாழ்க ‘தினமணி!’

– ந.நி.





மாற்றமென்ன கண்டோம்?



இருட்டினில் இருக்கின்றோம், இரவினில் அலைகின்றோம்
இருப்பதை விட்டுவிட்டு இல்லாததைத் தேடுகின்றோம்!

தமிழர்கள் ஒற்றுமையாய் எங்கேதான் வாழ்கின்றார்?
தான்தான் தலைவனெனத் தனிக்குழுவாய் கூடுகின்றார்!

குழிபறித்து வாழ்கின்ற குணமதைக் கொண்டுள்ளார்
குலத்தின் இலக்கணமே அதுவாக இருந்திடுமோ?


அங்கொன்றும் இங்கொன்றும் இடம்போல் பேசுகின்றார்
அவரவர் காரியமதை அடைந்திடவே அலைகின்றார்!

காசுதனைப் பெற்றிடவே கையேந்தி நிற்கின்றார்
விருதுகளைப் பிச்சையாய் கேட்டுத்தான் பெறுகின்றார்!

தமிழர்கள் உயர்ந்திடவே தரணியில் உழைப்பதாக
தமிழ்மேல் சத்தியமும் பொய்யாகச் சொல்கின்றார்
இப்படியொரு பிழைப்பினை ஏனிங்குப் பிழைக்கின்றார்?

இன்னுமா மாறவில்லை, இனியேனும் மாறிடுவோம்
தமிழ்வளர தமிழன்வளர தன்னலம் ஒழித்துவிட்டு
தளராது உழைத்திடுவோம் பொதுநலம் பேணிடுவோம்!

எடுப்பவராய் இல்லாது கொடுப்பவராய் மாறிடுவோம்
பெரியார்போல் அண்ணாபோல் காமராசர் கக்கன்போல்
வ.உ.சி., உ.வே.சா., ஜீவாபோல் வாழ்ந்திடுவோம்!





கவிஞர்
கா.ப.கலையரசன்

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.9.2019

Regd.No.CB/016/2018-20

OM SAKTHI - OCTOBER - 2019